# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 18 வெள்ளிக்கிழமை (02.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 218


# வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியை வலுப்படுத்த அரசாங்கம் முனைப்பு

## வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் சுரேஷ்



கொழும்பு, ஜூலை 02

**வடக்கிலும், கிழக்கிலும் இராணுவ ஆட்சியை வலுப்படுத்துவதற்கான முனைப்புகள் அதிகரித்து வருகின்றன. இராணுவ ஆட்சியை வலுப்படுத்துவதன் மூலம் தமிழின அழிப்பை வேகப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தமது உரையில் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமான வடக்குக் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி புலிகளின் இராணுவ நடவடிக்கைகளைக் காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டது.

(21ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் அழைப்பை ஏற்று கூட்டமைப்புக் குழு அங்கு விஜயம்

கொழும்பு,ஜூலை2

இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அறுவர் அடங்கிய குழு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இந்தியா செல்கின்றது.

கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்றிரவு உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் நாளை மறுதினம் இந்தியா செல்லவுள்ள கூட்டமைப்பின் குழுவுக்கு இரா.சம்பந்தன் தலைமை வகிப்பார். அவருடன் நானும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், அ.விநாயகமூர்த்தி, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் செல்கின்றோம்.

புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், முக்கிய அமைச்சர்கள் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடுவோம்.

5,6,7ஆம் திகதிகளில் இச் சந்திப்புக்கள் இடம்பெறும்.

தமிழ்மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாகவே முக்கியமாகப் பேச்சுக்கள் இடம் பெறும்

(24ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகளின் கூட்டம் இன்று

கொழும்பு, ஜூலை 02

தமிழ்க் கட்சிகளுக்கிடையில் நேற்று இடம்பெறவிருந்த இரண்டாவது பேச்சு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்

(24ஆம் பக்கம் பார்க்க)

# புதிய யாழ். அரச அதிபரின் நியமனம் ரத்து; காத்திருந்த அதிகாரிகள் ஆச்சரியம், ஏமாற்றம்

## பொது நிர்வாக அமைச்சின் குளறுபடி குறித்து விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி இமெல்டா சுகுமார் நேற்று பதவியேற்கவில்லை.

அவரை வரவேற்கக் காத்திருந்த யாழ். செயலக உயர் அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

யாழ். மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய கே. கணேஷ் நேற்று முன்தினம் (ஜூன் மாதம் 30 திகதி) முதல் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரது இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி இமெல்டா சுகுமார் நியமிக்கப் பட்டுள்ளதாக பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்றுக்காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட அரச அதிப ராக திருமதி இமெல்டா சுகுமார் பதவியேற்க இருந்தார்.

அவரது பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவும், அவரை வரவேற்பதற்காகவும் யாழ். செயலக உயர் அதிகாரிகள் அரச அதிபரின் அலுவலக வாயிலில் காத்து நின்றனர்.

இருப்பினும் திருமதி இமெல்டா சுகுமாரின் பதவியேற்பு திடீரென இரத்தாகியதால் அதிகாரிகள் ஆச்சரிய உணர்வுடனும்

(24ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக் குற்றமிழைத்தோருக்கு எதிராக இலங்கை தண்டனை வழங்க வேண்டும்

## ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் வலியுறுத்துகிறார்



கொழும்பு,ஜூலை 2

''இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை வழங்க அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்''

- இவ்வாறு ஐ.நா. செயலாளர் நயகம் பான் கீ - மூன் வலியுறுத்தி உள்ளார்.

இலங்கை தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் நிபுணர் குழு தொடர்பாக 'ரொய்ட்டர்' செய்திச் சேவைக்கு பேட்டியளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசு நிபுணர் குழு நியமனத்துக்கு எதிராக செயற்படவோ, ஆத்திரமடையவோ எந்தவித காரணமும் கிடையாது. மனித உரிமைகள் மீதான அர்ப்பணிப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(24ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் கட்சிகளுக்கிடையான ஒற்றுமை மக்கள் உரிமை சார்ந்து அமைய வேண்டும்

## கூட்டமைப்பின் பேச்சாளர் கருத்து

கொழும்பு,ஜூலை2

தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். அந்த ஒற்றுமை தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாகவும் உரிமை சார்ந்ததாகவும் அமைய வேண்டும். இந்த ஒற்றுமை சுயநலப் போக்குடன் ஏற்பட்டால் மக்களுக்கு நன்மை கிடைக்காது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு இயங்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

# விமல் வீரவன்ஸவின் கருத்தினால் சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சை

கொழும்பு, ஜூலை 02

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ ஐ.நா. அலுவலகம் குறித்து தெரிவித்த கருத்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இலங்கையின் யுத்தக்குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்துள்ள மூவர் குழுவைக்

(24ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கின் வசந்தம் ஊடாக மீண்டும் ஒரு போராட்டத்துக்கு வித்து விதைப்பு!

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 02

வடக்கின் வசந்தத்தின் ஊடாக வடக்கில் மீண்டும் ஒரு போராட்டத்துக்கான வித்துகளை அரசு விதைத்துக்கொண்டு வருகிறது என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. விஜித ஹேரத் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு உடன்பட்டு வெறுமையான வரவு-செலவுத் திட்டம் ஒன்றை அரசு இப்போது சமர்ப்பித்துள்ளது. இதன்மூலம் மக்களின் ஆணை எட்டி உதைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் விதித்திருக்கும் நிபந்தனைகள் அரசில் உள்ள அரசியல்வாதிகளுக்கு விளங்குவதில்லை. அவர்கள் நடைப்பிணம்போல் உள்ளனர்.

இன்று நடைமுறையில் உள்ள பணத்தின் பெறுமதி, சனத்தொகைப் பெருக்கம், பொருளாதார நிலைமை ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால், கடந்த வருடத்தைவிட இந்த வருடம் வேலைத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அரசு கூறுகின்றது.

2 ஆயிரம் கிலோ மீற்றர் பாதையைச் செப்பனிட 2 ஆயிரம் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என்று வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை இதற்குப் போதுமா? இது இந்நாட்டு மக்களையும், சர்வதேச நாணய நிதியத்தையும் ஏமாற்றும் செயல்.

இது ஒரு வரவு-செலவுத் திட்டம் அல்ல என்று அரசில் உள்ள அமைச்சர்களே கூறுகின்றனர். இதில் புதிதாக ஒன்றுமில்லை. அரசின் முடியாமை இதில் தெரிகிறது. இந்த நாடே இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசு 'வடக்கின் வசந்தம்' என்ற ஏமாற்று நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக மீண்டும் வடக்கில் போராட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான விதைகளையே அரசு விதைத்துக் கொண்டு வருகின்றது. - என்றார். (ஒ-சி)

## திறந்த பல்கலையில் மீட்டல் நாள் பாடசாலை

பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான மீட்டல் நாள் பாடசாலைகள் தொடரில் நாளை சனிக்கிழமை கல்வி முகாமைத்துவம்/ கலைத்திட்டம் மற்றும் அளவீடும், மதிப்பீடும் ஆகிய பாடங்களும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சிறுவர் உரிமைகள் மற்றும் கல்வித் தொழிநுட்பம் ஆகிய பாடங்களும் நடைபெறும்.

இந்நாள் பாடசாலைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-1)

## பண்டிதமணியின் நினைவு தின நிகழ்வு

பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவு தின நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தே.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் பண்டிதமணியின் ஆன்மீக வாழ்வு என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (ஒ-1-131)

# நாடாளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரம் கேலிக்கூத்தாக்கிவிட்டது என்கிறது ஜே.வி.பி

## மத்திய வங்கியின் அறிக்கையின் சுருக்கமே பட்ஜட்டாம்



கொழும்பு, ஜூலை 02

வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்ததன் மூலம் நாடாளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரம் கேலிக்கூத்தாக்கி விட்டது. மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின் சுருக்கமே இந்த வரவு - செலவுத் திட்டம் என ஜே.வி.பி. நேற்றுக் குற்றஞ்சாட்டியது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பெலவத்தயிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. கட்சியின் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க எம்.பி. அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து விட்டது. பொதுத் தேர்தலும் முடிவடைந்து விட்டது. 30வருட கால யுத்தமும் முடிவடைந்துவிட்டது. இந்த நிலையில் தமக்கு நிவாரணம் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஜனாதிபதி, தேர்தல் மேடைகளில் அறிவித்த 2,500 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும் என அரச ஊழியர்கள் எதிர்பார்த்தனர். வரவு - செலவுத் திட்டத்தில் இந்த எதிர்பார்ப்புகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

2009 நவம்பர் 11ஆம் திகதி ஜனாதிபதி, தேர்தல் பிரசார மேடையில் அரச ஊழியர்களுக்கு நவம்பர் முதல் 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் ஜனவரி மாத சம்பளத்துடன் நிலுவையும் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார். அதுமட்டுமல்ல, ஜனவரி முதல் 17,174 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கப்படும் என்றும், அரச சேவையில் தற் காலிகமாகக் கடமையாற்றும் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளக்கூடிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தில் இந்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தால் உண்மைகளை ஜீரணிக்க முடியாமல் தடுமாறவேண்டி ஏற்படும் என்ற காரணத்தாலேயே உக்ரேன் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டார்.

**மக்களின் நம்பிக்கை**

நாட்டின் ஜனாதிபதி உண்மையே பேசுவார் உண்மையைத் தவிர எதுவுமே பேசமாட்டார் என்றே மக்கள் நம்புவர். ஆனால் எமது ஜனாதிபதிக்கு இது ஒன்றும் புதிதல்ல.

வழமையாக வரவு - செலவுத் திட்டம் இரண்டு பகுதிகளாக முன்வைக்கப்படும். முதல் பகுதியில் நிதி அமைச்சர் பொருளாதார முன்னேற்றம் குறித்து புள்ளி விவரங்களை முன்வைப்பார். இரண்டாம் பகுதியிலேயே முக்கியமான விடயங்கள் இடம்பெறும். வரி அறவிடுதல் உட்பட துண்டு விழும் தொகையை சரிக்கட்டுவ தற்கான திட்டங்கள், சம்பள அதிகரிப்பு, நிவாரணம் வழங்கல் போன்ற விடயங்கள் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஆனால் இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் ஒரே பகுதியாகவே முன்வைக்கப்பட்டது. நாங்கள் இரண்டாம் பகுதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது பதில் நிதி அமைச்சர் வரவு - செலவுத் திட்ட உரையை முடித்துவிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே சர்வதேச நாணய நிதியம் வரவு - செலவுத் திட்டம் சிறப்பானது என புகழ்ந்து அறிக்கை வெளியிட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே சர்வதேச நாணய நிதியத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு விட்டது. இதனால்தான் சர்வதேச நாணய நிதியம் அன்றைய தினமே இரண்டாம் கட்டக்கடனுதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு வழங்கப்படாததை எதிர்த்து ஜே.வி.பி. நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. - இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-சி)

# யாழ்.பொது நுலகத் திறப்பு விழா நினைவுக்கல் ஏழு வருடங்களின் பின் வைக்க ஏற்பாடு



யாழ்ப்பாணம்,ஜூலை 2

யாழ்.பொது நுலகம் மீளப்புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டதற்கான நினைவுக்கல் ஏழு வருடங்களின் பின்னர் தற்பொது அங்கு வைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. 1981ஆம் ஆண்டு சிங்களக் குண்டரின் வெறியாட்டத்திற்கு இரையான யாழ். பொதுசன நுலகம் பெரும் சிரமத்திற்கு மத்தியில் புனரமைக்கப்பட்டு கடந்த 2003 ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட பொது நுலகம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரியினால் அப்போது திறந்துவைக்கப்பட்டது.

நினைவுக்கல்லில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன், மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் இ.இராமலிங்கம் மற்றும் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களின் பெயர்களுடன் பொது நுலகத்தை திறந்து வைத்த வீ. ஆனந்தசங்கரியின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. நாட்டின் சுழ்நிலை காரணமாக வைக்கப்படாதிருந்த நினைவுக்கல் தற்போது அங்கு வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-16)

## கிளிநொச்சி தரம் ஐந்து மாணவருக்கு 3 நிலையங்களில் பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி, ஜூலை 2

'இளைஞர் நாளை' அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இன்று பயிற்சிப்பட்டறை 3 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி ம.வி, கிளிநொச்சி இந்து, முழங்காவில் ம.வி ஆகிய மூன்று இடங்களிலும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இந்தப் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

மாணவர்களுக்கு கைஏடுகள் வழங்கப் படவிருக்கின்றன. கொழும்பு வளவாளர்கள் இதில் பங்குபற்றுவர் என கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா தெரிவித்தார்.

மாணவர்களையும், வகுப்பு ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-1-405)

**மில்லேனியம் றெஷ்ரோரன்ற் அன்ட் கெஸ்ற் ஹவுஸ்**

சகல விதமான இந்திய, சைனிஸ், யாழ்ப்பாண உணவுடன் சிற்றுண்டியுடன் ரீ, ஐஸ்கிறீம், குளிர்பானங்களை (Hot Drinks தவிர்ந்த) உண்டு மகிழ்ந்திட ஒரே இடம். அத்துடன் சகல வசதிகளும் கொண்ட குளிரூட்டப்பட்ட 24 அறைகளும் உண்டு.

76/60, இராமநாதன் வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.இல: 021222 5876, 077 6016310

(100175)

**தேவை**

பிரபல்யமான றெஷ்ரோரன்ற் ஒன்றுக்கு ஆண், பெண் சிட்டை எழுதுநர், பாதுகாவலர், Room Boy மற்றும் பணியாளர்கள் தேவை. ஆங்கிலம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. இன்று (02.07.2010) காலை 9 மணிக்கு நேரில் சந்திக்கவும்.

தொடர்புகளுக்கு: 76/60, இராமநாதன் வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 5876, 077 6016310

(100176)

## பிரிட்டனில் பொதுச்சொத்து மோசடியில் ஈடுபட்டதாக இலங்கைத் தமிழர்கள் 7 பேருக்குச் சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூலை 02

பிரிட்டனில் பொதுச் சொத்து மோசடியில் ஈடுபட்டு வந்தனர் என்று கூறப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இலங்கையர்கள் 7பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் 1993ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் அரசைத் திட்டமிட்டு ஏமாற்றி வந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொய்யான தகவல்களை வழங்கி வங்கிகளில் வீடுகளை அடமானத்துக்கு வைக்க விண்ணப்பித்தல், வாடகைக் குடியிருப்பாளர் என்கிற பெயரில் உறவினர்களையே அந்த வீடுகளில் குடியிருத்துதல், அரசினால் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நன்மைகளை ஒன்றும் விடாமல் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இக்குடும்பத்தைச் சேர்ந்த எண்மருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எண்மரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். ஏழு பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எட்டாவது நபருக்கான தண்டனை அடுத்த மாதம் வழங்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிறேம்குமார் பத்மநாதன்(வயது - 46) என்பவருக்கு 6 மாத கால சிறைத் தண்டனையும், அவருடைய சகோதரர் சிவகுமார் பத்மநாதன் (வயது - 43) என்பவருக்கு 15 மாத சிறைத்தண்டனையும், நல்லையா கௌரிதாஸ் (வயது - 43) என்பவருக்கு 15 மாத சிறைத்தண்டனையும் அவரின் மனைவி சாமினி கௌரிதாஸ் (வயது 38) என்பவருக்கு 6 மாத சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல், சின்னையா பத்மநாதன் (வயது - 78) என்பவருக்கு அவரின் நலக்குறைவைக் கருத்தில் கொண்டு ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிற்றம்பலம் சௌந்தரஶ்ரீதரன் என்பவருக்கு ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 மாத சிறைத்தண்டனையும், பிறேம்குமாரின் மனைவி கலைவாணி பிறேம்குமார் (வயது - 40) என்பவருக்கு ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத் தண்டனையுடன் 150 மணித்தியால கட்டாய சமூக சேவையும் தண்டனைகளாக விதிக்கப்பட்டுள்ளன. இவர்களால் மோசடி செய்யப்பட்டிருக்கும் ஒட்டுமொத்த பணத்தையும் மீளப் பெறும் நடவடிக் கையில் பிரிட்டிஷ் அரசு ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது. (அ-சி)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இந்தப் 'பூட்டு' எப்படி அவிழும்...?

இலங்கையில் - வன்னியில் - நடந்து முடிந்த போரின் போது நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் விவகாரத்தில் -

தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நிபுணர் குழு ஒன்றை நியமித்திருப்பது -

எமது நாட்டு அரசாங்கத்துக்கு, அதன் மந்திரிப் பிரதானிகளுக்கு பெரும் கடுப்பை ஏற்படுத்தியிருப்பது பழைய சங்கதி.

நிபுணர் குழுவை இலங்கை வருவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்றும், உள்நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளைக் குழப்புவதே ஐ.நா. நிபுணர் குழுவின் நோக்கம் என்றும் அதற்குப் பட்டங்கட்டி ஓய்ந்துவிட்டார் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.-

அதற்குப் பக்கப்பாட்டுப் பாடுபவராக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, 192 நாடுகள் அங்கம் வகிக்கும் பெருமன்றமான ஐ.நா.சபையை அரசாங்கம் பொருட்படுத்தப்போவதில்லை என்றும் வேறுவகைகளில் நையாண்டி செய்யும் வகையிலும் கருத்துக்கள் வெளியிட்டு வந்தார்.

அவற்றுக்கு மேலதிகமாக -

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவினர், பான் கீ-மூனுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவை ஆட்சேபித்து கொழும்பில் உள்ள ஐக்கியநாடுகள் சபை அலுவலகத்தின் முன்னால் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

தமது கட்சியின் ஆர்ப்பாட்டத்தை ஒட்டி, ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய ஹம்மன்பில, ஐ.நா சபைச் செயலாளரால் நிபுணர் குழு நியமிக்கப்பட்டதற்கு கொடுத்த வியாக்கியானம் அமெரிக்காவையும் பிரிட்டனையும் கிண்டல் செய்வதாக அமைந்திருந்தது.

உயர்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் கூட ஒன்பது வருடங்களாக தலிபான்களை ஒழிக்கமுடியாத தமது கையாலாகத்தனத்தையும், மூன்று ஆண்டுகளில் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை எமது நாட்டு அரசு ஒழித்த வல்லமை மற்றும் சாமர்த்தியத்தையும் பொறுத்துக்கொள்ள முடியாமல், அந்த நாடுகளே இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்த விசேட நிபுணர் குழு என்ற சதிவலையைப் பின்னி செயலாளர் நாயகத்தை நிபுணர் குழுவை நியமிக்கத் தூண்டி இருப்பதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளார் அவர். அதுமட்டுமன்றி -

உலகின் பல்வேறு நாடுகளில் ஐக்கிய-நாடுகள் சபையும் அதன் அதிகாரிகளும் ஏனைய நாடுகளில் தாம் நினைத்ததைச் சாதித்தது போன்று இலங்கையில் சாதிக்கமுடியாது. இது தேசப்பற்றாளர்கள் நிறைந்த நாடு என்று உரத்து முழக்கமிட்டிருக்கிறார்.

எமது மக்களைப் பாதுகாத்த குற்றத்திற்காக எமது படையினர் தண்டனை பெறாமல் பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்ய வருமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பும் விடுத்திருக்கிறார் உதய ஹம்மன்பில.

இத்தனைக்கும் நடுவில், இலங்கை அரசுத் தரப்பில், அதன் அமைச்சர்களில் ஒருவரான விமல் வீரவன்ஸ, ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக விடுத்துள்ள சவால் மிக வும் காரமானது!

இலங்கையின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கியநாடுகள் சபையின் நிபுணர் குழுவைக் கலைக்காவிட்டால், ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்புத் தூதரகம் முற்றுகையிடப்படும். பொது மக்கள் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்தைச் சூழ்ந்து நின்று, முற்றுகையிட்டு, அங்கு பணிபுரியும் ஊழியர்களைக் கைதிகளாக்கவேண்டும். பான் கீ-மூன் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்துள்ள நிபுணர் குழுவை கலைக்கும் வரை, அந்த ஊழியர்களை விடுவிக்கவே கூடாது - என்று அமைச்சர் வீரவன்ஸ கூறியிருந்தார்.

அமைச்சர் வீரவன்ஸவின் இந்த அறிவிப்புக் குறித்து ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக இலங்கை அரசிடம் விளக்கம் கோரியிருந்தது. எனினும் அமைச்சர் வீரவன்ஸ வெளியிட்ட கருத்து அவரது தனிப்பட்ட நிலைப்பாடு என்று அரசாங்கம் பதில் அளித்திருக்கிறது.

ஐ.நா. நிபுணர் குழு விவகாரத்தில் இலங்கை திட்டவட்டமான முடிவை எடுத்துப் பகிரங்கப்படுத்தினால் அதன் பின்னர் இத்தகைய முரண்படு நிலைகள் தோன்றமாட்டா.

இலங்கையின் அரசியல் கட்சிகளும், அமைச்சர்களும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர் குழு குறித்து இங்கே துள்ளிக் குதித்துக் கொண்டிருக்க -

அந்த நிபுணர் குழு தனது பணிகளை இன்னும் இரண்டொரு நாள்களில் ஆரம்பிக்க உள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் மோதல்கள் பல தசாப்தங்களாக இடம்பெற்றிருக்கின்றன. அந்த மோதல்களினால் ஏராளமான பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் குறிப்பிட்ட மோதலை விசாரிக்கவேண்டிய சட்டரீதியான தேவை உண்டு. அதுவே யதார்த்தம் என்று ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்திருக்கிறார்.

போரின் போது அதில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளுமே மனித உரிமைச் சட்டங்கள், மனிதாபிமானச் சட்டங்களைப் பாரதூரமான அளவில் அப்பட்டமாக மீறி இருக்கிறார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

ஆனால் இலங்கை அரசாங்கமோ தான் நியமித்துள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகளைக் குழப்புவதற்கான ஏற்பாடே ஐ.நா. நிபுணர்கள் விசாரணைக் குழு நியமனம் என்று தர்க்கம் செய்கிறது.

இரு தரப்புகளுக்கும் இடையேயான போட்டியில் வெல்லப்போவது யார் என்பதும், இதன் இறுதி முடிவு என்னவாகும் என்பதுமே இன்று எல்லோர் மனங்களையும் குடையும் கேள்வி. ஐ.நா. நிபுணர் குழுவை அடுத்து உலகப் பொது மன்றம், போரின் போதான சம்பவங்களை விசாரிப் பதற்கு விசேட விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கலாம் என்ற ஊகங்கள் செயல் வடிவம் பெற்றுவிட்டால், இந்த விவகாரம் பூதாகாரமாகிவிடலாம். ஐ.நா. போட்டிருக்கும் இந்தப் பூட்டு எப்படி அவிழும் என்பதனை பொறுத்திருந்துதான் பார்ப்போமே....!

# குடாநாட்டு மக்களுக்காக நாளை வேம்படியில் பொலிஸாரின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். குடாநாட்டு மக்களின் நன்மை கருதி யாழ். பொலிஸ் பிரிவினரால் நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

இச்சேவையில் வைத்திய வசதிகள் தேவைப்படுகின்றவர்களுக்கு இலவச வைத்தியப் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்படும். இதில் சுமார் எட்டு வைத்தியர்கள் சேவை செய்யவுள்ளனர். அத்துடன் கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுக் கண்ணாடி தேவைப்படுகின்றவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகளும் வழங்கப்படும். இதில் சுமார் 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 2 ஆயிரத்து 500 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு இலவச பற்பரிசோதனை நடத்தப்பட்டு, பல் சுத்தம் செய்யப்படுதல், தமது தேசிய அடையாள அட்டைகளைத் தவறவிட்ட கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணப் பிரதேச மக்களுக்குக் கிராம சேவகருடாக விவரங்கள் திரட்டப்பட்டு தேசிய அடையாள அட்டைகளை மீண்டும் வழங்கல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு வழங்கல்,

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் திருமணமாகியும் யுத்த சூழலால் சட்டபூர்வமாக விவாகப் பதிவு செய்யாதவர்களுக்கு விவாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல், தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்குதல் போன்ற சேவைகள் இடம்பெறும்.

அத்துடன் 90 பாடசாலை மாணவர்களுக்குச் சீருடைகளும், சப்பாத்துக்களும் வழங்கல், தென்னங்கன்றுகள் வழங்குதல். பெரிய குற்றங்கள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன தொடர்பாக மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத் துதல் மற்றும் சுமார் ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரத்த தானம் செய்தல் என்பனவும் இந்த நடமாடும் சேவையில் இடம்பெறவுள்ளன.

எனவே, இச்சேவையில் அனைத்து மக்களையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ கேட்டுள்ளார். (1-16)

# யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தின் கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பம்

## டிசெம்பருக்குள் வேலைகள் பூர்த்தியடையுமாம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மத்தியகல்லூரி வளாகத்தில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்த நீச்சல் தடாகத்தின் கட்டடப்பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

''இளைஞர்களுக்கான நாளை'' அமைப்பினால் யாழ். மாவட்டத்தின் முதலாவது நீச்சல் தடாகமாக யாழ். மத்திய கல்லூரியில் ஒரு பெரிய நீச்சல் தடாகம் அமைக்கும் பணிகள் கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கென கல்லூரியின் மையப்பகுதியில் பெரிய நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு நவீன இயந்திரங்கள் மூலம் பெரிய குழிகள் வெட்டப்பட்டு நீச்சல் தடாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் இப்பணிகள் திடீரென இடைநடுவில் கைவிடப்பட்டன. இது தொடர்பாகக் கல்லூரி அதிபரால் பலருக்கும் அறிக்கைகள் அனுப்பப்பட்ட போதும் நீண்ட நாள்களாக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனினும் தற்போது இந்த நீச்சல் தடாகப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு ''இளைஞர்களுக்கான நாளை'' நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை ''போர்ஸ்ரர் அன்றீட்'' தனியார் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் இப்பணிகளை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவுள்ளதாக இந்த நிறுவனம் உறுதியளித்துள்ளது.

அரைகுறையாகத் தவிக்கும் நீச்சல் குளத்தின் நிலை தொடர்பாக 'உதயன்'' அடிக்கடி சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-16)

# திருமலை, வவுனியா செல்லும் கரையோரப்பகுதி பயணிகளுக்கு இன்று முதல் இணைப்புச் சேவை

## போக்குவரத்துச்சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

பருத்தித்துறையிலிருந்து அதிகாலையில் திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்யும் பயணிகளின் நலன் கருதி அந்தச் சேவையில் வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதி மக்கள் பயணம் செய்வதற்கு வசதியாக இணைப்பு பஸ்சேவை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

தினமும் அதிகாலை 3.45 மணிக்கு தொண்டைமானாற்றிலிருந்து புறப்படும் இணைப்பு பஸ் சேவை வல்வெட்டித்துறை, பொலிகண்டி, அல்வாய், தம்பசிட்டி ஊடாக பருத்தித்துறை நகரை வந்தடையும்.

இந்த பஸ் சேவையில் பயணிப்போர் அதிகாலை 4.30 மணிக்கு திருகோணமலைக்கும், 5.30 மணிக்கு வவுனியாவுக்கும் புறப்படும் பஸ்களில் பயணிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் கரையோரப் பகுதி மக்கள் திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளுக்கு பயணம் செய்வதாயின் அதிக கட்டணம் கொடுத்து தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்த வேண்டியிருந்தது. தற்போது இந்த இணைப்பு சேவை ஆரம்பிக்கப்படுவது இதுவரையும் பயணிகளுக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்களுக்கு தீர்வாக அமைந்துள்ளது. (1-236)

# தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்கள் ஒன்றிணையும் பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், ஜூலை 2

தமிழ்-சிங்கள-முஸ்லிம் இளைஞர், யுவதிகள் இடையே பரஸ்பரம் நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்தை வளர்க்கும் நோக்கில் தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர், யுவதிகள் 150 பேர் பங்கு கொள்ளும் ''சாந்தி சேனா'' பயிற்சிப் பாசறை இன்று ஏழாலை, மயிலங்காட்டில் ஆரம்பமாகின்றது.

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பாசறையில் மொனராகலை மாவட்ட சிங்கள இளைஞர், யுவதிகளும் யாழ்.மாவட்ட தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகளும் பங்குபற்றுகின்றனர்.

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் இந்தப் பயிற்சிப் பாசாறை எதிர்வரும் திங்கட்கிழமை வரை மயிலங்காடு கிராமத்தில் நான்கு நாள்கள் நடைபெறும் என்று யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி சு.ரேணுகா தெரிவித்துள்ளார். (ஒ-6)

# தெங்கு செய்கையாளர் சங்கம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தை புனரமைப்பு செய்வதற்கான கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷின் ஆலோசனையின் பேரில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் சங்க அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் செ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (1-14)

# நாளை

| | |
|---|---|
| ஆனி 19 | 03.07.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : ஸப்தமி |
| | பி.இ. 04.57 வரை |
| நட்சத்திரம் | : பூரட்டாதி |
| | பி.ப. 12.31 வரை |
| சுபநேரம் | : 02.57 - 04.27 |
| ராகுகாலம் | : 08.57 - 10.27 |

# பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக ஜீவரட்ணம்

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக பசுதி ஜீவரட்ணம் பதவியேற்றுள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி உத்தியோக பூர்வமாக இவருக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகமான யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினமே புதிய தலைவர் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை, பனை அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகங்களின் இணைப்பாளர்களுடனான கலந்துரையாடலும் நேற்றுமுன்தினம் பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகமான யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்தாகும்.

# "நெல்சிப்" திட்டத்தின் முன்மொழிவுகள் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை கொத்தணி ரீதியாக நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது பொது மக்களால் வழங்கப்பட்ட வேலைத் திட்டங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகள் மக்கள் பார்வைக்காக பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி முன் மொழிவுகளை பொது மக்கள் பார்வையிட்டு தமது கருத்துக்களை எழுத்துமூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார்.

# தெணியானின் சிறுகதைத் தொகுப்பு நாளை வெளியீடு


மருதனார்மடம், ஜூலை 2

ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர் தெணியானின் 25 சிறுகதைகளின் தொகுப்பான ''ஒடுக்கப்பட்டவர்கள்'' நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறும் இவ்விழாவுக்குக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி தலைமை வகிப்பார்.

வரவேற்புரையை கரவெட்டி தபால் அதிபர் அ.அருள்சோதியும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும் வழங்குவர். கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான இ.இராஜேஸ்கண்ணன், க.அருந்தாகரன் ஆகியோர் நிகழ்த்துவர். முதற்பிரதியை சி.குணசிங்கம் பெற்றுக்கொள்வார். (1-55)

# இழப்புகளைச் சந்தித்த போதும் மனமுடைந்து போகாமல் அல்லலுறும் மக்களுக்காகப் பணியாற்றும் யாழ்.ஆயர்



ஜூலை மாதம் எமது யாழ். திருச்சபைக்குப் பெரும் மகிழ்வூட்டும் மாதமாகும். அதிலும் குறிப்பாக யாழ். திருச்சபையைச் சேர்ந்த அனைத்துக் கத்தோலிக்க பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மறைமாவட்டத் துறவியர், அருட்பணியாளர்கள் ஒன்று சேர்ந்து யாழ்.திருச்சபையின் தலைமை ஆயருக்கு ஜூலை மாதத்தில் வரும் முப்பெரு விழாக்களை ஒரேநாளில் ஆயருடன் சேர்ந்து கொண்டாடி மகிழும் நாள். அது தான் ஜூலை மாதம் 3ஆம் திகதி அவரின் பெயர்கொண்ட திருத்தூதரான தூய தோமையாரின் திருநாளாகும்.

இந்த நன்நாளில் எமது கத்தோலிக்கக் கல்விச் சமூகம் ஆயரின் தலைமையில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒன்றாகக்கூடி ஜூலை 3 இல் அவர் பெயர் கொண்ட புனித தோமையாரின் திருநாளையும், ஜூலை 13 இல் அவரது பிறந்த நாளையும், ஜூலை 30 இல் அவர் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட நாளையும் (ஜூலை 6 அவர் யாழ்.திருச்சபையின் ஆயராக திருச்சபையின் திரு ஆட்சிப் பீடத்தால் நியமிக்கப்பட்டார்.) நினைந்து, மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறி பலி நிறைவேற்றும் நாள். ஆனால் இந்த ஆண்டு இவ்விழாக்கள் வழக்கத்துக்கு மாறாக ஜூலை மாதம் 2 ஆம் திகதி ஏன் கொண்டாடப்படுகிறது?

இவ்விழா எமது கத்தோலிக்க கல்விச் சமூகத்தால் கொண்டாடப்படுவதால் இந்த ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் நாள் சனிக்கிழமை விடுமுறை நாளில் வருவதால் இந்த ஆண்டில் இவ் விழாவை ஜூலை மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாட ஆயர் இல்லம் தீர்மானித்துள்ளது.

நாம் எமது ஆயர் தோமஸ் செளந்தர நாயகத்தின் பணிவாழ்வையும், அவர்தம் பணிக்காலங்களிலும், பணித் தளங்களையும் சற்றுப் பின்நோக்கிப் பார்க்கும் போது ஒரு பெரிய உண்மை வெளிப்படும். இவற்றை நாம் இங்கு மிகவும் சுருக்கமாக நோக்குமிடத்து கடந்த 3 சகாப்தங்களாக எமது தமிழ்ப் பிரதேசங்களில், குறிப்பாக மன்னார், யாழ். மறைமாவட்டங்களில் இடம்பெற்ற போர்களும் போரின் வடுக்களும் அவர்தம் பணி வாழ்வில் பெரும் தாக்கங்களையும் காயங்களையும் ஏற்படுத்தியுள்ளன என்பது யாவரும் அறிந்த உண்மையே.

அதுமட்டுமல்லாது இம்மறை மாவட்டங்களில் பல குருக்கள் காலத்துக்கு காலம் படுகொலை செய்யப்பட்டதையும், காணமற்போனதையும், இம்சைப்படுத்தப்பட்டதையும், ஏன் சில குருக்களின் குருத்துவ வாழ்வில் ஏற்பட்ட தளம்பல்களையும் நாம் மறக்க முடியாது. அத்தோடு பல ஆலயங்கள் தாக்கப்பட்ட தும் அதில் பல நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டதும் காலத்தால் மறக்க முடியாத நிகழ்வுகளாகும். அத்தோடு எமது மறைமாவட்ட கத்தோலிக்க ஸ்தானங்களின் கட்டுப்கோப்புகள் பல சிதைக்கப்பட்டுப் பெரும் இடர் பெயர்வுகளூடே நகர்ந்து சென்றதையும் நாம் மறந்துவிட முடியாது.

மேலும் எமது மறைமாவட்டத்துக்கு பெரும் வருவாயைத் தேடித்தந்த பெருந்தோட்டங்கள் யாவும் இராணுவத்தினர், போராளிகள் வசம் சென்றதால் பொருளாதார ரீதியாகப்பட்ட கஸ்ரங்களும் எண்ணிலடங்கா. அதுமட்டுமல்லாது கடந்த ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது வர்ணிக்க முடியாத மனித அவலங்களையும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களையும், கோடிக் கணக்கான உடைமைகளையும் யாழ்.திருச்சபை இழந்தது.

அருட்பணி
அன்ரனிதாஸ் அடிகள்
நிதியாளர்,
யாழ்.மறைமாவட்டம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

ஏன் ஆண்டாண்டு காலமாகப் பேணிப் பாதுகாத்து வந்த பல நூற்றுக்கணக்கான பெறுமதி மிக்க பதிவேடுகள் யாவும் அழிந்து போனதும் பெரும் பாதிப்பை திருச்சபைக்கு ஏற்படுத்தியுள்ளது. இவையாவும் எமது ஆயரின் பணிவாழ்வில் மறக்க முடியாத, ஈடுசெய்ய முடியாத காயங்களாய், மனப்பதிவுகளாய் உள்ளன.

இருப்பினும் ''ஓநாய்கள் வருவதைக் கண்டு ஆயன் மந்தைகளை விட்டு ஓடுவதில்லை'' என்பதற்கு இலக்கணமாக எமது ஆயர் பெரும் இழப்புக்களை சந்தித்தாலும் மனமுடைந்து போகாமல், சோர்ந்து விடாமல், உடல் களைப்புக்களை எல்லாம் பொருட்படுத்தாமல் எங்கெங்கெல்லாம் மந்தைகள் சிதறடிக்கப்பட்டனவோ அங்கங்கெல்லாம் தேடி, ஓடிச்சென்றார். அவர்களுடன் தங்கி வாழ்ந்தார். அவர்களுடன் உண்டு, குடித்து, உறங்கினார். தேவைப்பட்ட போதெல்லாம் அவர்களுக்குத் தற்காலிக வாழ்விடங்களை அமைத்துக் கொடுத்து வாழவைத்தார். அங்கெல்லாம் தற்காலிக ஆலயங்களைக் கட்டி வழிபாடு செய்ய ஆவன செய்தார். கோடிக்கணக்கான ரூபாய்கள் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் ஊடாக செலவு செய்து உணவூட்டி பசியாற்றினார்.

ஏன் பல் இடங்களில் நிரந்தர வீட்டுத் திட்டங்களை அமைத்து புதிய வாழ்வைக் கொடுத்தார். இன்னும் பல வாழ்வாதாரங்களைத் தேடிக் கொடுத்தார். இன, மத, மொழி பேதமின்றி சகோதர அன்போடு எல்லோருக்கும் ஆயன் என்ற முறையில் மக்களின் நல்வாழ்வுக்காய் உழைத்தார். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பிறமத மக்களின் வழிபாட்டு உரிமைகளை மதித்து அவர்கள் தங்கள் மத வழிபாடுகளைச் செய்ய பொருளாதார உதவிகளைத் தாரளமாய்ச் செய்தார். கல்விச் சமூகத்தின் மேம்பாட்டுக்காக கடும் பாடுபட்டு உழைத்தார். இறுதியாகப் போர் ஓய்ந்துவிட்ட போது திரும்பவும் தன் மந்தைகளை ஒன்றாகக் கூட்டுச் சேர்ப்பதில் தன் குருக்களுடன் ஒன்று சேர்ந்து கடுமையாக உழைத்து வருகிறார். இப்படிப்பட்ட நல்லதொரு ஆயனுக்காக கல்விச் சமூகத்துடன் சேர்ந்து நாமும் இந்நாளில் இறைவனுக்கு நன்றி கூறி வேண்டுதல் செய்வோம். ✱

# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர்; பரீட்சைகளில் சித்திபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் இவ்வாண்டு நடத்தப்பட்ட சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களின் பெயர், விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சித்தி பெற்றோர் வருமாறு:

சைவப்புலவர்

சுந்தரமூர்த்தி துஷ்யந் (மட்டக்களப்பு), வைரவன் கோகிலன் (ஜேர்மனி), திருமதி விஜயதர்சினி ஜோதிநாதன் (லண்டன்), திருமதி சந்திரா கோகிலன் (ஜேர்மனி), திருமதி சந்தோசம் ஜெயலட்சுமி (கொழும்பு), செல்வி பிருந்தாவனிதை நடராசா (சாவகச்சேரி).

இளஞ்சைவப்புலவர்

திருமதி சிவஞானம் சரோஜினிதேவி (திருகோணமலை), செல்வி சீவரெத்தினம் தங்கரெத்தினம் (திருகோணமலை), திருமதி ஸோபா ஜெயரஞ்சித் (வாழைச்சேனை), செல்வி ஞானலோகேஸ்வரி ஞானானந்தக் குருக்கள் (வவுனியா), செல்வி நேமிநாதன் டிஹாசி (வாழைச்சேனை, செல்வி யோகநாதன் யோகினி (வாழைச்சேனை), செல்வி இரத்தின சிங்கம் ஜீவகலா (வாழைச்சேனை), செல்வி அரசரெட்ணம் துஷாந்தினி (வாழைச்சேனை), செல்வி இராமச்சந்திரன் ரஜிப்பிரியா (கல்குடா), திருமதி தவலெட்சுமி யோகேந்திரன் (வாழைச்சேனை), செல்வி கேதாரம் விமலா (வாழைச்சேனை), பசுபதி பிரசாத் (யாழ்ப்பாணம்), செல்வி ரவீந்திரரசா யரனியா (மட்டக்களப்பு), செல்வி சிவலிங்கம் நிர்மலசாந்தி (மட்டக்களப்பு), திருமதி குணாளன் சிவகங்கா (தெஹிவளை), செல்வி ரஜீதா கைலாயநாதன் (தெல்லிப்பழை), செல்வி பிரபா பத்மநாதன் (புத்தூர்), செல்வி ரஞ்சிதா இராசசேகரன் (புத்தூர்).

(ஒ-9)



இலங்கை மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகள் நான்கு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன. ஜனாதிபதியின் செயலாளர் உதயங்க வீரதுங்க, உக்ரேனிய பாதுகாப்புச் சேவையின் பிரதித் தலைவர் பொரொட்கோ ஆகியோர் மேற்படி ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதையும் அருகில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிற்பதையும் படத்தில் காணலாம்.


## தவறிவிட்டது

கமலாம்பிகை செல்லக்கிளி என்பவருடைய அடையாள அட்டை குளப்பிட்டிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சேர்ச் லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில். தொ.பே: 0770851814


# ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை அமெ. மீளாய்வு செய்யும்

கொழும்பு, ஜூலை 02

இலங்கைக்கான அமெரிக்காவின் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை மீளாய்வு செய்யவுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க தொழிலாளர் ஒன்றியம் மற்றும் கைத்தொழில் அமைப்புகளின் காங்கிரஸ் ஆகிய தொழிற்சங்கங்கள் இலங்கைத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதன் அடிப்படையில் அமெரிக்க அரசு 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்குவது குறித்து மீளாய்வு செய்யத்தீர்மானித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வமங்களகரமான விகிர்தி வருஷம் ஆனிமாதம் 18 ஆம் நாள் இன்று (02.07.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிமுதல் 2 மணி வரையுள்ள ஷஷ்டி திதியும், பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் துலாம் இலக்கின மும் கூடிய சுப முகூர்த்த சுப வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
பிரேமரூபன்
அவர்கட்கும்




திரு.திருமதி பவானந்தசிவம்
செல்வத்திலகம் தம்பதியரின் புத்திரி
திருநிறை செல்வி
ஜெகமாலினி அவர்கட்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 03.07.2010
சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.



இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி இளையதம்பி யோகேஸ்வரி
திரு.திருமதி பிரேமராஜன் விமலேஸ்வரி குடும்பமும்
சகோதரர்களும்.

இல.51, அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228200, 0773760575



## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா பாக்கியலக்சுமி



தாவடி தெற்கு, பத்தானை வீதியைப் பிறப்பிடமாகவும் வதிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பாக்கியலக்சுமி நேற்று (01.07.2010) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன்-பொன்னம்மா தம்பதியரின் மகளும் மகாதேவன் முத்தாபரணம், மகேஸ்வரி, பேரின்பமணி ஆகியோரின் சகோதரியும் சோதிடர் நடராசாவின் மனைவியும் இராஜேந்திரன், மகேந்திரன், கணேஸ்வரி (UK), யோகேந்திரன் (சுவிஸ்), அன்பரசி ஆகியோரின் தாயும் மனோன்மணி, ஜெயதீசன் (UK), வித்தியானந்தநங்கை (சுவிஸ்), இராகவன் (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் மாமியும் கிரிகரன், கிருபாளினி, கிரிராஜ், கிரிஷாளினி, ஜெயவாணி, சந்திரவாகினி, ஜெயரதன், இந்துஜா, மாதவன், ஹரிணி, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோதிடர் நடராசா
(கணவர்)

பத்தானை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில். (100173)

# யாழ்ப்பாணத்திலுள்ள வலுவிழந்தோருக்கு செஞ்சிலுவைக்குழு தொடர்ந்தும் உதவி வழங்கும்

## ஜெய்பூர் நிறுவன ஆண்டுவிழாவில் வதிவிடப் பிரதிநிதி



யாழ்ப்பாணம், ஜூலை 2

வலுவிழந்த மக்களுக்குத் தொடர்ந்தும் பல்வேறு உதவித் திட்டங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்குவதுடன் அவர்களுடைய வாழ்வுக்கும் ஒளியூட்டும் என அந்தக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி புளோறனஸ் கிலெற் அம்மையார் தெரிவித்தார்.

யாழ்.ஜெய்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ் நிறுவனத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நேற்று நிறுவனத்தில் அதன் நிர்வாகச் செயலாளர் என்.சிவானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அம்மையார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.ஜெய்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் சேவை வரவேற்கத்தக்கதாகும். யாழ்.மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் இந்த நிறுவனத்தின் பயனைப் பெற்றவர்களைக் காணக்கூடியதாக உள்ளது.

யுத்தம், வீதி விபத்து, பிறப்பில் ஏற்படும் குறைபாடு ஆகியவற்றால் உடல் உறுப்புக்களை இழந்தவர்களும், அவற்றால் பாதிக்கப்பட்டவர்களும் கடந்த 23 வருட காலமாகச் சேவை வழங்கிவரும் இந்த நிறுவனத்துக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தொடர்ந்தும் தனது உதவித் திட்டங்களை வழங்கும். அதன் மூலம் வலுவிழந்தோருக்கு மேலும் பல உதவிகள் கிடைக்கும்.

1979 இலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மாற்று வலுவுள்ளோருக்கு உதவி வழங்கி வருகிறது. இது 36 நாடுகளில் 87 திட்டங்களை வழங்கி வருகிறது.

1999ஆம் ஆண்டிலிருந்து யாழ்.மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம். சமாதான காலத்தில் எமது செயற்பாட்டைக் குறைக்க வேண்டி ஏற்பட்டது. ஆனால் மீளவும் 2007இல் எமது செயற்பாடுகளை தொடர்ந்தோம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது சேவைகளை வழங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன- என்றார்.

இந்த நிகழ்வின்போது சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் என 24 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சுகாதாரப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் கோடியூல்லா, செயற்கை அவயவ பாவனையாளர் சங்கத்தைச் சேர்ந்த கமலா சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜெய்பூர் நிறுவனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி ஜே.கணேசமூர்த்தி, பகுதி முகாமையாளர்களான எல்.எம். யோண்சன், மி.மகேந்திரகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

(50-14)

# பண்பாட்டியல் முதுகலைமாணி 2ஆம் அணி மாணவர்களின் பிரிவுபசார விழா நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பண்பாட்டியல் முதுகலைமாணி 2ஆம் அணி மாணவர்களின் பிரிவுபசார விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை மண்டபத்தில் பண்பாட்டியல் மன்றத் தலைவர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என். சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினராக உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலனும், கௌரவ விருந்தினராக பண்பாட்டியல் கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(50-9)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 2

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். இக்கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

மேற்படி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும், யாழ்.தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்தரசிறி ஆகியோரின் இணைந்த தலைமையில் நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(50-201)

# யுத்தத்தினால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவ நிதியம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் பரிபாலனசபை போரினால் பாதிக்கப்பட்டுப் பெற்றோரை இழந்துள்ள பிள்ளைகளுக்கு நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்தகவலை ஆலயப் பரிபாலன சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியுமான ஜெ.முத்துக்குமாரசாமி தெரிவித்தார்.

ஆலய வளர்ச்சிப் பணியில் மட்டுமல்ல சமூகப் பணிகளிலும் பரிபாலன சபை ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பெற்றோரை இழந்து அநாதைகளாகப் பரிதவிக்கும் பிள்ளைகளுக்கு உதவும் வகையில் ஆலய பரிபாலனசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென ஒரு நிதியம் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக இந்தப் பிள்ளைகளுக்கு உதவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

(50-224)





# புங்குடுதீவுப் பிரதேசத்துக்கு தொலைத் தொடர்புக் கோபுரம்

யாழ்ப்பாணம், ஜூலை2

புங்குடுதீவுப் பிரதேசத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரதேசத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்றை அமைப்பதன் மூலம் அப்பகுதியில் சி.டி.எம்.ஏ.தொலைபேசிச் சேவை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இப்பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் சி.டி.எம்.ஏ.தொலைபேசிகளுக்கு அன்ரனாவும் பொருத்த வேண்டிய தேவை உள்ளது. புதிய தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டதும் அந்தத் தேவை ஏற்படாது எனவும் கூறப்பட்டது.

(50-224)

## வடமாகாண சமூகசேவைத் திணைக்களத்தின்

# நலிவுற்ற குடும்பங்களுக்கான சேவையை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டம்

நாவற்குழி, ஜூலை 2

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுனிசெவ் நிதி உதவியுடன் நலி வுற்ற குடும்பங்களுக்கு வழங்கும் சேவையை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கென செயற்றிட்ட தொழில்நுட்ப உதவி அலுவலர் பதவிக்கு ஆள்சேர்ப்பு இடம்பெறவுள்ளது. மாகாண தலைமை அலுவலகத்தில் ஒருவர் இதற்கென பணிக்கு அமர்த்தப்படவுள்ளார். இவர் யுனிசெவ் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் நலிவுற்ற குடும்பங்களிற்கு வழங்கும் சேவைகளை மேம்படுத் தும் நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளை சமூக சேவைகள் திணைக்களத்தின் நியமங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைய நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், அறிக்கைப்படுத்தலும் மற்றும் யுனிசெவ், சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற பிற வேலைத் திட்டங்களையும் நிறைவேற்றல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞான/முகாமைத்து வம் அல்லது அதனுடன் தொடர்புடைய துறைகளில் பட்டங்ளைப் பெற்ற ஒருவர் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் சமூக சேவையாளர் பதவிக்கு 15 பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

தலைமைக் காரியாலயத்தில் ஒருவ ரும் மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்க ளில் தலா 1பேரும், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் தலா 5பேரும் வவுனியாவிற்கு 2 பேரும் சமூக சேவையாளராக சேர்க்கப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான பட்டம் அல்லது அதனுடன் இணைந்த கல்வித் தகைமை பெற்றிருத்தல் வேண்டும். எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை பணிப்பாளர், சமூகசேவை திணைக்களம், வரோதய நகர், திருகோணமலைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்வது தொடர்பாக வடமாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சு செயலர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி விடுத்த அறிவித்தலை வட மாகாணத்தின் மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளின் சமூக சேவைகள் பிரிவில் பார்வையிட முடியும்.யாழ்.காட்டுக் கந்தோர் ஒழுங்கையிலுள்ள மாவட்ட ச்மூக சேவைகள் திணைக்களத்திலும் இதனைப் பார்வையிட முடியும்.

(50-121)

# ஆபரணப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

மாணிக்கக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிலையத்தினால் ஆபரணப் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனையின் கீழ் மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி நிலையத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்கள் நல்லூர் பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்றுப் பூரணப்படுத்தி அதன் பிரதியுடன் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந் தனன் கேட்டுள்ளார்.

மேற்படி பயிற்சிநெறிகளின் விவரம் வருமாறு:-

* மாணிக்கக்கல் வெட்டுதலும் பட்டை தீட்டுதலும்
* குடா வெப்ப பரிகரணம்
* கணனி உதவியுடனான ஆபரண வடிவமைப்பு
* கல் பதித்தல்
* ஆபரண உற்பத்தி
* நிற தரப்படுத்துதலும் சந்தைப்படுத்தலும்
* மாணிக்கக்கல் கல்லியல்
* ஆபரண வடிவமைப்பு.

(50-16)



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் தமிழ் இலக்கணப் பூங்கா நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை மூதல் மூன்று படங்களிலும்

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவிடம் இருந்து ஓய்வுபெற்ற அதிபர் க.சிவாஜி பெற்றுக் கொள்வதையும் அருகில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: ம.பா.மகாலிங்கம்)*

**ஆதிபராசக்தியின் அருளும் ஆசியும் பரிபூரணமாக அடைவதற்கு யாழ்ப்பாணத்தில் வாழும் பக்த கோடிகளுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்**

தென் இந்தியா தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சமயபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் அருளும் ஆசியும் பெற்று கடந்து 25 ஆண்டுகளாக தமிழக பக்த கோடிகளின் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் ஏற்பட்ட சகல குறைகளையும் தீர்த்து பக்த கோடிகளின்



குடும்பத்திலும் வாழ்க்கையிலும் சகல சுபிட்சங்களையும் ஐஸ்வர்யங்களையும் ஏற்படுத்தி பக்தகோடிகளிடையே அழியாதபேரும், புகழும் பெற்று தெய்வமாக ஜோதிக்குள் ஐக்கியமாகி மறைந்த அருள்வாக்கு ஸ்ரீலஸ்ரீ S. பகவதி அம்மையாரின் குமாரரும் பரம்பரை அருள்வாக்கு தொழில் வாரிசும் ஆகிய, தேவி உபாசகர் தவத்திரு S. செல்லம் அருள்தாஸ் சாஸ்திரிகள் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு முதன் முறையாக வருகை தந்துள்ளார். தங்கள் ஜாதகம்,



கைரேகை இரண்டும் இல்லாமல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அருளால், தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் உள்ள நன்மை தீமைகளை தெரிந்துகொள்ளவும். எதிர் காலத்தை பற்றி அறிந்து கொள்ளவும் தாங்கள் நியாயமாக நினைத்த காரியங்கள் வெற்றி அடையவும், திருமணத்தில் தடைகள் உள்ள ஆண்களும் பெண்களும், திருமணமாகி பல ஆண்டுகள் சென்றும் குழந்தை பாக்யம் இல்லாதவர்களும், செய்யும் தொழில் மந்தம் மற்றும் தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் உள்ள சகல பிரச்சனைகளுக்கும் சாஸ்திரிகளை நேரில் சந்தித்து அம்மனின் அருளும் ஆசியும் பெற்று தங்கள் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் வாழ்க்கையில் சகல சௌபாக்யங்களும் நன்மைகளும் அடையுங்கள். சாஸ்திரிகளை சந்திக்குமிடம்

ஹரீஸ் இன்

தொ.பே: 0777067687

175, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.



ஜனரஞ்சகமான சஞ்சிகை
இருக்கிறம்
மக்களின் குரல் நவமணி
ஊடக அனுசரணையுடன்
சவாலை விரும்பும்
அனைவருக்கும்
ஓர் அரிய வாய்ப்பு
*Lacsdo Media Network Srilanka*
நடைமுறைப்படுத்தும்
Diploma in Journalisam
வானொலி அறிவிப்பாளர், பத்திரிகை செய்தியாளர் தொடர்பான ஊடக பயிற்சி நெறி. சிரேஷ்ட அறிவிப்பாளர்கள் ஊடாக ஊடகவியலாளர்கள் மூலம் விரிவுரை.




இதனைக் கற்றுக்கொள்வதன் மூலம் தனியார், அரச ஊடகங்கள், நேர்முகத் தேர்வின்போது எதிர்பார்க்கும் சிறந்த அனுபவங்களைப் பெறலாம். அடுத்த பரம்பரையில் சிறந்த ஊடகவியலாளராக வருவதற்காக இன்றே தயாராகுங்கள். விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் தயாரித்து அனுப்பவும். ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

ஊடகப் பயிற்சிக்கான மாதிரி விண்ணப்பம்
பெயர் : முகவரி :
தொலைபேசி :
கல்வித் தகைமை :
பயிற்சிக்காக தெரிவு செய்யும் ஊடகம்
வானொலி Dip ☐
பத்திரிகை செய்தியாளர் ☐

கல்வித் தகைமை: G.C.E. O/L
பயிற்சிக் காலம்: 3 மாதம்
விண்ணப்ப முடிவுத் திகதி: ஜூலை 18

விண்ணப்பம் வந்து சேரவேண்டிய முகவரி
*Lecsdo Media Network Srilanka*
184 M/1 Beach Road, Sainthamaruthu
Srilanka.

மேலதிக விவரங்களுக்கு : 0779322797


## தவறிவிட்டது

நேற்று (01.07.2010) வியாழக்கிழமை மோட்டார் சைக்கிள் இல.தகடு MPVO - 0001 யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 077 4601072

## யோகா தியான வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 2

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் சஹஜயோகாதியான வகுப்புக்கள் இந்த மாதம் 5 நாள்கள் இடம்பெறவுள்ளதாக சபையின் பரீட்சைச் செயலர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 3ஆம், 10ஆம், 17ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் இந்தத் தியான வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன. (50)

## முதியோர் சங்கங்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 2

தியாகி அறக்கொடை நிறுவனம் பிரதி ஞாயிறு தோறும் நடத்திவரும் மருத்துவ முகாம் சம்பந்தமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுடன் கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளது.

அனைத்து முதியோர் சங்க அங்கத்தவர்களையும் உடன் வந்து சந்திக்குமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (50-100)

## பட்டப் படிப்பை பூர்த்திசெய்யாத நுண்கலை மாணவருக்கான விசேட மீள் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 2

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று (செமிஸ்ரர் முறை) தமது பட்டப் படிப்பை இதுவரை பூர்த்தி செய்யாத இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களுக்கு 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட இரு அரை ஆண்டுகளுக்குமான (செமிஸ்ரர் 12ஆம், 22ஆம்) விசேட மீள் பரீட்சைகள் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறுமென கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் ஞானக்குமரன் அறிவித்துள்ளார். (50-16)

## மரண அறிவித்தல்கள்

### பரமலிங்கம் தங்காதரன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் தங்காதரன் 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புப் புதல்வனும் பிரியதர்சினியின் அன்புக் கணவரும் காருண்ஜா, சுபானா, வந்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருவிளங்கம் (இணுவில்), திருச்செல்வம் (இணுவில்), சிறீதரன் (ஜேர்மனி), நடேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் சுந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் குமரவேள் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), உசாநந்தி (பிரான்ஸ்), சிவாஜினி, தங்கராணி (ஜேர்மனி), வளர்மதி (இணுவில்) ஆகியோரின் மைத்துனரும் சசிகலா, சசிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை FRIEDHOF AARAU ROSAGARTEN WEG -1 5000 AARAU SWITZERLAND இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
க.குமரவேள் (மைத்துனர்). (100163)

### கதிரவேலு சுந்தரலிங்கம்

(உரிமையாளர், கார்த்திகா புடைவையகம், பசார் வீதி, வவுனியா)



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் இல.39, மாவடி வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சுந்தரலிங்கம் நேற்று (01.07.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் நித்தியலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் நடராசா, குமாரசாமி, கமலாம்பிகை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கார்த்திகாயினி (லண்டன்), கங்காசுதன் (முகாமைத்துவபீடம், 2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தில்நாதனின் (லண்டன்) அன்பு மாமனும் ஜலக்ஷனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.07.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்று மு.ப. 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, மாவடி வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நித்தியலக்சுமி - மனைவி,
கங்காசுதன் - மகன். (100167)

## வேலை ஆள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்) உடனடியாகத் தேவை. தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ராஜா கிறீம் கவுஸ்
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (100164)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் விசேட பொதுக் கூட்டம்

காலம்: 07.07.2010 புதன்கிழமை
நேரம்: பி.ப. 3 மணி
இடம்: யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

அங்கத்தவர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

01.அதிமுக்கிய விடயம் ஒன்று ஆராயப்பட வேண்டி இருப்பதால் சகல கழக அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
01.07.2010.
(சி/568794)

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்.

## மரண அறிவித்தல்

### சற்குணநாதன் ஸ்ரீசுஜீவன் (சுஜீவன்)



அசரடி வீதி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணநாதன் ஸ்ரீசுஜீவன் 29.06.2010 செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் சற்குணநாதன் - வற்சலா தம்பதியரின் ஏக புத்திரனும் அனிந்திதை, நளினி (லண்டன்), கஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரவணன் (சங்கர்), மணிவளவன் (மனோ) ஆகியோரின் மைத்துனரும் பரிதியன், ஜதியன் ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.07.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (100166)

தகவல்:
வே.சற்குணநாதன்
(தந்தை).


Baraka
உங்கள் நலத்தின் பங்காளி



**JointSafe**
மூட்டுவலிகளினால் ஏற்படும் உபாதைகளுக்கான நிவாரணி.



**Memo-Plus**
கற்றல், ஞாபகசக்தி மற்றும் மனம் சம்பந்தமான தொழிற்பாடுகளை அதிகரிக்கும்.




**FOOT-KIO**
பித்த வெடிப்பு மற்றும் வரண்ட சருமத்தினை மென்மையாக்கும்.




**HAIRMENN**
இளநரை மற்றும் முடி உதிர்தலை தடுக்கும்.

Manufactured by:
BIO EXTRACTS (PVT) LTD.
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
HOT LINE: 0777 800668

யாழ். விநியோக முகவர்:
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna.
TEL: 0212222567

# யாழ்.மாநகரசபையின் அபிவிருத்திப் பணிகளில் தாம் புறக்கணிக்கப்படுவதாக எதிரணி குற்றச்சாட்டு

## வைரவிழாக் குழுவிலிருந்தும் அவர்கள் விலகினர்

நல்லூர், ஜூலை 2

யாழ்.மாநகர சபையின் வைரவிழாக் குழுவிலிருந்து தாம் விலகுவதாக மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாநகர சபையின் வைர விழாக் குறித்த நிகழ்வுகள் பற்றிப் பேசப்பட்டது. இதன்போது 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மாநகர அபிவிருத்திப் பணிகள் குறித்து எதிர்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தவில்லை எனவும், 9 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு இடம்பெறவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் தம்மைப் புறக்கணித்துள்ளதுடன், உறுப்பினர்கள் என்றவகையில் தங்களுடன் இதுபற்றித் தொடர்பு கொள்ளவில்லையெனவும், மாநகரின் அபிவிருத்திப் பணிகளில் தமக்குரிய இடம் வழங்கப்படவில்லையெனவும் குறிப்பிட்டார் எதிரணி உறுப்பினர் என்.இராஜதேவன்.

மாநகர அபிவிருத்திப் பணிகளில் எதிரணியினர் புறக்கணிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து மாநகரசபையின் வைர விழாக் குழுவிலிருந்து எதிரணியினர் விலகிக்கொள்வதாகவும் அவர் பிரேரணையைச் சமர்ப்பித்தார். (50-111)

## விசேட தேவையுடையோருக்கு மலசல கூடங்கள்

நவாலி, ஜூலை 2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள விசேட தேவைக்குரிய பின்வருவோருக்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இவர்களை உடன் வந்து பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

செ.குலசேகரம் - மடத்தடி சண்டிலிப்பாய், சி.செல்லத்துரை - மாசியம்பிட்டி,சி. காந்தரூபன் - சண்டிலிப்பாய், செ.மாரித்து. - தியாகராசா வீதி சண்டிலிப்பாய், ச.தேவநந்தினி - ஆனைக்கோட்டை. (100)

## கோப்பாய் சுகாதார அலுவலர் பிரிவில் 6 மாதங்களில் 151 டெங்கு நோயாளிகள்

நாவற்குழி , ஜூலை 2

கோப்பாய் சுகாதார அலுவலர் பிரிவில் இவ்வருடம் முதல் 6 மாதங்களில் 151 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தனியார், பொதுக் காணிகளைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வதைக் காண முடிகின்றது?

கோப்பாய் நிலையத்திற்கு அருகில் உள்ள காணியும் தற்போதும் பொலிஸாரால் துப்புரவாக்கப்பட்டு விட்டது.

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி வளாகமும் கல்லூரி மாணவர்களால் துப்புரவாக்கப்பட்டு விட்டது.

டெங்கு நோய் யாழ்ப்பாணத்தில் சென்ற வருடம் பரவியபோதும் இன்றுவரை கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எவரும் இறக்கவில்லை என்பது குறிப்பிடப்படுகின்றது.

பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றுடன் இணைந்து கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சிறப்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தமையே இதற்குக் காரணமென பொதுமக்களால் கூறப்படுகின்றது. (50-121)

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் , ஜூலை 2

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீண்டும் இயக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முன்னேற்பாடாக அங்குள்ள இரண்டு நன்னீர் கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவியுடன் இந்த இரண்டு கிணறுகளும் நேற்று இறைத்து சுத்தம் செய்யப்பட்டன.

கைத்தொழில் நிலையக் கட்டடங்களைப் புனரமைத்து அதனை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

## கொடிகாமத்தில் சிவில் அலுவலகத்தை கட்டளைத் தளபதி திறந்து வைத்தார்

கொடிகாமம், ஜூலை 2

தென்மராட்சி மற்றும் வடமராட்சி பிரதேச மக்களுக்கான 'சிவில்' அலுவலகம் 52 ஆவது படையணியினரால் நேற்று முன்தினம் கொடிகாமம் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிக்கேடியர் லால் பெரேரா இந்த அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி, கரவெட்டி, மருதங்கேணி ஆகியவற்றின் பிரதேச செயலர்கள், படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களில் உள்ள பத்து விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்களுக்கும் இராமவில் நலன்புரி முகாமில் தங்கியுள்ள உயர்தரம் கல்வி கற்கும் 3 மாணவர்களுக்குமாக 7 மாணவர்களுக்கு புதிய சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

தென்மராட்சி , வடமராட்சி பிரதேச மக்கள் தமது பிரச்சினைகளை இந்த சிவில் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யலாமென படை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-207-131)

## வடக்கு - கிழக்கு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரிவில் 156 பயனாளிகள் தெரிவு

நவாலி, ஜூலை 2

வடக்கு- கிழக்கு மீள்நிர்மாணத் திட்டத்தின் (நேர்ப்) கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 156 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவின் கூழாவடி கிராமத்தில் 18 பேரும், சாவற்கட்டு கிராம சேவையாளர் பிரிவில் 83 பேரும், நவாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 22 பேரும், உயரப்புலம் கிராமசேவையாளர் பிரிவில் 133 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய பெயர் விவரங்கள் பொதுமக்கள் பார்வைக்காக பிரதேச செயலகம் உட்பட பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பார்வையிட்ட பின்னர் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 14 நாள்களுக்குள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், 'நேர்ப்' திட்டம், யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர், வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம், 38/4A மக்கெஸ்சர் அடை வீதி, உவர்மலை, திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-100)

## மண்டைதீவுப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் வழமைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மண்டைதீவுப் பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோகம் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பவுசர் வாகனங்கள் மூலம் தற்போது குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

கடந்த வாரத்தில் பவுசர் வாகனங்கள் குறிகாட்டுவான் துறைக்கான குடிதண்ணீர் விநியோகப்பணியில் ஈடுபட்டு வந்தன.

இந்தச் சேவையால்தான் மண்டைதீவுக்கான குடிதண்ணீர் வழங்கும் சேவை பாதிக்கப்பட்டன என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## இளவாலைப் பொலிஸ் நிலையத்தின் நடமாடும் சேவை நாளை மாதகலில்

பண்டத்தரிப்பு, ஜூலை 2

இளவாலை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மாதகல் சென். யோசவ் வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணிவரை பொலிஸ் நடமாடும் சேவை நடைபெவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் வாகனப் போக்குவரத்துப் பத்திரம், தொலைந்து போன தேசிய அடையாள அட்டைக்கான பொலிஸ் அறிக்கை என்பன பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலவச வைத்திய சேவையும், தொற்றுநோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான ஆலோசனையும் வழங்கப்படும். தென்னை அதிகார சபை மூலம் நல்லின தென்னங்கன்றுகளும் இதில் இலவசமாக வழங்கப்படும்.

அத்துடன் கண் பரிசோதித்து இலவசமாக மூக்குக்கண்ணாடியும் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

விசேட நிகழ்வாக பொலிஸ் இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற உள்ளதென இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஆர்.பி. சேனநாயக்கா தெரிவித்தார். (50-130)

## அனைத்துலகக் கூட்டுறவுத் தினவிழா போட்டிகள் இவ்வாரம் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜூலை 2

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 88 ஆவது அனைத்துலகக் கூட்டுறவுத் தினவிழாவை முன்னிட்டு நடத்தும் போட்டிகள் இவ்வாரம் ஆரம்பமாகியுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியும் மறுநாள் காலை 6.30 மணிக்கு சைக்கிள் ஓட்டப்போட்டியும் ஆரம்பமாகி நடைபெறும்.


5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கட்டுரைப் போட்டியும் முற்பகல் 11 மணிக்குப் பேச்சுப் போட்டியும் பிற்பகல் 2 மணிக்குக் கவிதைப் போட்டியும் தொடர்ந்து விநாடி வினாப் போட்டியும் இடம்பெறும்.




இந்தப் போட்டிகளில் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மட்டும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிடக் குழுப்பாடல், நாடகம், நடனம் மகளிர்களுக்கான ஐசிங்கேக் தயாரிப்பு போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் சங்கப் பணியாளர் மற்றும் அங்கத்தவர்கள் கலந்துகொள்ள முடியும்.

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நான்கு பிரிவுகளாக நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும். (50-224-135)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று கல்லூரியில் இரத்ததானம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மாணவர்களை வைத்திய நிபுணர் பரிசோதிப்பதை முதல் படத்திலும் மாணவர்கள் இரத்ததானம் வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தியும் காணப்படுகின்றார். (படங்கள்: சுகந்தன்)

# மாகாணசபை தேர்தலில் கே.பியை நிறுத்துவதற்கு அரசு முஸ்தீபு

கடந்த 30.06.2010 அன்று கொழும்பு டெய்லிமிரர் பத்திரிகையில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியிருந்த கட்டுரையின் தமிழாக்கம் இது.

குமார் பத்மநாதன் அல்லது கே.பி. என்றழைக்கப்படும் விடுதலைப் புலிகளின் தலைவர் விடுதலை செய்யப்படுவார் என்று பலர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும் அவர் விடுதலை செய்யப்பட்டு வெகுகாலம் ஆகிவிட்டமைதான் உண்மை.



அவர் விடுதலை செய்யப்பட்டு விட்டார் என்பது புலம் பெயர்ந்த புலிகள் தலைவர்களுடன் அவர் வடக்குக்கும் கிழக்குக்கும் பயணம் மேற் கொண்டிருந்த போதுதான் வெளிச்சத்துக்கு வந்தது. இந்தப் பயணத்தை முழுமையாகவே கே.பி. தான் ஏற்பாடு செய்திருந்தார்.

தமிழ் புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர் - அதிகார பூர்வமற்ற தலைவர் என்ற முறையில் அவர் இந்த ஏற்பாடுகளை செய்திருந்தார்.

அவர் இன்னமும் அதிகாரப் பூர்வமாக அந்த அமைப்பின் தலைவராக நியமிக்கப்படவில்லை.

### மரத்தை வைத்தே மரங்களை அழித்தல்

காட்டிலுள்ள மரங்களை அழிக்க வேண்டுமானால் அதற்கு வேறு ஒரு

# த.தே.கூட்டமைப்புக்கு இந்திய ஆதரவு உண்டு

மரத்தைத்தான் பயன்படுத்தியாக வேண்டும் என்பது பழமொழி. அவ்வாறுதான் பிரபாகரனின் ஆயுதம் தரித்த பலத்தினை அழித்தொழிப்பதற்கு அரசாங்கத்தால் கருணா பயன்படுத்தப்பட்டார். அவ்வாறுதான் கே.பி.யால் கட்டி வளர்க்கப்பட்ட பிரபாகரனின் சர்வதேச வலைப்பின்னலை அழித்தொழிப்பதற்கு அரசு கே.பி யையே பயன்படுத்த முற்பட்டுள் ளது.

பிரபாகரனின் மரணத்தின் பின்னர் தமிழ் புலிகள் அமைப்புக்கு கே.பியே அதிகாரப்பூர்வ தலைவராக இருந்து வந்துள்ளார். அவர் தலைமைப்பதவி ஏற்றது தொடர்பாக பல்வேறு மாறுபாடான கருத்துக்கள் எழுந்த போதிலும் அவரை எதிர்த்து எவரும் சவால் விட்டதாகத் தெரியவில்லை. அதேபோல் கே.பி.கைது செய்யப்பட்டதின் பின் அவருக்குப் பதிலாக எவருமே நியமிக்கப்படவும் இல்லை. எனவே இலங்கை அரசு கே.பியை தற்போதைய புலிகளின் தலைவராக வெளிப்படுத்தி புலம் பெயர்ந்த தமிழ் புலிகள் ஒருமைப்பாட்டை சீர்குலைக்க முயலுகிறது என்று கருத இடமுண்டு.

கே.பி. விடுதலையானதையடுத்து அவர் செய்த முதல் காரியம் வடக்கு, கிழக்கிற்கு புலம் பெயர்ந்த புலிகளின் தலைவர்கள் மேற்கொள்ளவிருந்த பயணத்தில் பங்கேற்குமாறு புலிகளின் புலம்பெயர் அரசின் தலைவர் ருத்திரகுமாரனையும் வந்து கலந்து கொள்ளும்படி அழைப்புவிடுத்தமையாகும். ஆனால் இந்த அழைப்பை ருத்திரகுமாரன் நிராகரித்துவிட்டார்.

கே.பிக்கும் ருத்திரகுமாரனுக்கும் இடையில் நெருங்கிய நல்லுறவு இருந்த போதிலும் புலம்பெயர்ந்த புலி களின் அமைப்பை ஒழித்துக் கட்டு வதற்கு இலங்கை அரசு கே.பியைப் பயன்படுத்தக் கூடும் என்ற எண்ணத்திலேயே ருத்திரகுமாரன் இந்த அழைப்பை நிராகரித்திருந் தார்.



ஆரம்பத்தில் கே.பிக்கும் ருத்திரகுமாரனுக்கு மிடையிலான தொடர்புகளைப் பயன்படுத்தி ருத்திரகுமாரனுக்கும் புலம் பெயர் ஆதரவாளர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகளை உருவாக்கிவிட இலங்கை அரசு முயற்சி செய்தது. இந்த விடயத்தினை மனதில் கொண்டு ருத்திரகுமாரனுட்ன் பேச்சு நடத்தும்படி கே.பி. பல தடவைகள் அரசை வற்புறுத்தியிருந்ததாகத் தெரிகின்றது. ஆனால் இலங்கை அரசுக்கு இதில் அதிக அக்கறை இருக்கவில்லை.

ருத்ரகுமாருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி அமெரிக்க - இலங்கை அரசாங்கத்தை நெருக்கத் தொடங்கியதால் அரசு சந்தேகமடையத் தொடங்கியது. அதிகாரப் பூர்வமாக அவருக்கு அங்கீகாரமளிப்பதில் தயக்கம் காட்டத் தொடங்கியது.

கே.பி. புலம்பெயர் புலிகள் ஆதரவு அமைப்பை சீர்குலைக்க அரசுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் அதேவேளை, தாம் ஒரு சுதந்திரமான மனிதர் என்பதாகக் காட்டிக் கொள்ள முயன்று வருகிறார். ஆனால் அவரைப் பயன்படுத்துவதானால் அவர் விடுவிக்கப்பட வேண்டும். அதனை நியாயப்படுத்தவும் வேண்டும் என்பதை அரசு அறியும். அதனால் தான் புலிகளுக்கு எதிரான நீதிமன்ற வழக்குகளில் கே.பி. ஒரு சாட்சியாக எதிர் காலத்தில் பயன்படுத்தப்பட போகிறார் என்று அரசு அறிவித்து வருகின்றது. அதன் மூலம் அரசு என்னத்தை வெளிக்காட்ட விரும்புகிறது என்றால், போரின் இறுதிக்கட்ட நிகழ்வுகளின் போது வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக உயிருடனிருக்கும் புலித் தலைவர்களில் கே.பி.க்கு மட்டுமே விவரம் தெரியும் என்பதே. எனவே அரசுக்குச் சார்பாக அவர் ஒரு சாட்சியாகப் பயன்படுத்தப்படக் கூடும். ஆனால் கே.பி. அப்படியான ஒரு செய்கைக்கு விருப்பமில்லாமல் இருப்பதாகவே செய்திகள் கூறுகின்றன. ஏனென்றால் அப்படியான ஒரு செயற்பாடு புலம் பெயர் புலிகள் மத்தியில் எதிர்ப்புக்களை தோற்றுவிக்கும். அவர் தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக குற்றச்சாட்டுகள் எழக்கூடும். அதனால் இலங்கை அரசுக்கு அவர் எந்த வகையில் உதவியும் செய்ய முடியாமல் போய்விடும்என்று அவர் சுட்டிக்காட்டியிருக் கிறார்.

### முதல்வர் பதவிக்கு கே.பியை நியமிக்க

வடக்கில் நடைபெறவிருக்கும் மாகாணசபை தேர்தலின் போது முதல் அமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவதற்கு கே.பியை நிறுத்த இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக இந்தியாவிலும் கூட கதை அடிபடுகின்றது.

கே.பி. அரசியலில் இறங்குவாரா இல்லையா என்பது நிச்சயமாகத் தெரியாவிட்டால் கூட அவரைப் பயன்படுத்தி வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அரசு விரும்பக் கூடும். முகாம்களிலுள்ள புலிகள் மத்தியில் கே.பி. மிக பிரபல்யமாயுள்ளவராக விளங்குகிறார் என்று கூறப்படுகின்றது. அவர்களைச் சந்திப்பதன் மூலம் அவர்கள் மத்தியில் நிலவும் விரக்தி மனப்பான்மையை நீக்கி விடவும் மனங்களை மாற்றிவிடவும் விரும்புகிறார் என்று கூறப்படுகின்றது. அதனால் தான் அவரைப் பயன்படுத்தி வடக்கில் தேர்தலில் வெற்றி காணலாம் என்று அரசு நினைக்கின்றதுபோலும்.

### இந்தியாவுடன் நெருக்கமாக த.தே.கூட்டமைப்பு

இலங்கையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை செயல்படுத்த வேண்டும் என்று விரும்பும் இந்தியா அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களில் வெற்றிபெற வேண்டும் என்று விரும்புகின்றது. இந்த அடிப்படை யில் இந்தியாவும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் நெருக்கமாக செயல்பட்டு வருகின்றன.

இலங்கை அரசாங்கம் கே.பியைப் பயன்படுத்தி அவர் போட்டியிட



விரும்பாவிட்டாலும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மாகாணசபை தேர்தலில் தோல்வியடையச் செய்ய விரும்பலாம். இந்த நிலையை எதிர்கொள்ள எம்மாதிரி வியூகத்தையும் செயற்பாடு களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புப் பயன்படுத்தப் போகின்றது என்பது இன்னமும் மர்மமாகவே இருக்கின்றது.

கே.பி. முன் முயற்சியெடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினை தோற்கடித்து விடுவாரானால் அத்தோல்வி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அன்று இந்தியாவுக்கே பலத்த தோல்வியாக அமைந்துவிடும்.

வடக்கு - கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கத்தில் இந்தியாவானது தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்குச் சரியான அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் என்று தேர்ந்தெடுத்துள்ளது. ஏனென்றால் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் புலிகளுக்கு என்னதான் அனுதாபம் கொண்டிருந்தாலும் அவர்களின் ஆயுதப் போராட்டத்தில் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

இந்த நிலைமைக்கு நேர் மாறாக இலங்கை அரசானது புலிகளின் ஆயுதப் போராட்டப் பிரிவைச் சேர்ந்தவர்களான கருணா, கே.பி, முன்னாள் போராளித் தலைவர் தேவானந்தா போன்றவர்களைக் கொண்டே தமிழ் தேசியக் கூட்டமைப்பினை தோல்வியுறச் செய்ய விரும்புகின்றது.

இந்தப் போட்டியில் யார் வெல்வார்கள் என்பதை இப்போது எதிர்வு கூற முடியாது. (ப)



மல்லாகம் புனித சதாசகாய மாதா உற்சவத்தின் பெருவிழாத் திருப்பலியை யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் நிறைவேற்றுவதையும் அருகில் பங்குத்தந்தை அருட்திரு. நிருபன் நிஷானந்த் நிற்பதை முதற்படத்திலும் திருவிழாவில் பாடகர் குழாம் பாடல் இசைப்பதை இரண்டாவது படத்திலும் சகாய அன்னையின் திருச்சொரூபம் பவனியாக எடுத்துவரப்படுவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள் : நேசன்)

# காணாமல் போனவர்கள் பற்றி அறியக் குழு: தமிழ்க் கூட்டமைப்புக் கோரிக்கை புறக்கணிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 02

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து காணாமல் போனவர்கள் தொடர்பான உண்மை நிலைமையை அறிவதற்காக விசாரணைக் குழு அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்திருந்தனர்.

ஆனால், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழு, ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இவ்விசாரணைக் குழு அமைக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக த.தே.கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவிடம் கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு:-

எமது மாவட்டத்திலிருந்து காணாமல் போனோரின் உறவினர்கள் அண்மையில் எங்களைச் சந்தித்து காணாமல் போன தங்களின் உறவினர்களை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியிருந்தார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து காணாமல் போனோர் தொடர்பான தற்போதைய உண்மை நிலையை கண்டறிவதற்காக விசாரணைக் குழுவொன்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைக்கப்படவேண்டும் என்று மட்டு. மாவட்ட அரச அதிபரிடம் எழுத்து மூலம் கோரியிருந்தோம்.

இக் கடிதத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான நாங்கள் மூவரும் கையொப்பமிட்டிருந்தோம்.

எனினும், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இக் கூட்டத்திலும் எங்களது கோரிக்கையை முன்வைத்தோம். அதற்கு அடுத்த கட்டமாக ஜனாதிபதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கும் போது ஜனாதிபதியிடம் கூறுமாறு இக்கூட்டத்துக்கு சமுகம் கொடுத்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதிலளித்தார்.

இதைவிட இக்கூட்டத்தில் எங்களது கோரிக்கைக்கு வேறு எவரும் பதில் தரவும் இல்லை. விசாரணைக் குழு அமைக்கவுமில்லை.

இம் மாவட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவது தொடர்பாக நடைபெற்ற இக் கூட்டத்தில் இம் மார்வட்ட மக்களின் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றான இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படாதது மிகவும் கண்டனத்துக்குரியதாகும். இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடம் கூறுவோம். - இவ்வாறு செல்வராசா தெரிவித்தார். (ளி)

# 10 லட்சம் ரூபா மானிய உரமூடைகளை பதுக்கி வைத்திருந்த 4 சந்தேக நபர்கள் கைது!

அம்பாறை, ஜூலை 02

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைப்பகுதியில் 'மஹிந்த சிந்தனை'த் திட்டத்தினூடாக - மானிய விலையில் வழங்கப்பட்ட உரமூடைகளை பதுக்கி வைத்திருந்த நால்வரை சம்மாந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான 124 உரமூடைகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.தசநாயக்கா தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட உரமூடைகள் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

6ஆயிரத்து 500 ருபா பெறுமதியான உரமூடைகள் 'மஹிந்த சிந்தனை'த் திட்டத்தில் 350ரூபாவுக்கு வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் சிலர் உரமூடைகளைப் பதுக்கிவைத்து மோசடிசெய்து 2ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)




# கதிரவெளி பொது நூலகம் சீராக இயங்குவதில்லை

## பொதுமக்கள் விசனம்

மட்டக்களப்பு, ஜூலை 02

கதிரவெளி பொது நூலகம் வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டும் திறக்கப்படுகிறது. அத்துடன், தினசரிப் பத்திரிகைகள் சரியாக இருப்பதில்லை. இதனால், பிரதேச மக்கள், மாணவர்கள், வாசகர்கள் இந்த வாசிகசாலையை உரிய முறையில் பயன்படுத்த முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது நூலகம் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் திறக்கப்படுவதுடன் மதியம் 12 மணிக்கு நூலகத்தை பூட்டி விட்டு இதன் உத்தியோகத்தர்கள் சென்று விடுகின்றனர் - என்று முறையிடப்பட்டுள்ளது.

தினசரிப் பத்திரிகைகள் சரியான முறையில் இல்லாததுடன் அதிகமான புத்தகங்கள் இருந்தும் மாணவர்கள், வாசகர்கள் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

இந்நிலை தொடர்பாக பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருவதுடன் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்நூலகம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.யோகேஸ்வரன் தெரிவித்தார். (ளி)

# சிறுவர் துஷ்பிரயோகம்; கல்முனையில் கலந்துரையாடல்

அம்பாறை, ஜூலை 02

கல்முனை,சம்மாந்துறை வலயப் பாடசாலைகளில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சிறுவர்துஷ்பிரயோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை கல்முனை மனிதஉரிமை ஆணைக் குழு பணிமனையில் நடைபெற்றது.

மனித அபிவிருத்தித்தாபனமும், இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப்பிராந்தியப் பணிமனையும் இணைந்து இக்கலந்துரையாடலுக்கான அழைப்பை விடுத்துள்ளன.

கல்முனை, சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் சிறுவர், பெண்கள் பிரிவு பொறுப்பாளர்கள், கல்முனைப்பிராந்திய சிறுவர் நன்னடத்தைப் பொறுப்பதிகாரி, கல்முனை சம்மாந்துறை பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் உரிய தகவல்கள், ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ளி)

# கணவனின் கத்திக்குத்தில் மனைவி பலி: பதுளையில்

கொழும்பு,ஜூலை 02

குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் கணவன் மனைவியை கத்தியால் குத்திக் கொன்றார் எனக் கூறப்படும் சம்பவமொன்று பதுளை - கந்தகொல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கான பெண் (வயது -32) உடனடியாக பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பிரதேசவாசிகள் பதுளை பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரான அப்பெண்ணின் கணவனை கைதுசெய்தனர். விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ளி)

# அரசமைப்பு திருத்தம் தொடர்பான யோசனைகள் ஒருவாரத்திற்குள் அரசிடம் கையளிக்கப்படும்

## மலையகத்தின் பிரதான கட்சிகள் தகவல்

கொழும்பு, ஜூலை 02

அரசமைப்பு திருத்தம் தொடர்பாக மலையக கட்சிகளின் யோசனைகள் இன்னும் ஒருவாரத்தில் அரசிடம் கையளிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசமைப்பு திருத்தத்தின் போது, கவனத்தில் எடுத்துக் கொள்வதற்காக தமது யோசனைகளை முன்வைக்க உள்ளன என மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன.




இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட சில கட்சிகள் இணைந்து இந்த யோசனைகளைத் தயாரிக்கவுள்ளன என்றும்-

அந்த யோனைகளைத் தயாரிக்கும் பொறுப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் பீ.பீ.தேவராஜிடம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்யும்போது, மலையகப் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படலாம்.

இதனால் மலையகக் கட்சிகள் இது குறித்து அதிக கவனம் செலுத்தி வருகின்றன என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஏற்கனவே முன்னாள் அமைச்சர் தேவராஜிடம் சில மலையக கட்சிகள் தமது யோசனைகளையும், கருத்துக்களையும் முன்வைத்துள்ளன.

ஒரு வாரகாலத்திற்குள் சகல யோசனைகளும் தயாரிக்கப்பட்டு, அரசிடம் கையளிக்கப்படும் என - இ.தொ.கா.வின் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ளி)

# ஹற்றன் கல்வி வலயத்திற்கான தமிழ்மொழிதினப் போட்டியில் மாற்றம்

கொழும்பு,ஜூலை 02

ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் நடைபெறவிருந்த ஹட்டன் கல்வி வலயத்திற்கான தமிழ்மொழிதினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன என ஏற்பாட்டுக்குழு தெரிவிக்கின்றது.

போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை என அதிபர்கள் கேட்டுக் கொண்டதற்கமைய போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இதற்கமைய போட்டிகள் எதிர்வரும் ஆறாம், ஏழாம் திகதிகளில் ஹட் டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் நடைபெறும்.

போட்டி நிகழ்ச்சிகளில் முதல்நாள் பாவோதல், பேச்சு உட்பட எழுத்தாக்கம் நடைபெறும் எனவும், ஏனைய போட்டிகள் யாவும் மறுநாள் நடைபெறும் எனவும் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (ளி)

# அரணாயக்கவில் காட்டுப்பன்றிகளால் பெரும்தொல்லை: பொதுமக்கள் அச்சம்

அரணாயக்க தொகுதியில் வில்பொல, கெட்டபேரிய போன்ற கிராமங்களில் காட்டுப்பன்றிகளின் தொல்லை பெருகியுள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிப் பாத்திகளை அழித்து கபளீகரம் செய்யும் இந்தப் பன்றிகள் கிழங்கு வகைகளையும் லாவகமாகப் பிடுங்கி உண்கின்றன எனப் பிரதேசவாசிகள் விசனிக்கின்றன.

இந்தப் பன்றிகள் இரவு நேரங்களில் சர்வ சாதாரணமாக நடமாடுவதால் தாம் பெரும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர் என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனவே, இது தொடர்பில் வனவள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட பகுதி மக்களின் அச்சம் தீர்க்க வேண்டும் என் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ளி)

# கேகாலை, மாவனல்லை பிரதேசங்களில் வாசனைத் திரவியங்களுக்கு கூடியவிலை

கண்டி, ஜூலை 02

கேகாலை, மாவனல்லை நகரங்களில் வாசனைத் திரவியங்களுக்கு நல்ல கிராக்கி நிலவுகிறது.

இதனால் கராம்பு, மிளகு, ஏலம், சாதிக்காய் ஆகியவற்றை உற்பத்தி செய்வோர் நல்ல வருமானம் பெற்று வருகின்றனர்.

கொழும்பிலுள்ள வாசனைப் பொருள் ஏற்றுமதியாளர்கள் பலரும் உற்பத்திப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று உற்பத்தியாளர்களிடம் அதிகவிலை கொடுத்து இவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (ளி)

# பதுளை நகரில் சாப்புச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரிக்கை

பதுளை, ஜூலை 02

ஊவா மாகாணத்தின் தலைநகரான பதுளையில் சாப்புச் சட்டம் பல வருடங்களாக அமுல்படுத்தப்படுவதில்லை என தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுவிடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

எனினும், பதுளை மாவட்டத்தின் பல பிரதான நகரங்களில் சாப்புச் சட்டம் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

இருந்தும் பதுளை மாநகரில் மட்டும் இச்சாப்புச்சட்டம் அமுல்படுத்தப்படாமலிருப்பது விசனத்திற்குரியது என கடைச்சிப் பந்திகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ளி)

# வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்த்தப்படுபவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க யு.என்.எச்.சி.ஆர். இணக்கம்

கொழும்பு, ஜூலை 02

வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்த்தப் படுபவர்களுக்கு ஒரு தொகை வீடுகளை நிர்மாணித்து வழங்க யு.என்.எச்.சி.ஆர். இணக்கம் தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன்தினம் தனது அமைச்சில் யு.என்.எச்.சீ.ஆர். பிரதிநிதி ஜெனிபர் பெகோனிஸ் உட்பட உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளுட னான பேச்சுகளின்போது பிரதியமைச்சர் மீள்குடியமர்த்தப்படுபவர்களின் வீட மைப்புப் பிரச்சினைகளை எடுத்து விளக் கினார். அவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து, வடக்கு, கிழக்கில் குறிப்பிட்ட மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு யு. என்.எச்.சி.ஆர். நிதியுதவியில் வீடுகளை நிர்மாணித்து வழங்க ஜெனிபர் பெகோ னிஸ் இணக்கம் தெரிவித்தார்.

இந்த நிதியுதவிக்கு பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி தனது நன்றியைத் தெரி வித்துக்கொண்டார். (சி)


## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல புடைவைக் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள/பழக விரும் பும் ஆண்/பெண் வேலை ஆள்களும், சிட்டை எழுதுநரும் (ஆண்) உடன் தேவை.

தொடர்புகளுக்கு:-
021 222 9286


## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 34
திகதி - 30.06.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **Q** அதிர்ஷ்ட இலக்கம் **02** வெற்றி இலக்கம் **7 8 6 9 5**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q 02 7 8 6 9 5 | ரூ. 12,207,794.00 | - |
| 1 பரிசு | 02 7 8 6 9 5 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 7 8 6 9 5 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 8 6 9 5 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 6 9 5 | ரூ. 1,000.00 | 251 |
| 5 பரிசு | 9 5 | ரூ. 50.00 | 2494 |
| 6 பரிசு | 5 | ரூ. 20.00 | 24217 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 7 8 6 9 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 7 8 6 | ரூ. 100.00 | 247 |
| 9 பரிசு | 7 8 | ரூ. 50.00 | 2544 |
| 10 பரிசு | Q | ரூ. 20.00 | 9869 |
| 11 பரிசு | Q 02 | ரூ. 100.00 | 1109 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,896,220.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 12,590,395.00

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவபாக்கியம் சுப்பிரமணியம்**

சிராத்தம்:- விகிர்தி வருடம் ஆனிமாதம் அபரபக்க ஷஷ்டி திதி
[02.07.2010 வெள்ளிக்கிழமை]

மண்ணகம் 26★12★1937
விண்ணகம் 24★06★2008

அன்னையே ஆண்டு இரண்டானாலும் உமது நினைவு எமது நெஞ்சைவிட்டு நீங்காது நிலகண்டன் பாதம்பெற்று விட்ட உமது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பணிகிறோம்.

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய். (100091)

என்றும் நினைவுகூரும்:
குடும்பத்தவர்.

## மரண அறிவித்தல்



### இரத்தினம் சண்முகநாதன் (சந்திரன்)

வீரமனையைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சண்முகநாதன் 30.06.2010 புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சாராதாஅம்பாளின் அன்புக் கணவரும், சர்மிளா (ஜேர்மனி), சகிலா, சர்மினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாரூபன் (ஜேர்மனி), ஈஸ்வரதாஸ் (ஆசிரியர், அல் அமாம் முஸ்லிம் மகா வித்தியாலயம், மினுவாங்கொட), சிவச்சந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்மாவதி, சாரதாதேவி, சொர்ணம்மாதேவி, மல்லிகாதேவி காலஞ்சென்றவர் களான ஏரம்பமூர்த்தி, சிவலிங்கம் மற்றும் தவராசா, சுசிலாதேவி (நோர்வே), காலஞ்சென்றவர்களான லலிதாதேவி, இந்திராதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரவிந் (ஜேர்மனி), பிரசன்னா (ஜேர்மனி), பிரசாத் (ஜேர்மனி), நிருஷ், தீப்பிகா (நோர்வே) ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சண்முகநாதன் (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (100153)

## சென்.ஜோன்ஸ் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந் தப் பரிசளிப்புவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாக விருக்கும் இவ்விழாவில் பிரதம விருந்தி னராக அவுஸ்திரேலியாவிலுள்ள குயீன்ஸ் லாந்து ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் டாக்டர் நற்குணம் கேதீசனும் குயின்ஸ்லாந்து ரவுன்ஸ்வில் யுனிஹெல் மருத்துவ நிலையத்தில் பணி புரியும் பொது மருத்துவர் டாக்டர் திரு மதி பிரசானி கேதீசனும் கலந்து கொள்வர்.

கல்லூரி முகாமையாளரும் குரு முதல் வருமான வண.எஸ்.பி.நேசக்குமார் தலைமை வகிப்பார். (ப)

## தற்செயல் நிவாரண காசோலைகள் வந்தன

நவாலி, ஜூலை 02

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பித்த பின்வருவோருக்குக்கான கொடுப்பனவுக் காசோலைகள் வந்து சேர்ந்துள்ளன.

இவர்களை உடன் பிரதேச செயலகத் திற்கு வந்து பெற்றுச் செல்லுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

சி.செபமாலை (புனித செபமாலை அன்னை வீதி, பண்டத்தரிப்பு), தி.சுகந்தி (பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாய்), அ.சித்திராதேவி (நவாலி கிழக்கு, மானிப் பாய்). (50-100)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு விஷேட பூஜை அபிஷேகம் நடைபெற்று பொங்கல் இடம்பெறும். (204-224)


## மணமகள் தேவை

46 வயதுடைய டென்மார்க் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு 35லிருந்து 43 வயதிலான மணமகள் தேவை.
[விவாகரத்துப் பெற்ற மற்றும் விதவைகளும் விண்ணப்பிக்கலாம்].
தொடர்புகளுக்கு:- 0773844968

## தவறிவிட்டது

முத்தையா ஜெயந்தன் என்பவரது 156-4091 என்னும் இலக்கமுடைய Honda மோட்டார் சைக்கிளின் புத்தகம் மாவிட்டபுரம், சுதுமலை, திருநெல்வேலிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே:- 0774395297

## தேவை

கைதடியில் இயங்கும் எரிபொருள் நிலையத் திற்கு ஓய்வுபெற்ற கணக்காளர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.
எரிபொருள் நிலையம், கைதடி.

## வேலை ஆள்கள் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் ஓரளவு படித்த பெண்கள்
[அனுபவமுள்ள/பழக விரும்புபவர்கள் தேவை. நேரில் வரவும்]
லைடன் புடைவை நிலையம்
ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்).


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 1936.04.01

ஆண்டவன் அடியில்: 2004.07.07

அமரர்
**வேலுப்பிள்ளை குமாரசாமி**

திதி: 02.07.2010
(தேய்பிறை சஷ்டி)

ஆறு ஆண்டுகள் என்ன
ஆயிரம் ஆண்டானாலும்
அழியாது உம் நினைவு
எம் மனதில்
தந்தைக்கு இலக்கணமாய்
தமிழுக்கு நல்மகனாய்
எமக்கெல்லாம் நல் ஆசானாய்
இருந்த எம் அன்புத் தெய்வமே!
உம் ஆத்மா சாந்தி அடையப்
பிரார்த்திக்கின்றோம்



குடும்பத்தினர்
கைதடி மேற்கு, கைதடி.

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 517
சீட்டிழுப்பு திகதி: 30.06.2010

வெற்றி எழுத்து: **N** வெற்றி இலக்கங்கள்: **35 40 42 45**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 16,137,345.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 220 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 420 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10408 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6052 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 151190 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 24192 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,050,520.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 16,314,120.80

## முக்கிய அறிவித்தல்

### கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி

30.04.2009ஆம் திகதியின் மேற்படி எமது சங்கத்தின் மூல தனக் கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாகக் கீழ்வரும் விவ ரங்கள் தொடர்பில், சங்க நடவடிக்கையுடன் தொடர்பு கொண் டுள்ளவர்களிடமிருந்து 30.04.2009இல் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்தி சங்கத்தின் தலைவர்/பொது முகாமையாளர் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 10.07.2010 ஆம் திகதிக்கு முன் நேரடி யாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட் டுக்கொள்ளப்படுகின்றது.

I) 01 வியாபார வருமதிகள் (சங்கத்திற்கு)
02) வியாபாரச் சென்மதிகள் (சங்கத்திடமிருந்து)
03) சங்கத்திடம் பெற்றுக்கொண்ட கடன்
04) சங்கத்திற்கு வழங்கிய கடன்
05) சங்கத்திற்கு வழங்கிய ஏனைய சென்மதிகள்
06) சங்கத்திடம் பெற்றுக்கொண்ட ஏனைய வருமதிகள்
07) மற்றும் வரவேண்டிய முற்பணங்கள், செலுத்த வேண்டிய முற்பணங்கள்.

II) சங்கத்தின் கிராமிய வங்கியில் வைப்புச் செய்தவர்கள் (நிலையான வைப்புக்கள், சேம வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்கள்) தங்களது சேமப் புத்தகங்களை சங்கத்தில் சமர்ப் பித்து மேற்படி 30.04.2009ஆம் திகதியின் மீதியினை உறுதிப் படுத்திக் கொள்ளவும்.

III) சங்கத்தின் கிராமிய வங்கிகளினூடாகவும் நேரடியாகவும் கடன்பெற்றவர்கள் 30.04.2009 இல் சென்மதிமீதிகளை உறுதிப் படுத்த உறுதிச் சான்றுகளைச் சமர்ப்பித்தல்.

IV) மற்றும் சங்கத்தின் வியாபார நடவடிக்கையோடு தொடர் புடைய விடயங்கள் இருப்பின் அது பற்றியும் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும்.

திரு.ச.மோகனபவன்
தலைவர்,
கரைச்சி தெ.ப.நோ.கூ.சங்கம்.

திரு.செ.பாலேந்திரன்
பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெ.ப.நோ.கூ. சங்கம்.

# சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை




*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இவரின் பின்னர் அதிபராக பொறுப்பேற்ற தம்பிமுத்து பாடசாலையின் பௌதீக வளங்களை அதிகரிப்பதில் பெரும் பங்கு வகித்துள்ளார். இவரின் முயற்சியினால் வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் புதிதாகக் கட்டப்பட்டதுடன் வடக்குப் பக்கமாக மதில் மற்றும் கிணறு, மலசலகூடத் தொகுதி, நீர்த்தாங்கி என்பன அமைக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் 2002 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் பாடசாலையின் பௌதீக வளங்கள் பெருமளவில் அழிவடைந்த நிலையில் காணப்பட்டன. பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்து காணப்பட்டதால் அருகில் உள்ள தேவாலயக் கட்டடத்தின் ஒரு பகுதியில் பாடசாலையை இயக்கிக்கொண்டு பாடசாலை கட்டட புனர்நிர்மாணப் பணிகளில் அதிபர் ஈடுபட்டார். அதிபரின் பெரும் முயற்சியினால் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் பாடசாலை இயங்கத் தொடங்கியது.

2005 ஜூலை மூன்றாம் திகதி அதிபராகப் பதவியேற்ற ஜெயக்குமார் கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் பெரும் அக்கறையெடுத்ததுடன் பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களைப் பெறுவதிலும் அக்கறை காட்டினார். இவர் காலத்தில் பாடசாலை வளாகத்தில் குழாய்க்கிணறு, மின் இணைப்பு, சமையல் அறை, விளையாட்டு முற்றம் ஆகியவற்றை அமைக்கப் பாடுபட்டு வெற்றியும் கண்டார்.

இப் பாடசாலையில் கல்வி பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் கத்தோலிக்கர்களாக இருந்ததால் பாடசாலை வளாகத்தில் வழிபாட்டுத்தலம் அமைக்க வேண்டுமென கல்விச் சமூகத்தினருடன் தொடர்புகொண்டு பெரு முயற்சி எடுத்தார். இவரது முயற்சியின் பயனாக அப்போதைய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி அ.வேதநாயகம் மற்றும் அப்போதைய சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்பணி யூட் அமலதாஸ் அடிகள் ஆகியோரின் ஒத்துழைப்பினால் தேவாலய புனித வின்சன் டிபோல் சபையின் அனுசரணையுடன் 2008 ஜனவரி மாதம் பாடசாலை வளாகத்தில் வழிபாட்டுத் தலம் அமைக்கப்பட்டது.

புனித சவேரியார் குருமட அதிபர் அருட்திரு மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளாரால் மந்திரிக்கப்பட்ட புனித மரியாளின் திருச்சொரூபம் பீடமேற்றப்பட்டது. புனித மரியாளின் திருச்சொரூபம் பீடமேற்றும் நிகழ்வு பங்கு மக்களால் விழாவாக அனுஷ்டிக்கப்பட்டது.

புனித மரியாளின் திருச்சொரூபம் பீட மேற்றப்பட்ட தினமான மே 31 ஆம் திகதி வருடாவருடம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றைய தினம் புனித லிகோரியார் தேவாலயத்திலிருந்து செபமாலை பவணி ஆரம்பமாகி இவ் வழிபாட்டுத் தலத்திற்கு வந்த பின்னர் சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றுவருவது சிறப்பம்சமாகும்.

வகை 3 ஐச் சேர்ந்த இப் பாடசாலையில் தற்போது பதில் அதிபர் திருமதி நளாயினி சிவனேசன் அவர்களால் கல்விச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றனர். தென்மராட்சி கல்வி வலயத்தில் சகல வசதிகளும் கொண்ட ஆரம்பப் பாடசாலையாகச் செயற்பட்டு வருகிறது.

இப்பாடசாலைக்கு கணனிக் கூடம் கலையரங்கம், பிரார்த்தனை மண்டபம் என்பன தேவையாக உள்ளன.

வரலாற்றுப் பெருமைமிக்க இப்பாடசாலைக்கு புனித லிகோரியார் தேவாலய பங்குத் தந்தையார்கள், பாடசாலைஅபிவிருத்திச் சபையினர், பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகத்தினர் எனப் பல துறையினரும் இப் பாடசாலையினதும் மாணவர்களினதும் வளர்ச்சியில் காட்டும் அக்கறை திருப்தி அளிப்பதாக பாடசாலை நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

(முற்றும்)

# சாவகச்சேரி கடலேரி

## தென்மராட்சி வளம்




பல்லாண்டு காலமாக பல நூறு குடும்பங்களின் வாழ்வாதாரச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்த சாவகச்சேரி கடலேரி கடல் வலய தடைச் சட்டம் காரணமாக இன்று நூறுக்கு குறைந்த குடும்பங்கள் கூட தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகிறது.

சாவகச்சேரி கடலேரியில் தமது குடும்பங்கள் வாழ்ந்த வரலாறு பற்றி வளம்பெற்ற பல குடும்பங்களிடம் பெற்ற தகவல்களை இன்று பார்ப்போம்.

நமது முன்னோர்களால் கடல் வாணிபம் செய்த காலத்தில் பாய்மரக் கப்பல்களில் கொண்டுவரப்பட்ட பொருள்கள் வண்டில்கள் மூலமும் தலையில் சுமந்தும் ஏனைய இடங்களுக்குக்கொண்டு செல்லப்பட்டன. பூநகரியில் இறக்கப்படும் பொருள்களைக் கொண்டு வருவதில் பல மைல்கள் தூரம் பாய்மரக் கப்பல்கள் செல்ல வேண்டியிருந்ததால் சுண்டிக்குளம் பகுதியிலிருந்து பூநகரிக்கு செல்வதற்கு வசதியாக பாரிய வாய்க்கால் வெட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்தன. மழை காலங்களில் வெள்ளம் பெருகி ஆனையிறவிலிருந்து சாவகச்சேரி வரை நீண்டு மணல் அரிமானம் ஏற்பட்டு கடலோரியாக மாறியது; சுண்டிக்குளம் தொடக்கம் பூநகரி வரையான பகுதி வரை வெட்டப்பட்ட மண் கொட்டப்பட்ட இடங்கள் இன்றும் மணல் மேடுகளாக இருப்பதைக் காணமுடிகிறது.

அவ்வாறு வெட்டப்பட்ட கால்வாய் ஊடாக கப்பல்கள் வரும் காலத்தில் பொருள்கள் விநியோகத்திற்கு வசதியாக வாய்க்காலை கிளாலி - கச்சாய் வரை விஸ்தரித்து கப்பல்கள் பொருள்கள் இறக்கக்கூடிய வகையில் துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. வாய்க்கால் வெட்டப்பட்டபோது கச்சாய்ப் பகுதிக்குத் தெற்கே குவிக்கப்பட்ட மணல் திட்டு இன்றும் தீவு போல் காணப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கச்சாய் எண்ணெய் பீப்பாய்களில் கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்டால் அவ்விடத்தினை கச்சாய் எண்ணெய் இறக்கும் துறைமுகம் என அழைக்கப்பட்டு காலப்போக்கில் கச்சாய் துறைமுகம் என மருவி அழைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.
இந்தியாவிலிருந்து வருகை தந்த வாணிபர்கள் சுண்டிக்குளம் கடலிலிருந்து வரும் கடல் நீரை தடுத்து ஆனையிறவில் பாத்திகளை அமைத்து உப்பு விளைவித்து தமது நாட்டுக்கு கொண்டு சென்றதாகவும் கூறப்பட்டது. இந்திய வாணிபர்களால் அமைக்கப்பட்ட உப்பு உற்பத்தி இன்று எமது பிரதேசத்தின் பாரிய உப்பளமாக உள்ளது.

மணல் வளத்தைக் கொண்ட இக் கடலேரி இறால் உற்பத்திக்கு சிறந்த இடமாகத் திகழ்ந்தது. இக் கடலேரியில் பிடிக்கப்படும் சிறிய இறால் மிகவும் ருசி மிக்கது எனவும் கூறப்பட்டது. *(தொடரும்)*




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 11


## வினாத்தாள் - I

நேரம் : 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

* 01 தொடக்கம் 03 வரையிலான வினாக்களுக்கு அருகில் தரப்பட்ட படத்துடன் மிகவும் நெருங்கிய விடையைத் தெரிவுசெய்க.

01. 1) கப்பல், இரும்பு, நிலம்.
2) துறைமுகம், கப்பல், நீர்.
3) கப்பல், நீர், நிலம்.



02.




1) பால், இறைச்சி, கயிறு.
2) பால், இறைச்சி, கன்று.
3) போசனை, பால், புல்.

03. 1) போக்குவரத்துச் சாதனம், எரிபொருள், மனிதவலு.
2) எரிபொருள், சூழல் மாசடைதல், மனிதவலு.
3) போக்குவரத்துச்சாதனம், மனிதவலு, சூழல் மாசடையாது.



04.





* மேலே உள்ள தரவுகளின்படி சரியான தொடர்பைக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.


1)



2)



3)




05. அருகிலுள்ள இலங்கைப் படத்தில் மேல்மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய மாகாணங்களைக் குறிக்கும் எழுத்துக்கள் முறையே,
1) A, D  2) E, D
3) E,C  4) B, D





06. கண்நோய் ஏற்பட்டால் கண்களை கழுவுவதற்குப் பயன்படுத்த ஏற்றது,
1) மாதுளம் இலை அவித்தநீர். 2) புளியம் இலை அவித்தநீர்.
3) துளசி இலை அவித்தநீர்.


07. வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.





08. அருகில் தரப்பட்டுள்ள உருவை B திசையிலிருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் எது?




09. அருகில் தரப்பட்டுள்ள உடுக்கோலத்திற்கு வழங்கப்படும் பெயர்.
1) பெருநாய். 2) ஓராயன். 3) கார்த்திகை.



10. குந்துகாலி பறவையைப்போல பாய்ந்துசெல்லும் படம் எது?



1) 2) 3)

11. ஒரு பூரணைதினத்திலிருந்து அடுத்த பூரணை தினம் வருவதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?
1) 15 நாட்கள். 2) 29 நாட்கள். 3) 5 நாட்கள்.


12. ஈரமான மண்ணினுள் புதைத்து முளைதிறன் பரிசோதனை மேற்கொள்ளப்படும் வித்து.
1) பலா. 2) வெண்டி. 3) கடுகு.

13. ஒரு பையினுள் 4 சிவப்பு பந்துகளும், 7 மஞ்சள் பந்துகளும், 3 நீலப்பந்துகளும் உள்ளன. மஞ்சள் பந்து ஒன்றைப் பெறுவதற்கு பையில் இருந்து ஆகக்குறைந்தது எத்தனை தடவைகள் எடுத்தல் வேண்டும்?
1) 14 தடவைகள். 2) 8 தடவைகள். 3) 11 தடவைகள்.


14. குமார் படிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை. அவன் எந்நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான். தாயும், தந்தையும் பாடங்களைப் படிக்கும்படி எப்போதும் அறிவுரை கூறுவர். குமார் சிறிதளவும் அவற்றைக் கேட்பதில்லை. குமாரின் பெற்றோர்களுடைய செயலை விவரிக்கும் மிகச்சிறந்த கருத்து எது?
1) செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றது.
2) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை என்பதாகும்.
3) முன்னேவந்த செவியை பின்னே வந்த கொம்பு மறைத்ததுபோல.

15. ''போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து'' என்னும் பழமொழி உணர்த்தும் கருத்தை தெரிவுசெய்க.
1) யாருமற்ற மனிதனை இறைவன் காப்பாற்றுவான்.
2) மனநிறைவே ஒருவனுக்கு சிறந்த செல்வம்.
3) தகுதிக்கு மேல் எண்ணாதே.

16. சதுரவடிவ கடதாசி ஒன்றை நான்காக மடித்து, அதன் ஒருபக்கத்தை வெட்டியுள்ள ஒழுங்கு முதல் உருவில் காட்டப்பட்டுள்ளது. கட்தாசியை விரித்தவுடன் காணப்படும் சரியான வடிவத்தைத் தெரிவுசெய்க.




17. இவ்வுருவில் எத்தனை செவ்வகங்கள் உள்ளன?



1) 16 2) 10 3) 09.

18. 31 நாட்களைக்கொண்ட ஒரு மாதத்தில் 2 ஆம் திகதி சனிக்கிழமை எனின், அம்மாதத்தின் கடைசி திங்கட்கிழமை எத்தனையாம் திகதியாக இருக்கும்?
1) 31 ஆம் திகதி 2) 25 ஆம் திகதி 3) 29 ஆம் திகதி

19. கமலாவின் வயதைவிட அவளது அம்மாவின் வயது இருமடங்கிலும் 5 கூடவாகும். கமலாவின் வயது 15 எனின், அவளது அம்மாவின் வயது என்ன?
1) 35 2) 20 3) 25.

20. மிகவும் சரியான காரணத் தொடர்புடைய விடையைத் தெரிவுசெய்க.
பாம்பு தீண்டினால் மரணம் ஏற்படும்.
1) இது எப்போதும் உண்மையாகும்.
2) இது ஒருபோதும் உண்மையானதன்று.
3) இது சிலவேளை உண்மையாகும்.

21. அமாவாசை ஏற்பட்டு ஏறத்தாழ எத்தனை நாட்களின் பின் பௌர்ணமி தோன்றும்,
1) 9. 2) 14. 3) 29.

22.

| | | | |
|---|---|---|---|
| ▲ | ● | ■ | 12 |
| ✹ | ● | ● | 11 |
| ▬ | ● | ■ | 7 |
| ? | 12 | 8 | |

அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவிற்கும் ஒவ்வொரு முழு எண் பெறுமானம் தரப்பட்டுள்ளது. அப்பெறுமானங்களின் கூட்டுத்தொகை நிரையாகவும் நிரலாகவும் தரப்பட்டுள்ளது. இதனைக் கவனித்து (?) இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய பெறுமானம் யாது?
1) 10. 2) 08. 3) 15.


23. விமலா காலையில் சூரியன் உதிக்கும் திசையை நோக்கிச் செல்லும்போது அவளது இடது கை எத்திசையை நோக்கி இருக்கும்?
1) வடக்கு. 2) தெற்கு. 3) மேற்கு.

* 24 ஆம், 25 ஆம் வினாக்களுக்கு மிகவும் சரியான வாக்கியத்தை தெரிவு செய்க.

24. 1) பறவைகள் வானில் பறந்து சென்றன.
2) பழங்கள் கொப்பில் பழுத்து தொங்கியது.
3) காகத்திற்கு தாகம் ஏற்பட்டதனால் தண்ணீர் குடித்தன.

25. 1) மீன்கள் நீரில் நீந்தியது.
2) பசியோடு இருந்த மான் புலியைத் துரத்தியது.
3) சூரிய கிரகணத்தின்போது சூரியன், புவி, சந்திரன் ஆகிய மூன்றும் இவ்வாறான முறையில் நேர்கோட்டில் அமையும்.


26.



இவ்வுருவில் நிறந்தீட்டப்படாத பகுதி முழுவுருவின் என்ன பகுதி?
1) 4/8 2) 2/8 3) 6/8


27. 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வியாழக்கிழமை எனின், 2009 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி என்ன கிழமை?
1) ஞாயிற்றுக்கிழமை. 2) செவ்வாய்க்கிழமை. 3) சனிக்கிழமை.

28. இவ்வுருவில் காட்டப்பட்ட தையலை இனங்காண்க.
1) காக்காத்தையல்.
2) மீன்முள்ளுத்தையல்.
3) வெட்டுக்குத்துத்தையல்



A

29.




சதுரமுகியொன்றின் படம் அருகே தரப்பட்டுள்ளது. அதன்படி வெளிப்பக்கத்துக்கு மைபூசப்பட்டு கோடுகளின் வழியே துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளது. இங்கு மூன்று பக்கங்களுக்கு மட்டும் மைபூசப்பட்ட துண்டுகள் எத்தனை?
1) 12. 2) 08. 3) 04.

(13 ஆம் பக்கம் பார்க்க)

30. வீதி ஒன்றை அமைப்பதற்கு 8 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவைப்படும் எனின், இதேவேலையை 3 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
1) 16 நாட்கள். 2) 8 நாட்கள். 3) 4 நாட்கள்.

* **ஓர் இயந்திரத்தில் உள்ள பற்சில்லுகளின் படம் கீழே தரப்பட்டுள்ளது. இதனைப்பயன்படுத்தி 31 ஆம், 32 ஆம் வினாக்களுக்கு விடைதருக.**




31. X சில்லு சுழலும் திசைக்கு எதிர்த்திசையில் சுழலும் சில்லுகள்.
1) A, C 2) B, D 3) A, D

32. சக்கரம் A இற்கும், சக்கரம் D இற்கும் இடையே உள்ள தொடர்பிணை மிகச்சரியாகக் குறிப்பது,
1) சக்கரம் A யைவிட சக்கரம் D மிக வேகமாகச் சுழலும்.
2) சக்கரம் D யைவிட சக்கரம் A மிக வேகமாகச் சுழலும்.
3) இரண்டு சக்கரமும் ஒரே வேகத்தில் சுழலும்.

33. உலகின் மிகப்பெரிய நதி எது?
1) நைல்நதி. 2) மகாவலிகங்கை. 3) மிசிசிபி.

34. உலக புத்தகதினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
1) ஏப்ரல் 22. 2) மே 22. 3) ஏப்ரல் 23.

35. வெருட்சியான பார்வையுடைய விலங்கு அல்லாதது,
1) நாய். 2) முயல். 3) மான்.

36. தோட்டம் ஒன்றில் ஒன்றுவிட்டு ஒன்றாக தக்காளி, மிளகாய், வெண்டி என்ற ஒழுங்கில் செடிகள் நடப்பட்டன. அங்குள்ள செடிகளின் மொத்த எண்ணிக்கை 22 எனின், எத்தனை தக்காளி செடிகள் உள்ளன.
1) 07. 2) 08. 3) 09.

37. 5 ஞாயிற்றுக்கிழமைகள் உள்ள ஓர் ஏப்ரல் மாதத்தில் அந்த திகதிகளில் இருக்கத் தக்க உயர்ந்தபட்ச பெறுமானம் யாது?
1) 75. 2) 85. 3) 80.

* **38 ஆம், 39 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து விளங்கிக்கொண்டு விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

கறுப்பு வண்ண காக்கையாரே
கண்ணை உருட்டிக் கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்?

38. இப்பாடலின் மூலம் நீர் கற்றுக்கொண்ட படிப்பினை யாது?

..................................................................................................

39. இப்பாடலின் மூலம் வலியுறுத்தும் கருத்தை உணர்த்தும் பழமொழி ஒன்றை எழுதுக.

..................................................................................................

40. கிராமப்புறங்களில் விவசாயிகள் நெல் தானியங்களை தூற்றுவதற்கு முக்கோண வடிவில் அமைந்த உபகரணத்தின் பெயர் யாது?
1) முக்காலி. 2) அவுரி. 3) ஏத்து.


(நிறைவுற்றது)

*ஆசிரியர்: திரு. G.கஜன்,*
*மன்/ சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி, (தே.பா) தொலைபேசி : 077 3516080*

## கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.*361*, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/ 071-4273035

# கல்விச் சாலைக்காட்சிகள்.........





கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 59 மாணவர்களுக்கு கியுடெக் - ஹரித்தாஸ் நிறுவனத்தால் காலணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் உரை நிகழ்த்துவதையும் கியுடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி பேணாட் றெக்னோ அடிகள் மாணவனொருவனுக்கு காலணி வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : 38)



இளவாலை மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் அண்மையில் மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவில் யாழ். பிரதம தபாலகத்தைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம்.



பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் யோகாசனப் பயிற்சிப் பட்டறை நான்கு தினங்கள் நடைபெற்றது. பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்கள் பயிற்சியில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.





மதர் ஸ்ரீலங்கா அமைப்பு நடத்திய போட்டியில் கோட்ட, வலய , மாகாண மட்டங்களில் முதலிடம் பெற்ற மல்லாகம் மகா வித்தியாலய அணியினருக்கு அலரிமாளிகையில் அண்மையில் ஜனாதிபதியால் பாராட்டி பரிசில்கள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுடன் கழகப் பொறுப்பாசிரியர் பா.கோபிரமணா, அதிபர் மா.நாகேந்திரசீலன் நிகழ்ச்சி ஆக்க ஆசிரியர் திருமதி கமலராணி கிருபானந்தன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் தேசிய மட்டப் போட்டியில் முதலிடம் பெற்றவர்களுடன் பிரதி அதிபர் நா.ஆனந்தகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவர் அபிவிருத்தி )மா.சிவலிங்கம்,அதிபர், கழகப் பொறுப்பாசிரியர் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்

வருவாய் பெருகி வளம் பெறும் நாள். நீண்ட நாள் நண்பர்களின் சந்திப்பால் முக்கிய காரியம் ஒன்று முடிவிற்கு வரும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. இரண்டு நாள்களுக்கு முன்னர் இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று முடிவிற்கு வரும். அரசியல்வாதிகள் முன்னேற்றம் காண்பர். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

### இடபம்

எடுத்த காரியங்களில் தங்கு தடையற்ற வெற்றி காணும் நாள். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று சந்தோஷம் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வீட்டில் நல்லது நடக்கும் நாள்.

### மிதுனம்

நெஞ்சை விட்டு அகலாத சம்பவம் நடக்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தினருடன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம். சொத்து வாங்கல் கொடுக்கலில் முன்னேற்றம் உண்டு.

### கடகம்

சிந்தித்துச் செயற்பட்டால் சிக்கல்களில் மாட்டாமல் தப்பித்துக் கொள்ளலாம். அண்டை, அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கடும் இழுபறிக்குப் பின்னர் வரும். புதிய பொறுப்புகளால் போராட்டமான நிலைமையை சந்திக்கலாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம்.

### சிங்கம்

சஞ்சலங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும் நாள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகள் செயற்பாடு பெருமை தரும் வகையில் அமையும். பொதுவாழ்வில் உள்ளோருக்கு புகழ், செல்வாக்கு கூடும். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும். கடன் மிதிகளை கேட்டு வாங்குவீர்கள்.

### கன்னி

தொழில் மாற்றம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். இனிமையான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல் விலகி விடும். தந்தையின் கோரிக்கை ஒன்றை நிறைவேற்றி வைப்பீர்கள். புதிய நண்பர்கள் அறிமுகம் கிட்டும்.

### துலாம்

கவலைகள், குழப்பங்கள் அதிகரிக்கலாம். கடன் மிதிகளை திருப்பச் செலுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கும் போது யோசித்துச் செயற்பட வேண்டும். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த ஆலயம் ஒன்றுக்கு செல்வீர்கள். உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம் உண்டு.

### விருச்சிகம்

தொழில் ரீதியான கவலைகள் அதிகரிக்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் சிரமங்களைச் சந்திக்கலாம். நண்பர்கள் சிலருடன் சண்டை போடலாம். மருத்துவர்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். பாசமிக்க உறவினர்கள் பகையாகாமல் இருக்க யோசித்துச் செயற்பட வேண்டும். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள்.

### தனுசு

நினைத்தது நினைத்தபடி நடக்கும் நாள். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். எதிர்ப்புகள், போட்டிகள் குறையும். தொழில் முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். இரண்டு நாள்களாக எதிர்பார்த்த பணவரவு இன்று வரலாம்.

### மகரம்

வரம் தரும் தெய்வங்களை வழிபட்டு நிம்மதி பெற வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கு புத்திமதி சொல்வீர்கள். செலவுகளை நினைத்து கவலைப்படுவீர்கள். பிறரை நம்பி யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். சக ஊழியர்களை பரிகாசம் செய்து பேசி சந்தோஷம் அடைவீர்கள்.

### கும்பம்

தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். அரச பணியாளர்கள் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறலாம். நண்பர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே கைக்கு கிடைக்கும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

### மீனம்

தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். பலவிதமான செலவுகளால் கையிருப்பு பணம் கரையலாம். வீண் பழிகளைத் தவிர்க்க பணியில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட வேண்டும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் அதிகரிக்கும்.

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீளவழங்காததால் ஓகஸ்டில் லட்சக்கணக்கானோர் வேலை இழப்பர்

## ஐக்கிய தேசியக் கட்சி சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு மீளவழங்காததால் இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தின் பின் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்கள் இழப்பர் என்று ஐ.தே.க. எம்.பி. கயந்த கருணாதிலக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு

நாட்டு மக்களுக்கு எதுவித நன்மையும் வழங்க முடியாத வரவு - செலவுத் திட்டம் ஒன்றை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்றும் அரசு கூறியது. ஆனால், இந்த வரவு - செலவுத் திட்டம் அந்த ஊழியர்களை ஏமாற்றிவிட்டது.

ஆகக்குறைந்தது எரிபொருள்களின் விலைகளைக் குறைத்தாவது மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும். உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் இன்னும் குறைந்த நிலையில்தான் உள்ளன. ஆனால், இங்கு குறைக்கப்படவில்லை.


உலக சந்தையில் பொருள்களின் விலைகள் கூடினால், இங்கும் அவற்றின் விலைகள் கூடுகின்றன. ஆனால், உலக சந்தையில் விலைகள் குறைந்தாலும் இங்கு குறைவதில்லை.

ஜி.எஸ்.பி. வரிச் சலுகை இந்நாட்டுக்கு வழங்கப்படாமையால் இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு லட்சக்கணக்கானோர் தொழில்களை இழப்பர்.

இந்த வரிச்சலுகை இந்நாட்டுக்குத் தேவை இல்லை என்று அரசு கூறுகிறது. அப்படியாயின், ஏன் அரசு அதைப் பெறுவதற்காக மக்களின் செலவில் பிரதிநிதிகளை பிரசல்ஸ் நாட்டுக்கு அனுப்பியது. எமது கட்சி சுதந்திரம் பெற்றுத் தந்த கட்சி என்பதால் இது தொடர்பாக பேசும் உரிமை எமக்குண்டு - இப்படி கயந்த கருணாதிலக்க எம்.பி. கூறினார்.

(சி)

## 90ஆம் நாள் நினைவலைகள்



**அமரர் சின்னத்துரை மகாலிங்கம்**
(மிருசுவில்)

கடந்த 04.04.2010 அன்று சிவபதமடைந்த அமரர் சின்னத்துரை மகாலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.07.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்போடு அழைக்கின்றோம்.

தவசிகுளம்,
மிருசுவில். (100018) **மனைவி.**


## வீடு, காணி விற்பனைக்கு

வடலியடைப்பு பிரதான வீதியில் மதவடி சந்திக்கு அருகில் வீடு, காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 078 9135002, 021 320 5646
(சி/365751)

## மாபெரும் புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு- 2010

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 05 மாணவர்களின் நலன்கருதி எமது நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் மாபெரும் வழிகாட்டிக் கருத்தரங்கு.

இக் கருத்தரங்கு புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல்கள் வெளியீட்டிலும், கருத்தரங்கு வழிகாட்டலிலும் அகில இலங்கையில் முதன்மையாகத் திகழும்.

"வித்யா கீர்த்தி சிறி சம்மான" ஜனாதிபதி விருது பெற்ற **மட்டுநகர் ந.சந்திரகுமார்** B.Ed in Sc (Hons) அவர்களால் நடத்தப்படும்.

இடம்: யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
காலம்: 24.07.2010 (சனி), 25.07.2010 (ஞாயிறு) ஆகிய இரு தினங்களும்
நேரம்: காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை

- இக்கருத்தரங்கில் முற்றிலும் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள், கற்றல் கையேடுகள் என்பன வழங்கப்படும்.
- இரு தினங்களும் நவீன முறை வழிகாட்டல் மூலம் 12 மணி நேரம் கருத்தரங்கு நடைபெறும்.
- பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் உயர் புள்ளிகளைப் பெறுவதற்கு இக்கருத்தரங்கு முற்றிலும் வழிவகுக்கும். எனவே அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.
- குறித்த தொகை மாணவர்களே இக் கருத்தரங்கில் பங்குபற்ற முடியுமென்பதால் உங்கள் பதிவுகளை 15.07.2010இற்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்.

### பதிவுகளை மேற்கொள்ளும் இடங்கள்

01. அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம் 0212229881
02. அன்னை புத்தகசாலை சாவகச்சேரி 0212270003
03. மொடேன் புத்தகசாலை நெல்லியடி
04. பாக்யா காகிதாதிகள் கொக்குவில்
05. ஸ்ரீகாந்தா புத்தகசாலை - நல்லூர்
06. லக்கி சென்ரர் (மணியம் பேப்பர்க்கடை) - இருபாலை
07. சன் புத்தகசாலை கல்வியங்காடு
08. சபா புக் சென்ரர் அச்சுவேலி.
09. துர்க்கா புத்தகசோலை - சுன்னாகம் 0212240267

0779122918, 0775581626

Mathuram Institute
...tch Road, Irupalai Kopay South.
(சி/568784)

# யோசிக்க வேண்டாமா?




அரசன் ஒருவன் தன் படைவீரர்களுடன் கடுமையான கோடைகாலத்தில் பலரும் நடந்து போகும் சாலையில் போய்க்கொண்டிருந்தான். வெயில் தாங்காத நிலையில் ஒரு மரநிழலில் எல்லோரும் ஓய்வுபெற்றுத் தங்கினார்கள். அப்போது எதிரே ஒரு வேலியில் நூற்றுக்கணக்கான வெள்ளரிப்பிஞ்சுகள் காய்த்துத் தொங்குவதை அரசன் பார்த்தான். சேவகனை அழைத்து '' அதோ பார், கேட்பார் இல்லாமல் நூற்றுக்கணக்கில் வெள்ளரிப்பிஞ்சுகள். போய்ப் பறித்து வா. எல்லோரும் உண்ணலாம்'' என்றான்.

அப்போது அந்த மரநிழலில் தங்கியிருந்த விழியில்லாத முதியவர் ஒருவர் இதைக் கேட்டு ஓசைப்படச் சிரித்தார். அரசர் அவர் சிரித்ததற்குக் காரணம் கேட்டான். '' அந்த வெள்ளரிக்காய்கள் கசக்கும். வாயில் வைக்க முடியாது'' என்றார் விழியில்லாத முதியவர். அரசன் அதை ஏற்காமல் சேவகனை அனுப்பி பறித்துவரச் செய்து சாப்பிட்டுப் பார்த்த போது தாங்க முடியாத கசப்பில் காயைத் துப்பினான். ''முதியவரே, உமக்கோ விழியில்லை. நீர் இதனைப் பறித்துப் பார்த்ததாகவும் தெரியவில்லை. அப்படியிருந்தும் உமக்கு உண்மை எப்படித் தெரிந்தது?'' என்று அரசன் கேட்டான். அதற்கு முதியவர், ''பலரும் நடந்து போகும் பாதையில் இப்படிப் பறிக்கப் படாமல் உண்ணக்கூடிய காய்கள் இருக்க முடியுமா?'' என்று கேட்டார். அவருக்கு விழி இல்லை. ஆனால் விழிப்பிருந்தது.

-சுகிசிவம்-

# காந்திஜி கவர்னர் ஜெனரல் ஆனால்!



ஒருமுறை காந்திஜிக்கு வைஸ்ராயிட மிருந்து (கவர்னர்ஜெனரல்) திடீர் அழைப்பு வந்தது. வைஸ்ராயைச் சந்திப்பதற்காக சிம்லாவிற்குச் சென்றார் காந்தி.

வைஸ்ராயின் மாளிகையில் துப்புரவுப் பணிபுரியும் தொழிலாளர்களின் குடியிருப்பைப் பார்த்தார் காந்தி. அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களின் வீடுகள் வைஸ்ராய் மாளிகையின் கழிப்பறையை ஒட்டி அமைந்திருந்தன.

இதில் ஒரு சோகமான சம்பவம் என்னவென்றால் அவர்கள் ஒரு தகர டின்னில் அசுத்தத்தை அள்ளிக்கொண்டு தங்கள் தலைமீது தூக்கிச் சென்றார்கள். அந்தத் தகர டின் ஓட்டையாக இருந்ததால் அதிலிருந்த அசுத்தம் முழுவதும் துப்புரவுத் தொழிலாளியின் தலையில் வழிந்தது. இதைக் கண்ட காந்தியின் கண்கள் கண்ணீரால் திரையிட்டன.

அவர் மனம் துடிதுடித்தது. அப்போது அங்கு வந்த நிருபர், ''பாபுஜி, உங்களை இந்தியாவின் வைஸ்ராயாக ஒரே ஒருநாள் மட்டும் நியமித்தால் தாங்கள் முதலில் செய்யும் வேலை என்ன?'' என்று கேட்டார்.

அதற்குக் காந்தி, '' இதோ இந்தத் துப்புரவுத் தொழிலாளிகளின் வீட்டையும், அவர்களது கழிப்பறைகளையும் சுத்தம் செய்வதுதான் என் முதல் வேலையாக இருக்கும்'' என்றார். அந்த நிருபர் அத்துடன் விடவில்லை.

''சரி, இரண்டாவது நாளும் உங்களை அதே வைஸ்ராய் பதவியில் அமர வைத்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்க, ''அதே துப்புரவு வேலையைத் தான் நான் இரண்டாம் நாளும் செய்வேன்'' என்று காந்தி பதிலளித்தார்.

சொன்னவர்: காந்திதாசன்

# வேண்டாம் அகங்காரம்

நாம் அறிவாளி என்று ஆணவப் படக்கூடாது. அறிவாளிக்கு அறிவாளி அகிலத்தில் உண்டு.

கிருபானந்த வாரியார் சுவாமிகள் இக்கருத்தை விளக்க ஒரு கதை சொல்வார். ஒரு நாடு. நாடாளும் மன்னன். அவன் அறிவு மிகப் பெற்றிருப்பதாக அகந்தையோடு இருந்தான். அடுத்த நாட்டு மன்னன் இம் மன்னனைக் காணவந்தான். விருந்து தடபுடலாக நடந்தது. அதன் பின் உட்கார்ந்து மகிழ்வோடு இருவரும் பேசிக் கொண்டிருந்த போது,

''எங்கள் நாட்டில் எல்லோரும் என்னைப் போலவே அறிவாளிகள். உங்கள் நாட்டில் எப்படி?''

'' அறிவாளிகளா இல்லையா என்று தெரியவில்லை. நீங்கள் வந்து சோதித்துச் சொல்லுங்களேன்.''

''வாருங்கள் உங்கள் நாட்டுக்குப் போய் சோதித்துப் பார்ப்போம்.'' இருவரும் குதிரையில் சென்றார்கள்.




''எங்கள் நாட்டு எல்லை வந்துவிட்டது. இனி நீங்கள் சோதனை செய்யலாம்.''

மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனை மன்னன் அழைத்துச் சோதிக்க எண்ணினான். சிறுவனிடம் மன்னன் சோதனைக் கேள்வி கேட்டான்.

''ஏன்டா , ஒளியிலேயே சிறந்த ஒளி எது?''

''சூரிய ஒளிதான் ஐயா''

''பரவாயில்லையே சரியாகச் சொல்லிவிட்டாயே''

''கொஞ்சம் பொறுங்கள் ஐயா, சூரிய ஒளிதான் சிறந்த ஒளி என்று சொல்வார்கள். ஆனால் அது பிழை. ஒளியில் சிறந்தது அறிவு ஒளிதான். சூரிய ஒளி பார்வையில்லாதவருக்கு உதவாதே. அறிவு ஒளி இருந்தால் சூரிய ஒளியில் தெரிவதை விடப் பொருள்கள் நன்றாகத் தெரியும். சூரிய ஒளி பார்வையாகிய ஒளி உள்ளவனுக்கே உதவும். பார்வை இல்லாவிட்டாலும் அறிவு ஒளி இருந்தால் அனைத்தையும் உணர்வான். சூரிய ஒளியிலும் அறிவு ஒளி மிகுந்த ஒளியுடையது.'' மன்னனுக்கு வெட்கம். சரியென்று தான் நினைத்தவிடையே தவறு என்றாக்கி அதற்கு மேல் சிறந்த விடையைத் தருகிறேனே என்று வியந்தான். மேலும் கேட்டான்.

''பூக்களில் சிறந்தது?''

''தாமரைப் பூ''

''மிகச் சரியான விடை சொன்னாய்.''

''மன்னா, இப்படித்தான் எல்லா மடையர்களும் சொல்கிறார்கள். ஆனால் அது சரியான விடையாகாது. பருத்திப்பூ தான் உலகின் சிறந்த மலர்.''

''அது எப்படி?''

''ஐயா, மனிதனுக்கு உயிரைவிடச் சிறந்தது மானம் இல்லையா?''

''ஆமாம், அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''அந்த மானத்தைக் காப்பது ஆடை. ஆடையைத் தருவது பருத்தி. பருத்தியைத் தருவது பருத்திமலர். ஆகவே இது மலர்களின் மிக மிக உயர்ந்தது.''

மன்னன் தலை குனிந்தான். தாம் அறிவிற் சிறந்திருப்பதாக எண்ணி ஆணவம் கொண்டது தவறு. இந்த மாடு மேய்க்கும் சிறுவனே இவ்வளவு அறிவாளியாக இருக்கும் போது, மற்றையோர் அறிவுக்குக் கேட்பானேன்? ஆணவம் அன்றோடு ஒழிந்தது.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருப்பான். கற்றது கை மண் அளவு. கல்லாதது உலகளவு என்பது ஔவையின் அமுதமொழி. ஆணவம் முன்னேற்றத்துக்குத் தடைக்கல். அடக்கம் மேன்மேலும் கற்கத் தூண்டும் படிக்கல்.

சொன்னவர்: வாரியார் சுவாமிகள்

# அலெக்சாண்டரின் நம்பிக்கை



நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் இந்த உலகில் வாழவே முடியாது. எந்தச் செயலையும் செய்யவும் இயலாது.

அவநம்பிக்கையுடன் இருந்தால் எப்போதும் அவஸ்தைதான். நாம் நம்புவது நடைபெறுகிறதோ இல்லையோ, அது வேறு விஷயம். ஆனால் எதையும் நம்பித்தான் நாம் வாழ்க்கையில் அடி எடுத்து வைக்க வேண்டியுள்ளது.

லாட்டரிச் சீட்டு வாங்குபவன் தனக்கு முதல் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் ராட்டரிச் சீட்டு வாங்குகிறான். தேர்வு எழுதும் மாணவன் நிச்சயம் பாஸ் செய்து விடுவேன் என்று நம்புகிறான். போட்டியில் கலந்து கொள்பவனுக்கு '' எனக்கு முதல் பரிசு கிடைக்கும்'' என்ற நம்பிக்கை உள்ளூர இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் முடிவு வேறு மாதிரி ஆகிவிடும். ஆனால் அதற்காக அவன் மனம் தளர்ந்து போவதில்லை. மீண்டும் அடுத்த முறையும் போட்டியில் கலந்து கொள்கிறான். இந்த நம்பிக்கை தான் மனித வாழ்க்கைக்கு ஆதாரம்.

ஒரு கடையில் தேனீர் குடிக்கிறீர்கள். 'அந்தத் தேனீர் நல்ல தேனீர் அல்லது அதில் விஷம் கலந்திருக்குமா!'' என்ற சந்தேகம் உங்களுக்கு வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு நீங்கள் அதை எப்படி குடிக்க முடியும்? நம்பித்தான் சாப்பிட வேண்டும்.

ரயில் ஒழுங்காக ஊர் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் அதில் ஏறி அமர்கிறோம். நாம் எழுதும் கடிதம் ஒழுங்காகப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் இதைத் தபால் பெட்டியில் சேர்க்கிறோம்.

மனித நம்பிக்கை எந்த அளவுக்கு உறுதியாகவும், அறிவுப்பூர்வமாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு, அலெக்ஸாண்டர் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.

இந்த உலகம் முழுவதையும் வெற்றி கொள்ள வேண்டும் என்று புறப்பட்டார் அலெக்ஸாண்டர். ஒருநாள் அவர் சிட்னஸ் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். அப்போது அவருக்குக் கடுமையான நோய் வந்துவிட்டது. எனவே அவருடன் வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் அலெக்ஸாண்டரைக் குணப்படுத்த என்னென்னவோ முயற்சிகளையெல்லாம் செய்தார்கள் என்றாலும் அவர்களால் அலெக்சாண்டருக்கு வந்திருப்பது என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஏனெனில், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு மட்டுமே வரக்கூடிய வினோதமான நோய் அது.

ஆனால் அலெக்ஸாண்டர் அந்தச் சமயத்தில் இருந்த இடமோ எதிரிக்குச் சொந்தமான பகுதி. பாரசீக மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி அது.

''இப்போது என்ன செய்வது?'' என்று அனைவரும் யோசித்தனர். ''பாரசீக மன்னரின் அரண்மனையில் உள்ள வைத்தியர் வந்தால் இந்த நோயைக் குணப்படுத்தி விடுவார்'' என்று சிலர் கூறினார்கள். மற்றும் சிலர், '' இருந்தாலும் எதிரியின் நாட்டில் இருக்கும் வைத்தியரைக் கூப்பிட்டு எப்படி நம்பி வைத்தியம் பார்க்கச் சொல்லுவது?'' என்று தயங்கினார்கள்.

ஆனால் அலெக்ஸாண்டர் இதற்கு தயங்கவேயில்லை. ''பரவாயில்லை! பாரசீக மன்னரின் மருத்துவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்!'' என்று சொல்லிவிட்டார். அதன்படியே பாரசீக மருத்துவர் அழைத்து வரப்பட்டார். அலெக்ஸாண்டர் உடலை அவர் பரிசோதித்துப் பார்த்தார்.

பிறகு, ''சரி! இந்த நோயைக் குணப்படுத்திவிட முடியும். பயப்பட வேண்டியதில்லை. ஆனால் இதற்கு ஒரு மூலிகை ரசம் தயார் செய்து கொடுக்க வேண்டும். நான் சென்று அதைத் தயாரித்துக் கொண்டு இரண்டு நாளில் திரும்பி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார் அந்த மருத்துவர்.

சொன்னது போலவே இரண்டு நாள் கழித்து மூலிகை ரசத்துடன் வந்தார். இதற்கிடையில் அலெக்ஸாண்டரின் தளபதிகளில் ஒருவன் ரகசியமாக அலெக்சாண்டருக்கு ஒரு எச்சரிக்கைக் கடிதம் கொடுத்தனுப்பினான்.

அதை வாங்கிப் படித்துப் பார்த்தார் அலெக்சாண்டர். இருந்தாலும், அதனால் அவர் கொஞ்சங்கூட அலட்டிக் கொள்ளவில்லை. வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கிக் குடித்துவிட்டார். அதன் பின்புதான் கடிதத்தில் இருந்த விஷத்தை மருத்துவரிடம் அலெக்சாண்டர் கேட்டார்.


அதைக் கேட்ட வைத்தியர்,தன்மீது அலெக்சாண்டர் வைத்திருந்த நம்பிக்கையைப் பார்த்து அப்படியே திகைத்து விட்டார். வைத்தியர் உண்மையிலேயே நல்ல மருந்தைத்தான் கொண்டு வந்திருந்தார். அதில் விஷம் எதுவும் இல்லை. அதன் பிறகு அலெக்சாண்டர் வைத்தியரைப் பார்த்து பின்வருமாறு கூறினார்.

'' நம்பிக்கை என்ற அச்சாணியை ஆதாரமாக வைத்துத்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனக்குப் பகைவராக இருந்தாலும் பாரசீக மன்னர் மிகவும் பெரியவர். அத்தகைய மன்னரின் அரண்மனை வைத்தியர் தொழில் நேர்மை இல்லாதவராக இருக்கமாட்டார். அப்படி இருந்தால் அவரை அரண்மனை வைத்தியராக அங்கே வைத்திருக்க மாட்டார்கள் என்று நம்பினேன். என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை!'' என்றார்.

இதுதான் மானுட நம்பிக்கை என்பது.

(நன்றி: நீதிக்கதைகள்)


# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்




காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற பஞ்சரதப் பவனியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் சுவாமி தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணித்து பஞ்சரதப்பவனி உலாவருவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: தர்ஸிகா)*



இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் மஞ்சரதப் பவனி அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். (படம்: 55)



ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கும்பாபிஷேகத்தில் பக்தர்கள் புடைசூழ கும்பம் எடுத்துச் செல்வதை படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*

## புதிய நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் நியமனம்

நாவற்குழி,ஜூலை 2

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக திருமதி சுரேஸ்குமார் சுரேசுதா இடமாற்றத்தின் மூலம் கடமையேற்றுள்ளார்.

இவர் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடமாற்றத் தின் மூலம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (50-121)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2134 திகதி 30 - 06 - 2010

ஆங்கில எழுத்திற்கும் H

வெற்றி எண்கள் 14 19 37 63

போனஸ் இல: 25

ஜக்பொட் பரிசு ரூ. 11,353,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 184127 | 20/- | 3,682,540/- |
| 2 இல | 13145 | 100/- | 1,314,500/- |
| 3 இல | 275 | 1,000/- | 275,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7245 | 40/- | 289,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 514 | 1,000/- | 514,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,353,975/- | - |
| 1 இல + போனஸ் இல | 8783 | 100/- | 878,300/- |
| 2 இல + போனஸ் இல | 413 | 500/- | 206,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 333 | 200/- | 66,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,730,740/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 214858 | | 9,330,740/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 202035841-2-34 |
| கம்பஹா | 202037405-9-42 |
| மாத்தளை | 202037633-2-24 |
| திருகோணமலை | 202037783-0-08 |
| நுவரேலியா | 202036008-7-06 |
| அனுராதபுரம் | 202041031-2-27 |
| வவுனியா | 202037242-2-46 |
| இரத்தினபுரி | 202038977-0-02 |
| யாழ்ப்பாணம் | 202035588-9-06 |
| பதுளை | 202038237-4-25 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 11,856,025/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 03 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, சுலைதர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333540/7


# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

இந்துக்கள் அனைவரும் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்த மறுபிறப்பும் கர்ம பலனை ஒட்டியே அமைகிறது என்றும் நம்புகிறார்கள்.

கர்மபலன் அல்லது வினைப்பயன் என்ன என்பதை ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

'வினைப்பயனின்று யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. முற்பகலில் செய்கிற வினையின் விளைவு பிற்பகலில் வாய்த்தே தீரும்.'

'பூர்வ ஜென்ம வினைப்பயன் சமஸ்காரங்களாக மறுபிறப்பில் மனிதனைத் தொடர்ந்து வருகின்றன. பிராப்த கர்மபலன் தருவதை யாரும் தடுக்க முடியாது.'

'பழவினைப் பயனை மனிதன் அனுபவித்தே தீர வேண்டும். குருடன் ஒருவன் கங்கா ஸ்ஞானம் செய்தான். அதன் பயனாகப் பாவங்களனைத்தும் அவனை விட்டுப் போய்விட்டன. ஆயினும் அவன் பழையபடி குருடனாகவே இருந்தான். அவன் குருடன் ஆனதற்குக் காரணம் பழவினை.'

மறுபிறவி உண்டு என்பதாலும், போன பிறவியில் கர்ம பலன்களை இந்தப் பிறவியில் அனுபவித்தே தீர வேண்டும் என்பதாலும், ஒருவன் இந்தப் பிறவியிலாவது நல்லதைச் செய்து அடுத்த பிறவி சுகமானதாக அமைய வழி செய்துகொள்ள வேண்டும் என இந்துமதம் போதிக்கிறது.

விதி - மறுபிறவி ஆகிய இரண்டையும் இணைத்துப் பார்க்கின்றபோது வாழ்க்கையில் புரியாத எத்தனையோ புதிர்களுக்கு விடை கிடைத்து விடுகிறது.

ஒரே வீட்டில் ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் இரண்டு குழந்தைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை.

உருவகத்தில் மட்டுமல்ல குணத்திலும் கூட அவை வேறுபடுகின்றன.

ஒரு குழந்தை அறிவாளியாக இருக்கிறது; இன்னொரு குழந்தை மூடனாக இருக்கிறது.

ஒரு குழந்தை நல்லவனாக இருக்கிறது; இன்னொரு குழந்தை தீயவனாக இருக்கிறது.

ஒரே பெற்றோர்கள், ஒரே சூழ்நிலை, ஆயினும் குழந்தைகளிடையே இத்தகைய முரண்பாடான குணங்கள் இருப்பதற்கு எது காரணம்?

பூர்வ ஜென்மத்தின் வினைப்பயனே காரணம் என்கிறது இந்துமதம். இதுவரை இதற்கான வேறு விளக்கத்தை எவரும் சொன்னதாகத் தெரியவில்லை.

ஞானக்கதிர்

போன ஜென்மத்தின் கர்மப்படி இந்த ஜென்மத்தில் ஒருவனுக்கு நடைபெறுகின்ற காரியங்களை விதி என்று சொல்லுகிறோம்.

விதியை அனுபவிப்பதற்காகவே அவன் அடுத்த பிறப்பை எடுக்கிறான்.

போன ஜென்மத்தின் கஷ்டங்களை இந்த ஜென்மத்தில் அவன் அனுபவித்தாலும், இந்த ஜென்மத்தில் புண்ணியம் செய்தால் அடுத்த ஜென்மம் அவனுக்கு நல்லபடியாக அமையும். இது இந்து மதத்தின் உறுதியான கோட்பாடாகும்.

இதைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ராமகிருஷ்ணர், ''கர்மம் ஒவ்வொன்றுக்கும் கர்ம பலன் உண்டு. மிளகாயைச் சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் உண்டாவது திண்ணம்.

பாபம் செய்கின்றவனுக்கு அதன் விளைவு வந்தே தீரும்

வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளுக்கு புரியாத பிரச்சினைக்கு இந்துமதம் இப்படித்தான் விளக்கம் சொல்லி இருக்கிறது.

# கிளிநொச்சியில் நடைபெற்ற நடமாடும் சேவை; பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கேற்றனர்

## 1,314 பேர் அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம்

கிளிநொச்சி,ஜூலை2

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நீதி மறுசீரமைப்பு அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் கிளிநொச்சி செயலத்தில் கடந்த 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெற்ற நடமாடும் சேவையில் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடமாடும் சேவையின் ஆரம்ப நாளான 29ஆம் திகதி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, நடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆள்பதிவுத்திணைக்கள, பதிவாளர் திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களின் பிறப்பு,இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திர சேவையும் தேசிய அடையாள அட்டை சேவை என்பன நடைபெற்றன. அத்துடன் கிளிநொச்சி மாவட்ட மக்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளையும் ஓய்வூதிய அட்டை வழங்கல் சேவைகள் என்ப னவும் இடம்பெற்றன.

இதில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு பயன்பெற்றனர். பல காலங் கடத்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியாக பதிவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

தேசிய அடையாள அட்டைகளை விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் இறுதி யுத்தகால இடப்பெயர்வுகளின் போது அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களுக்கான பொலிஸ் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு முறைப்பாட்டு அறிக்கைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் இலவசமாக அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுத்தல், இடம்பெற்றதுடன் அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்களுக்கான முத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டதுடன் போட்டோ பிரதி சேவைகளும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் இரு நாள்களும் 1,314 அடையாள அட்டை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 8,200 வரையினலான பிறப்பு, இறப்பு, திருமண பதிவு பத்திர சேவைகள் வழங்கப்பட்டதாகவும் 79 பேரின் ஓய்வூதிய சேவைகள் வழங்கப்பட்டதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(50-405)

# வங்காலை முதியோர் சங்கம் மூன்று தடவை முதலிடம்

மன்னார்,ஜூலை2

மன்னார் வங்காலை முதியோர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் முதலாம் பரிசைப் பெற்றுள்ளது. தேசிய ரீதியிலும் இரண்டு தடவை முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 3 வருடங்களில் இவ்விதமான பரிசைப் பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள வயதுவந்தோர் தேசிய செயலகம் தேசிய ரீதியாக நடத்திய மதிப்பீட்டிலேயே வங்காலை முதியோர் சங்கம் பரிசைப் பெற்றுள்ளது.

வங்காலை கிராமத்திலுள்ள முதியோர்களுக்கு மருத்துவச் சேவை, முதியோர் அடையாள அட்டை வழங்கல், சுய தொழில் உதவி உணவல்லாப் பண்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வழங்கியமை போன்ற பலவிதமான சேவைகளை திறம்பட வழங்கியமையால் முழு நாட்டிலுமே சிறந்த சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (50-121)

# மன்னார் மாவட்டத்தில் 21 முதியோர் சங்கங்கள்

மன்னார், ஜூலை 2

மன்னார் மாவட்டத்தில் 21 முதியோர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளையும் இணைத்து மாவட்ட முதியோர் சமாசமும் இயங்கி வருகின்றது.

பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் சமூகசேவை அதிகாரிகள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கிராமசேவகர் பிரிவுகள் தோறும் முதியோர் சங்கத்தை உரு வாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பிலுள்ள வயது வந்தோர்களுக்கான தேசிய செயலகம் இச்சங்கங்களின் இயக்கத்திற்கு அவசியமான அடிப்படை நிதி உதவிகளைச் செய்து வருகின்றது.

அண்மையில் மக்கள் மீளக் குடியேறிய கிராமங்களிலும் முதியோர் நலனோம்பும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

(50-121)




# கரைச்சிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஜூலை2

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையில் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உள்ளூராட்சி வார நிகழ்வுகளை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வுகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 18ஆம் திகதி முடிவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி முதலாம் நாள் கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் சிரமதானப் பணிகளும் பிரதேச சபையின் சுகாதாரப் பணியாளர்களினால் சுகாதாரப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இரண்டாம் நாளான 13ஆம் திகதி கிளிநொச்சி பொதுநூல் நிலைய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதோடு முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் மூன்றாம் நாளான 14ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் சுற்றாடல் அபிவிருத்தி பணிகளும் நான்காம் நாளான 15 ஆம் திகதி சட்டம், ஒழுங்குகளை பின்பற்றுவதற்கான விழிப்புணர்வு செயற்பாடுகளும் உணவக உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகளும் நடைபெறும்.

ஐந்தாம் நாளான 16ஆம் திகதி கிளிநொச்சி திருநகர் பொது மயான அபிவிருத்திப் பணிகளும் ஆறாம் நாளான 17ஆம் திகதி தகவல் தொழில்நுட்ப சேவைகளும் இறுதிநாளான 18ஆம் திகதி ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் சிறந்த உணவக உரிமையாளர்களுக்கான பரிசில் வழங்கல் நடவடிக்கைகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-405)

# கிளிநொச்சி நகரில் இம்முறை பிரமாண்டமான பொசன் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சியில் பொசன் கொண்டாட்டங்கள் 25ஆம் 26ஆம் 27ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சி. டபிள்யூ.சி.வி.இராஜகுரு, துணைத்தளபதி பிரிகேடியர் அத்துலகலகம, இராணுவ பொதுவசதிகள் பொறுப்பதிகாரி பிரிகேடியர் அசித் விக்கிரமசிங்க, 571ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் என்.கத்துருசிங்க, 57ஆவது பிரிவு இராணுவ அதிகாரி லெப். கேணல் ஜே.தந்திரிவத்த உட்பட பல இராணுவ உயர் அதிகாரிகளும், கிளிநொச்சிச் செயலக, கிளிநொச்சி வைத்தியசாலை, வலயக் கல்வி அலுவலக உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கு பௌத்த மதம் கொண்டுவரப்பட்ட நிகழ்வு அலங்கார கோபுர வடிவில் கட்டப்பட்டிருந்ததோடு, மிகிந்தலைக் காட்சியும் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது. பெரகரா வீடியோக் காட்சியும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு இராணுவ பிரிவுகளும் தனித்தனியாக வெசாக் கூடுகளை அமைத்து அலங்காரப்படுத்தியிருந்தன. இந்நிகழ்வுகளில் இரவு 7 மணியளவில் இருந்து 11 மணிவரை பொதுமக்களுக்கான அன்னதானமும், கொத்தமல்லித் தேநீர் வழங்கலும், கடலை வழங்கலும் இடம்பெற்றன.

நிகழ்வுகளை 571ஆவது பிரிவின் இராணுவ அதிகாரியான மேஜர் ரூபசிங்க ஒழுங்குபடுத்தி நடத்தினார். (50-405)

# கல்மடு நகரில் மாதாந்தக் 'கிளினிக்'

கிளிநொச்சி,ஜூலை2

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிவிலுள்ள கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவில் ஒவ்வொரு மாதமும் கிளினிக் நடைபெறும் என்று குடும்ப நல உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கர்ப்பவதிகள், குழந்தைகளுக்கான கிளினிக் ஒவ்வொரு மாதத்திலும் முதலாம், மூன்றாம் புதன்கிழமைகளிலும் குடும்பத்திட்டக் கிளினிக் இரண்டாம் நான்காம் புதன்கிழமைகளிலும் நடைபெறும்.

அத்துடன் மாதத்தில் முதலாம் செவ்வாய்க்கிழமைகளில் இரட்டைப் பனைக்குளம் கிராமத்திலும், இரண்டாம் வியாழக்கிழமையில் 7ஆம் யுனிட் கிராமத்திலும், மூன்றாம் செவ்வாய்க்கிழமையில் ரங் கன் குடியிருப்பு கிராமத்திலும், மூன்றாம் வியாழக்கிழமைகளில் சம்புக்குளம் கிராமத்திலும் நான்காம் செவ்வாய்க்கிழமைகளில் நாவல் நகர் கிராமத்திலும் பிள்ளைகளுக்கான நிறை எடுத்தல் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-405)

# செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் 111 பேருக்கு தற்செயல் நிவாரணம்

கிளிநொச்சி,ஜூலை2

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 111 பேருக்கு இவ் ஆண்டில் முதல் 6 மாதங்களில் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்குரிய நிதியைப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்தது.

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் காட்டுயானைகளால் சேதமாக்கப்பட்ட வீடுகளுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.

வறிய மக்கள் இந்நிதியைக் கொண்டு தமது வீடுகளைப் புனரமைத்துள்ளனர். ரூபா 20,000 உச்சபட்சமாக சமூக சேவைகள் திணைக்களம் வழங்குகின்றது. ரூபா 10,000இற்கு உட்பட்ட தொகையாயின் ஒரே கட்டத்திலும், 10,000 ரூபாவிற்கு மேற்பட்டதாயின் இரு கட்டங்களிலும் வழங்கப்படுகிறது. வடமாகாணத்தில் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் தான் காட்டு யானைகளின் பாதிப்பு அதிகமுள்ளது குறிப்பிடத்தக்கது.

(50-121)


# வடமாகாணப் பொது நிர்வாக அலுவலகம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி,ஜூலை2

வடக்கு மாகாணத்துக்கான பொது நிர்வாக அமைச்சின் அலுவலகம் விரைவில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அலுவலக கட்டடங்களை அமைப்பதற்காக கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்குப் பின்புறவுள்ள அரச காணி ஒதுக்கப்பட்டு அங்கு நிர்மாணப் பணிகளுக்கான ஆரம்பகட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பணிகள் பூர்த்தியானவுடன் வடமாகாண பொதுநிர்வாக அமைச்சின் அலுவலகம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப் படவுள்ளது. (50-405)



கடந்த வாரம் யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கரபந்தாட்டச் சங்க ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொள்ள வருகை தந்த பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரை யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத் தலைவர், செயலாளர் உட்பட படை அதிகாரிகள் அழைத்துவருவதை முதற்படத்திலும் கலந்துரையாடல் இடம்பெறுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள் : லக்ஸ்மன்)




01.08.1992

✱இலங்கை இராணுவத்தை விட்டு ஓடியவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸாரை ஈடுபடுத்த அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱ பத்து வருடங்களுக்கு கூட தொடர்ந்து போரை நடத்தக்கூடிய அளவுக்கு தம்மை சக்தியுள்ளவர்களாக விடுதலைப் புலிகள் ஆக்கிக் கொண்டுள்ளனர் என "லங்காதீப" சிங்கள நாளிதழ் விமர்சிப்பு.

02.08.1992

✱ திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்டங்களில் அரச படையினர் முகாம்களுக்குள் முடங்கும் நிலை உருவாகி வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

✱ கொழும்பில் இருந்து கோலாலம்பூர் வழியாக சிங்கப்பூர் செல்லவிருந்த "எயர் லங்கா" பயணிகள் விமானம் கோலாலம்பூரில் பலவந்தமாக தரையிறக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

03.08.1992

✱ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் காரணமாக கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 220 க்கும் அதிகமான பாதுகாப்பு படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

✱ வடக்கு- கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 874 சிறுவர், சிறுமியர்கள் காணாமற் போய்விட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

04.08.1992

✱ விடுதலைப் புலிகள் தமது பராமரிப்பில் இருந்த மூன்று சிங்கள மீனவர்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் நேற்று ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱கிழக்கு மாகாணத்தில் கரடியனாறில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குத்ல் ஒன்றில் 14 படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

05.08.1992

✱ வவுனியா மாவட்டம் பிரப்பமடு பகுதியில் விடுதலைப் புலிகளின் மற்றொரு தாக்குதலில் 15 படையினர் பலியாதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கையில் தமிழர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அது ஐக்கிய இலங்கைக்குள் அமைந்ததொன்றாக அமைய வேண்டும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தம்மிடம் தெரிவித்ததாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் தெரிவிப்பு.

06.08.1992

✱ தென்னிலங்கையில் உள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளை தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு அரசியல் கைதிகளை வாரத்தில் இரு நாள்கள் உறவினர்கள் சென்று பார்க்க அரசு அனுமதி வழங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு.

✱ கடந்த வாரம் தமிழகத்தில் இருந்து திருகோணமலைக்கு விமானமூலம் அனுப்பிவைக்கப்பட்ட 132 இலங்கைத் தமிழ் அகதிகளும் தமது விருப்பத்துக்கு மாறாகவே அனுப்பிவைக்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிப்பு.

07.08.1992

✱ அடுத்தடுத்து விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்களால் இராணுவத்துக்குப் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதால் ஓர் உத்தியில் புதிய முறைகளை தடைக்கொள்ள இராணுவம் முயன்று வருவதாக இராணுவத் தலைமையகப் பேச்சாளர் தெரிவிப்பு.

✱தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக ஐ.நா. அகதிகள் தூதரக அமைப்பும் இந்திய அரசும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

08.08.1992

✱ ஜனாதிபதி பிரேமதாசவைப் பதவியில் இருந்து அகற்ற மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களைப் படம் பிடித்த செய்தியாளர் மீது குண்டர்கள் குழு தாக்குதல்கள் மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

✱ சுவிற்ஸர்லாந்தில் இருந்து ஈழ அகதிகளைத் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக ஆராய அந்நாட்டில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்திருப்பதாகத் தெரிவிப்பு.

09.08.1992

✱ வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட இராணுவ, கடற்படை உயரதிகாரிகள் 9 பேர் அராலியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி பிரேமதாஸவும் பிரதமர் விஜயதுங்கவும் இறுதி மரியாதை செலுத்திய சமயம் ஜனாதிபதி கண்ணீர் விட்டழுததாகத் தெரிவிப்பு.

10.08.1992

✱ இராணுவ நடவடிக்கைமூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாமென்று நினைப்பது சரியல்ல என்பதை அரசு இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டுமென விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர் தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' வானொலி அறிவிப்பு.

✱ கடந்த ஆண்டு ஜூன் மாதம் கொக்கட்டிச்சோலையில் அறுபதுக்கும் அதிகமான தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த நீதிமன்ற விசாரணை நாளை ஆரம்பமாவதாகத் தெரிவிப்பு.

11.08.1992

✱ இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு சமஷ்டி அரசமைப்பு முறை குறித்து பரிசீலனை செய்யக்கூடும் என 'சண்டே ஐலண்ட்' நாளிதழ் தெரிவிப்பு.

✱ படுகொலை செய்யப்பட்ட வடபகுதி இராணுவத் தளபதி கொப்பேகடுவவின் இறுதிக்கிரிகைகளின் போது அரச எதிர்ப்புக் கலவரம் மூண்டதால் அரச தரப்பு, அரசியல் வாதிகள் பலர் காயமுற்றதாகத் தெரிவிப்பு.

12.08.1992

✱ பாதுகாப்புப் படை உயரதிகாரிகளின் உயிரிழப்பைத் தொடர்ந்து தெற்கில் உருவாகியுள்ள அரச விரோதப் போக்கு மேலும் தீவிரமடையலாம் என அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

✱ படுகொலை செய்யப்பட்ட யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விமல விஜேயரத்தினாவின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும்போது கொழும்பில் பெரும் கலவரம் வெடிக்கலாம் என அரச தரப்பினர் அச்சம் உறுவதாகத் தெரிவிப்பு.

13.08.1992

✱ நேற்று கொழும்பில் மீண்டும் இடம்பெற்ற பெரும் கலவரத்தின் அரச தரப்புப் பிரமுகர்கள் மீதும் அரச ஆதரவாளர்கள் மீதும் கல்வீச்சு நடத்தப்பட்டதாகத் தெரிவிப்பு.

14.08.1992

✱ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து இந்திய அரசு வெளியிட்ட பிரகடனத்தை அமுல் செய்வதை ஒத்திவைக்குமாறு புதுடில்லி விசேட நீதிமன்றம் உத்தவிட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ நேற்றுமுன்தினம் கொழும்பு கனத்தை மயானத்தில் இடம்பெற்ற பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்ட அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்கவும், சிறிசேன கூரேயும் எதிர்ப்பாளர்களின் தாக்குதல்களில் இருந்து மயிலிழையில் தப்பியதாகத் தெரிவிப்பு.

15.08.1992

✱ வடக்கு - கிழக்குக்கு நியமிக்கப்பட்டிருக்கும் புதிய இராணுவத் தளபதிகள் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை விரும்பும் கடும் போக்காளர்கள் என பி.பி.சி.வானொலி விமர்சிப்பு.

✱ யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலை படையினர் உடனடியாக மேற்கொள்வது சாத்தியமான ஒன்றல்ல என விமானப் படையின் முன்னாள் தளபதி மார்ஷல் ஹறி குணதிலக பி.பி.சி. வானொலிக்குத் தெரிவிப்பு.

# ஐ.நா.சபையின் நிபுணர் குழுவை சந்திப்பதற்கு தயாராக உள்ளோம்

## சரத்பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை2

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் பான் கீ மூனினால் அமைக்கப்பட்டுள் நிபுணர் குழுவைச் சந்திக்க தாம் தயாராகி வருவதாக இலங்கையில் தடுத்துவைக்கப் பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. சந்தேசிய சிங்கள சேவைக்கு செவ்வியளித்துள்ள அவர் இலங்கையின் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் விசாரணைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்கியுள்ளதாக சரத்பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

பான் கீ மூன் இலங்கைக்கு வந்திருந்த போது அவருக்கும் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலேயே நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தாம் நம்புவதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகள் சபையுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர் என்ற வகையில் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு விசாரணைகளுக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ள அவர், இதற்கு தாமதம் காட்டக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழு நியமனத்தின் மூலம் இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக தாம் எண்ணவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீடிப்புக்காக தாம் உட்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரியுள்ளதாகவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

(50)


## சித்திவிநாயகர் (ஐயனார்) கோயில்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்



**2010 ஆம் ஆண்டு மஹோற்சவ அறிவித்தல்**

விகிர்தி வருஷம் ஆனி மாதம் 32ஆம் நாள் (16.07.2010) வெள்ளிக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

தர்மகர்த்தா : சு.சற்குணம்.



## முக்கிய அறிவித்தல்

### கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 30.04.2009 இல் நிதி கூற்று தயாரித்தல்

*மேற்படி எமது சங்கம் மீளக்குடியமர்ந்த பின் 30.04.2009 இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிக்கூற்றுத் தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற்படி திகதியில் உறுதிப்பத்திரங்களை 15.07.2010 இற்கு முன் தலைவர்/பொதுமுகாமையாளர், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கட்சன் வீதி, வட்டக்கச்சி எனும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கலாம் அல்லது நேரடியாகக் கையளிக்க முடியும்.*

I) **சங்கத்திற்கு வருமதியானது**
*01) வியாபாரக் கடன் பெற்றோர்*
*02) முற்பணம் பெற்றோர்*
*03) மற்றும் ஏனைய வருமதிகள்*

II) **சங்கத்திடமிருந்து செலுத்தவேண்டியவை**
*01) வியாபாரச் சென்மதிகள்*
*02) முற்பணம்*
*03) ஏனைய சென்மதிகள்*

III) **கிராமிய வங்கியில் வைப்புச் செய்தோர்**
*மேற்படி எமது சங்கத்திலுள்ள கிராமிய வங்கியில் சேமிப்பு, நிலையான வைப்பு மற்றும் ஏனைய வைப்புச் செய்தவர்கள் தமது சேமவைப்பு புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் பரிசீலனைக்காக சங்கத்திற்கு சமர்ப்பித்து 30.04.2010 இல் மீதியை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.*

IV) *இடம்பெயர்வு தொடர்பில் சங்கம் தொடர்பாக ஏதும் தகவல்கள் இருப்பின் அதனையும் சங்கத்திற்குச் சமர்ப்பிக்கவும்.*

தலைவர்,
கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
கட்சன் வீதி,
வட்டக்கச்சி.

(சி/568792)



பாஷையூர் மக்கள் படையின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உள்ளூர் அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மத்தியஸ்தர்கள் சகிதம் வீரர்கள் மைதானத்துக்குள் பிரவேசிப்பதை முதல் படத்திலும், சிறந்த வீரர்களாக தெரிவுசெய்யப்பட்ட 'ஹப்பினஸ்' அணி வீரன் கலிஸ்ரஸ், யுப்பிற்றஸ் அணி வீரர் சுஜனன் ஆகியோருக்கான விருதினை மக்கள் படையின் பிரமுகர் எஸ்.பாஸ்கரன் வழங்குவதினை இரண்டாவது மூன்றாவது படத்திலும் -

சிறந்த கோல் காப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்ட ஹப்பினஸ் அணியின் கோல் காப்பாளர் எ.யதிபனுக்குரிய விருதினை மரியதாஸ் வழங்குவதை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# வடக்கு மாகாண பெரு விளையாட்டுப் போட்டிகள்; யாழ். மாவட்டம் 14 இடங்களைப் பெற்றுச் சாதனை

வலி.வடக்கு,ஜூலை2

வட மாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான 19 பெரு விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.மாவட்டம் 14 போட்டிகளில் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் கடந்தமாதம் 10ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மைதானங்களில் இடம் பெற்றன. இப் போட்டிகளில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டப் பாடசாலை அணிகள் கலந்து கொண்டன.

இப்போட்டிகளில் மாவட்ட ரீதியாக பெறப்பட்ட பெறு பேறுகளின் விவரம் வருமாறு:

| | இடம் | | |
|---|---|---|---|
| | 01 | 02 | 03 |
| யாழ்ப்பாணம் | 14 | 15 | 11 |
| வவுனியா | 04 | - | 02 |
| மன்னார் | 01 | 02 | 04 |
| கிளிநொச்சி | - | - | - |
| முல்லைத்தீவு | - | - | - |
| | 19 | 17 | 17 |

17 பெரு விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து மாவட்டப் பாடசாலை அணிகளும் கலந்து கொண்டன.

17,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் ஏனைய மாவட்ட அணிகள் கலந்து கொள்ளவில்லை.

நீச்சல் போட்டியில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் சீராக இயங்காமையால் நலன்புரி நிலையங்களில் இருந்து போட்டிகளில் மட்டுப்படுத்திய அளவிலேயே கலந்து கொண்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டம்; ஆறு விக்கெட்டுக்களால் வென்றது யாழ்.சென்றல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 17 வயதுப் பிரிவினருக்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி ஆறுவிக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கடந்த வாரம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி (பி) அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி (பி) அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி (பி) அணியினர் 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் துசியந்தன் 22 ஓட்டங்களையும், வாகீசன், யசீதன், துவாரகன் ஆகியோர் முறையே 10, 10, 8 ஓட்டங்களை தமது அணிக்காகப்பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான சிறிவண்ணன் 8 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கிசாந்தன் 8 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கோகுலன் 9 ஓவர்கள் பந்து வீசி ஆறு ஓட்டங்களை கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் 13 ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்க ளைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி (பி) அணி வீரர்களான விதுசன் 6 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சயன் 5 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களையும் கொடுத்து 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(1-23)

# வடக்கு மாகாண மட்டத்தில் ஞாயிறன்று தடகளப் போட்டிகள் ஆரம்பமாகின்றன

வலி.வடக்கு, ஜூலை 2

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் கடந்த மாதம் இரு வாரங்களாக மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து தடகளப் போட்டிகள் நாளை மறுதினம் முதல் 7ஆம் திகதி வரை இரண்டாம் கட்டமாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகளில் யாழ்ப்பாணம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்தி ஐநூறுக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து வரும் வீர, வீராங்கனைகள் தங்க வைப்பதற்காக பாடசாலைகளில் இட ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா, மன்னார் மாவட்ட வீரர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட வீரர்கள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் தங்க வைக்கப்படவுள்ளனர்.

வீராங்கனைகளில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயத்திலும்-

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் அடைக்கல மாதா மகா வித்தியாலயத்திலும்-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்படவுள்ளார்கள்.

இதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் வடமாகாண கல்வித் திணைக் கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் கே. சத்தியபாலன் யாழ்.கல்வி வலய அலுவலர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை2

தியாகிகள் தினத்தை ஒட்டி பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

★ பி.ப 3 - 45 மணி - வதிரி டைமன்ஸ் வி.க.

★ பி.ப. 5 மணி நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. எதிர் காந்தி நீயூ ஸ்ரார் வி.க. (1-23)

# புத்தூர் கலைமதி வி.கவின் ஏற்பாட்டில் 48 கழகங்கள் பங்கேற்கும் சுற்றுப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை2

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் வலிகாமம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

48 கழகங்கள் பங்கு பற்றும் இந்த உதைபந்தாட்டப் போட்டி எட்டுக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் முதல் சுற்றில் லீக் முறையில் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் ஆறு கழகங்கள் இடம்பெற்றுள்ளன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த 22 கழகங்களும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த 15 கழகங்களும் யாழ். லீக்கை சேர்ந்த 11 கழகங்களும் இப் போட்டியில் மோதவுள்ளன. (1-86)

# மல்லாகத்தில் நாளை கரப்பந்தாட்டம்

வலி.வடக்கு,ஜூலை2

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் ஜெகநாதனின் 21 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

'எ' பிரிவில் புத்தூர் ஆவரங்கால் மத்தி வி.க., புத்தூர் கலைமதி வி.க., காங்கேசன் துறை ஐக்கிய வி.கழகம் ஆகியனவும் -

'பி' பிரிவில் புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம், புத்தூர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க, யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியனவும் மோதவுள்ளன.

முதல் சுற்றுக்கள் லீக் முறையில் இடம் பெறவுள்ளன. (1-86)



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதிக்கொள்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# டக்ளஸ் மன்மோகனுடன் அமரலாம் என்றால் பிரபாவின் தாயார் சிகிச்சைக்கு வரக்கூடாதா?

## வைகோ எழுப்பும் கேள்வி



மதுரை,ஜூலை2

கொலைவழக்கில் தேடப்பட்டு வரும் சந்தேகநபரான இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா டில்லிக்கு வந்து பிரதமர் அருகில் அமரலாம். ஆனால், பிரபாகரனின் தாய் பார்வதியம்மாள் இங்கு சிகிச்சை பெற வரக் கூடாதா?

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவாளரும், தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியுமான ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், சென்னை உயர்நீதிமன்றில் தமிழை வழக்காடு மொழியாக்க முதல்வர் கருணாநிதிக்கு விருப்பமில்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றில் தமிழில் வாதாட அனுமதி கோரி மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் மதுரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

முதல்வர் கருணாநிதி சட்டத்தரணிகளை எதிரிகளாகக் கருதுகிறார். உயர்நீதிமன்றில்தமிழில்வாதாட சட்டபூர்வ உத் தரவாதம் வேண்டும். இதற்குத்தான் சட்டத்தரணிகள் போராடினர். இது கட்சி சார்ந்த போராட்டமல்ல.

உயர்நீதிமன் றில் தமிழை வழக் காடு மொழியாக்க மத்திய அரசு முடி வெடுத்து, ஜனாதி பதியின் ஒப்புத லுக்கு அனுப்ப வேண்டும். இதை ஏன் மத்திய அரசு மற்றும் தமிழக முதல்வர் செய்யவில்லை. இதை வலியுறுத்தி தமிழ்ச் செம் மொழி மாநாட்டில் பிரகடனம் செய்திருக்கலாமே. இதில் கருணாநிதிக்கே விருப்பமில்லை.

சட்டசபையில் 2006இல் தீர்மானம் நிறைவேற்றியமை பற்றி மத்திய அரசுக்கு பல முறை கடிதம் எழுதினார் என அவர் கூறுகிறார். ஒரு காரியத்தை மத்திய அரசு செய்ய வேண்டாமெனில், கருணாநிதி கடிதம் எழுதுவார். காரியம் நடக்க வேண்டுமெனில், டில்லி செல்வார். இதில், பிரதமர் மன்மோகன்சிங், கருணாநிதி இடையே ரகசிய ஒப்பந்தம் உள்ளது.

இலங்கையில் நம் தொப்புள் கொடி உறவுகள் கொல்லப்பட்டனர். மீதமுள்ள தமிழர்கள் அழுதுகொண்டிருக்கும் நிலையில், இங்கு கூத்தும், கும்மாளமுமாக மாநாடு நடந்துள்ளது.

சென்னை சூளைமேட்டில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தேடப்பட்டு வரும் சந்தேகநபரான இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா டில்லியில் பிரதமர் அருகில் அமரலாம். ஆனால், பிரபாகரனின் தாய் பார்வதியம்மாள் இங்கு சிகிச்சைக்கு வரக்கூடாதா?

பார்வதி அம்மாள் சென்னையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டமைக்குக் காரணம் தமிழக அரசுதான். மத்திய அரசு அல்ல.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# இந்தியச் செய்திகள்

# ஈழத்தமிழ் மாணவர்களுக்கும் பொறியியல் படிப்பில் இடம்

## முதல்வர் கருணாநிதி உத்தரவு



சென்னை,ஜூலை2

பொறியியல் படிப்பில் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கும் இடம் உண்டு - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதியின் மகனாகப் பிறந்த ஒருவர் கூடுதல் மதிப்பெண்களைப் பெற்ற நிலையிலும் அவருக்கு பொறியியல் கல்வி பயில வாய்ப்புத் தரப்படவில்லை என பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இதற்கு விளக்கம் அளித்து, முதல்வர் கருணாநிதி கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தாம் பாதிக்கப்பட்டார் என கூறிய மாணவரே உயர்கல்வித் துறை அமைச்சரைச் சந்தித்து தனது குறையைத் தெரிவித்தார்.

உடனடியாக, அவரது குறை களையப்பட்டு அவர் தொழிற்கல்வி பயில வாய்ப்பு வழங்கப்பட்டது. அது மாத்திரமல்ல, பொதுவாகவே தமிழகப் பாடசாலைகளில் படித்த இலங்கை அகதிகளுடைய குழந்தைகளைப் பொதுப் பட்டியலில், தரவரிசையின் அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்து, அதற்கான அரசு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'தமிழீழமே! எங்களை மன்னிக்காதே! கலெக்டர் அலுவலகத்தில் சுவரொட்டி

கடலூர்,ஜூலை2

கடலூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் மதியம் 'தமிழீழமே! எங்களை மன்னிக்காதே! என்ற தலைப்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது

தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒட்டப்பட்டிருந்த இந்த சுவரொட்டிகளை பொலிஸார் அதிரடியாக அகற்றினர். மேலும், இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அந்தச் சுவரொட்டியில், 'உரிமை கேட்டாய்! அடிமை ஆக்கினோம்! கொலை செய்தாரை அரியணை ஏற்றினோம்! பழம் பெருமை பேசி, மண், மொழி இழந்தோம்! திராவிட மாயையால் திக்கற்றுப் போனோம்! வந்தேறிகள் வாழ வழியும் வகுத்தோம்! இந்திய மாயையில் இனி... மண்ணும் இழப்போம்! மானமும் இழப்போம்!' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுவரொட்டியில், 11 ஜாதிகளின் சங்கங்கள் என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுகுறித்து தகவலறிந்த கடலூர் புதுநகர் பொலிஸார் விரைந்து வந்து, அனைத்துச் சுவரொட்டிகளையும் கிழித்து அப்புறப்படுத்தினர். மேலும், இது தொடர்பாக வழக்குப் பதிந்து சுவரொட்டிகளை ஒட்டிய நபர்களைத் தேடி வருகின்றனர்.

# மத்திய ரிசேர்வ் பொலிஸார் மீதான தாக்குதலில் 15 நக்ஸல்களும் பலி!

ராய்ப்பூர்,ஜூலை2

சத்தீஸ்கர் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் சி.ஆர்.பி.எப். பொலிஸார் மீது நக்ஸல்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியபோது நக்ஸல் தரப்பிலும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சி.ஆர்.பி.எப். பொலிஸாரின் பதிலடியில் 15 நக்ஸல்கள் இறந்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

சி.ஆர்.பி.எப். படைப்பிரியனரும் மலை உச்சியில் மறைந்திருந்து தம்மைத் தாக்கிய நக்ஸல்கள் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் 15 நக்ஸல்கள் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது என சத்தீஸ்கர் மாநிலப் பொலிஸ் தலைவர் விஸ்வரஞ்சன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

எனினும், அவர்களது உடல்கள் கிடைக்கவில்லை. பொலிஸ் தாக்குதலில் பலியாகும் தமது சகாக்களின் உடல்களை நக்ஸல்கள் உடனுக்குடன் அப்புறப்படுத்தி விடுவார்கள். அப்படித்தான் இந்த உடல்களும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சத்தீஸ்கரில் கடந்த செவ்வாயன்று நக்ஸல்கள் நடத்திய தாக்குதலில் 26 பொலிஸார் கொல்லப்பட்டனர். மேலும் சத்தீஸ்கரின் 4 சிறப்புப் பொலிஸ் படை அதிகாரிகள் உட்பட 8 பேர் காயம் அடைந்தனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் நக்ஸல் தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது. நக்ஸல் தாக்குதலில் இறந்த சி.ஆர்.பி.எப். பொலிஸாரின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக ராய்ப்பூர் கொண்டுவரப்படுகின்றன. இந்தப் பரிசோதனைக்காக டொக்டர்கள் அடங்கிய 6 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் நக்ஸல்களின் தாக்குதலில் இறந்தோரின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

# இலங்கை சென்றிருக்கும் அசின் மீது நடவடிக்கை

## நடிகர் சங்கச் செயலர் ராதாரவி தெரிவிப்பு



சென்னை, ஜூலை 2

தமிழ் நடிகர் - நடிகைகள் யாரும் இலங்கை சென்று நடிக்கக் கூடாது என்ற தென்னிந்தியத் திரையுலகக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை மீறி, ஹிந்தி படத்தின்படப்பிடிப்புக்காக நடிகை அசின் இலங்கை சென்றி ருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு நடிகர் சங்கச் செயலாளர் ராதாரவி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து, தமிழ்ப் படப்பிடிப்புகளை இலங்கையில் நடத்தக் கூடாது என்றும், நடிகர் நடிகைகள் யாரும் படப்பிடிப்புக்காக இலங்கை செல்லக் கூடாது என்றும் பிலிம்சேம்பர், தென்னிந்திய நடிகர் சங்கம், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், விநியோகஸ்தர்கள் சங்கம், திரையரங்கு அதிபர்கள் சங்கம், திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஒரு முடிவெடுத்தன.

இந்தக் கூட்டமைப்பு எடுத்த முடிவை நடிகை அசின் மீறியிருக்கிறார்.

சல்மான்கான் கதாநாயகனாக நடிக்கும் 'ரெடி' என்ற ஹிந்திப் படத்தில், அவருக்கு ஜோடியாக அசின் நடிக்கிறார். அந்தப் படத்தின் படப்பிடிப்பு இலங்கையில் நடைபெறுகிறது. அதில் கலந்து கொள்வதற்காக, அசின் இலங்கை சென்று இருக்கிறார்.

தமிழ் நடிகர் - நடிகைகள் யாரும் இலங்கை சென்று நடிக்கக்கூடாது என்ற கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை மீறி, அசின் இலங்கை சென்று ஹிந்திப் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நடிகர் சங்க செயலாளர் ராதாரவியிடம் கேட்கப்பட்டது.



அதற்குப் பதிலளித்து ராதாரவி கூறுகையில் -

கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை அசின் மீறியது வன்மையாக கண்டிக்கத்தக்கது. அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி கூட்டமைப்புடன் கலந்து பேசி முடிவு செய்வோம் - என்று தெரிவித்தார்.

# மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து வரும் 13இல் ஜெயலலிதா போராட்டம்



சென்னை,ஜூலை2

மத்திய, மாநில அரசுகளின் செயற்பாடுகளைக் கண்டித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தலைமையில் கோவையில் வரும் 13 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் பதுக்கல், கடத்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதாலும், 'ஒன்லைன்' வர்த்தகம் காரணமாகவும் விலைவாசி உயர்ந்து கொண்டே செல்கிறது.

நான்கு ஆண்டு காலமாகியும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக, தி.மு.கவின் முழு ஆதரவோடு பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை மத்திய அரசு தற்போது மேலும் உயர்த்தியுள்ளது. இதனால், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சந்தை விலைக்கேற்ப எரிபொருள் நிறுவனங்களே பெற்றோல் விலையை உயர்த்திக் கொள்ளலாம் என்ற அனுமதியால், விலைவாசி தொடர்ந்து உயர்ந்து கொண்டே போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தது முதல், தமிழ்நாட்டில் வரலாறு காணாத மின்வெட்டு நிலவுகிறது. அனல் மின் நிலையங்கள் சரியாக பராமரிக்கப்படாதது, மத்திய மின் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டுக்கான உரிமையைக் கேட்டுப் பெறாதது, நிர்வாகத் திறமையின்மை, மின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்காதது ஆகியவைதான் மின்வெட்டு பிரச்சினைக்குக் காரணம். இதனால், அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலாவதியான மருந்து, போலி மருந்து, காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை ஆகியவையும் தமிழ்நாட்டில் பெரும் பிரச்சினையாக உள்ளது.

உரத்துக்கு அளித்து வந்த ரூபா 3 ஆயிரம் கோடி மானியத்தை மத்திய அரசு குறைத்ததோடு, உர விலை மீதான கட்டுப்பாட்டையும் நீக்கியது. இதன் காரணமாக உர விலை உயர்ந்து விட்டது. மத்திய அரசின் இந்த முடிவை மத்திய உரத் துறை அமைச்சரான மு.க.அழகிரியால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

நதி நீர் பிரச்சினைகளில் தமிழகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. சட்டம் - ஒழுங்கு பாதிக்கப்பட்டு மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனவே, மத்திய அரசையும், மாநிலத்தில் ஆளும் தி.மு.க. அரசின் மோசமான செயற்பாடுகளையும் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் கோவையில் வரும் 13 ஆம் திகதி எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு கிழக்கில் இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் கடந்த ஆண்டு மே மாதத்தின் இறுதிப் பகுதியில் வடக்குக் கிழக்கு பிரதேசத்தில் பெரும் பகுதிகள் நிர்மூலமாக்கப்பட்டன. 40,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் குரூரமாகக் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான விதவைகளும் பலநூறு அநாதைச் சிறுவர்களும் உருவாக்கப்பட்டனர். பல்லாயிரம் தமிழ் மக்கள் வயது, பால் வேறுபாடின்றி ஊனமாக்கப்பட்டனர். 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தனர்.

3 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டன. பல வைத்தியசாலைகளும் ஏராளமான பாடசாலைகளும் சிதைக்கப்பட்டன. இந்நிலையிலேயே இந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வரவு செலவுத் திட்டமானது தென்னிலங்கையைப் பொறுத்தவரை கட்சி ஆதரவுத்தளம் என்ற பாரபட்சத்துடன் தயாரிக்கப்பட்டதாகவும் வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை நிகழ்த்தப்பட்ட மேலதிக பட்டியலிடப்பட்ட அழிவுகளிலிருந்து தமிழ் மக்கள் மீண்டுவிடக்கூடாது என்ற உறுதியான நிலைப்பாட்டுடனும் தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

எமது தாயகத்திலேயே எமது அரசியல் பொருளாதார கலாசார உரிமைகளைப் பறித்து - எமது தனித்துவத்தை அழித்து - பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தை அங்கு நிலைநாட்டுவதற்கான வக்கிரப் போக்கை இந்த வரவு - செலவுத் திட்டம் வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் இத்தகைய போர் அழிவின் பின்னரான வரவு - செலவுத் திட்டமானது போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகள், அந்த மக்கள் தமது சொந்த வீடுகளில் மீண்டும் வாழ வைக்கும் திட்டங்கள், அந்த மக்களின் வாழ்வாதாரங்களை மீளுருவாக்கும் திட்டங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் அரச நிர்வாகக் கட்டடங்கள் உட்பட்ட உட்கட்டமைப்புகளை மீள நிர்மாணம் செய்தல் ஆகிய விடயங்களை முன்னிலைப்படுத்தியதாகவே காணப்படும்.

### தமிழ் மக்களை விடுவிப்பது என்பதற்கு நேர் மாறாக.....

ஆனால் புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் மனிதாபிமான நடவடிக்கை என்ற ஆளும் தரப்பினரின் கூற்றுக்கு நேர்மாறாக இந்த வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

இந்த நாட்டில் பயங்கரவாத்திற்கான போர் என்ற போர்வையில் தமிழ்த் தேசிய இனத்தைப் பூண்டோடு அழிப்பதற்கான யுத்தம் நாசுக்கான பல புதிய வடிவங்களில் தொடர்வதையே இன்றைய வரவு - செலவுத் திட்டம் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டி நிற்கிறது.

இந்த வரவு - செலவுத்திட்டம் பொதுவாக இலங்கை மக்கள் அனைவரது அடிப்படை மற்றும் மனித உரிமைகளைத் தொடர்ந்தும் பாதிப்பதற்கும் அவர்களை பட்டினிக்குள் தள்ளுவதையுமே நோக்கமாக கொண்டுள்ளது. குறிப்பாக தமிழ்த் தேசிய இனத்தை மொத்தமாக அழித்தொழிப்பதை அல்லது நாட்டை விட்டு விரட்டுவதை நோக்கமாக கொண்டதாகவே இந்த வரவு - செலவுத்திட்டம் அமைந்துள்ளது.

யுத்தம் கொடூரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதிகளில் யுத்தத்துக்காக அதிகூடியளவு பணம் செலவிடப்பட்டுள்ளமையால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நாட்டின் மொத்தச் செலவில் 50 வீதத்திற்கும் அதிகளவான தொகை யுத்தச் செலவுக் கடன்கள் மற்றும் வட்டிகளுக்காக செலவிடப்படுகின்றது. இதனால் பொருளாதார அபிவிருத்திக்கு மிகக் குறைந்தளவு பணமே ஒதுக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 20 ஆயிரத்து 200 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ள அரசு, நாட்டை அபிவிருத்தி செய்யும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு வெறும் 6100 கோடி மாத்திரமே ஒதுக்கியுள்ளது.

### உணவுக்குக் கையேந்தும் நிலையில் தமிழ் மக்கள்

பிச்சைக்காரர்களையே கண்டிராத வந்தவர்க்கெல்லாம் உணவளித்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி மக்களை உணவுக்குக் கையேந்தும் நிலைக்குத் தள்ளியிருக்கின்றீர்கள். இது அடிப்படை பொருளாதார தத்துவத்திற்கும் ஜனநாயகத்திற்கும் முரணானது. இத்தோடு முடிந்துவிடவில்லை. நிதி ஒதுக்கீட்டில் இந்த அரசின் அப்பட்டமான இனப்பாரபட்சக் கொள்கை ஒவ்வோர் துறையிலும் தெளிவாகப் புலப்படுகிறது. உதாரணமாக மாவட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை எடுத்துக் கொண்டால் மிகவும் வளர்ச்சி அடைந்த மாவட்டங்களான கம்பஹா மாவட்டத்திற்கு 56 கோடியே 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது ஏன்?

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாவட்டம் என்ற காரணத்திற்காக இவ்வளவு அதிக ஒதுக்கீடா?

அதேசமயம் எந்தப் பாதிப்பும் ஏற்படாத ஜனாபதியின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டைக்கு 37 கோடியே 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டள்ளது. அதேவேளை இந்த அரசால் துவம்சம் செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வெறும் 99 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு வெறும் 12 கோடி 20 லட்சம் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

உண்மையாகவும் நேர்மையாகவும் இதனை அணுகுவோமாக இருந்தால் கம்பஹாவிற்கும் கொழும்பிற்கும் ஒதுக்கப்பட்ட் பணம் கிளிநொச்சிக்கும் முல்லைத்தீவிற்கும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு மறுதலையாக இருக்கின்றது.

இவர்கள்தான் இந்த நாட்டில் சிறுபான்மை, பெரும்பான்மை என்று எதுவுமில்லை எல்லோரும் இலங்கையர்களென வார்த்தை ஜாலங்களை விட்டு உலகை ஏமாற்றுகின்றனர். எல்லோரும் இலங்கையர் என உண்மையில் இந்த அரசு நினைத்திருந்தால் இந்த வரவு - செலவுத் திட்டம் நேரெதிராக இருந்திருக்கும்.

### வடக்குக் கிழக்கில் பாடசாலைகள் அழிப்பு

வடக்கு, கிழக்கில் பாடசாலைகள் முற்றாகவோ பகுதியாகவோ அழிக்கப் பட்டுள்ளன. சில பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. சில பாட சாலைகள் இடம்பெயர்க்கப்பட்ட மக்களின் முகாம்களாக உள்ளன. அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலய கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து கொல்லப்பட்ட வர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. யுத்தம் முடிவடைந்த பின்னரும் பலாலி வீமன் காமம் மகா வித்தியாலயம் புல்டோசர் கொண்டு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு இரா ணுவ பயிற்சிக்கான நிலமாக மாற்றப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கின் கல்விக்கு இந்த ஆட்சியாளர்கள் கொடுக்கும் மதிப்பு இவ்வளவுதான். கல்விக்கான ஒதுக்கீட்டால் வடக்குக் கிழக்கின் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் மீள் கட்டுமானம் செய்யப்பட்டு தேவையான தளபாடங்கள் உபகரணங்கள் வழங்கப்பட்டு அது முழுமையாகச் செயற்பட வேண்டும். வடக்குக் கிழக்கின் பல்கலைக் கழகங்களுக்கு போதிய தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். வவுனியா பல்கலைக்கழக வளாகம் திருமலை பல்கலைக்கழக வளாகம் ஆகியவை முழுமையான பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்தப்பட வேண்டும். இவற்றுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட வேண்டும். துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் அழித் தொழிப்பதற்கும் ஒதுக்கப்படும் நிதியை ஆக்கத்திற்குரிய நிதியாக மாற்றினால் மட்டுமே இந்த நாடு முன்னேற்றம் பற்றிச் சிந்திப்பதாகக் கொள்ள முடியும்.

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. இன்றும் யுத்த மமதைக்குள்ளும் யுத்த மாயைக்குள்ளும் மக்களை அமிழ்த்தி உங்கள் ஆட்சியை நடத்துவதற்கான உத்திகள்தான் உங்கள் பேச்சிலும் செயலிலும் வரவு செலவு திட்டத்திலும் வெளிப்படுகின்றன. இந்த நாட்டில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் இந்நாட்டில் நிரந்தர பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாக இருந்தால் முப்படைகளின் தொகை 1983 இற்கு முன்னரான நிலைக்குக் குறைக்கப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்கள் 1983 இற்கு முன்னர் இருந்தளவுக்கு குறைக்கப்பட வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ ஆட்சியை வலுப்படுத்துவதற்கான முனைப்புகள் அதிகரித்து வருகின்றன. அதனூடாக பல முனைகளில் தமிழ் இன அழிப்பை வேகப்படுத்துவதற்கே இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டள்ளது. தமிழ் மக்களை புலிகளிடமிருந்து விடுவித்தல் என்ற பெயரால் தமிழ் மக்களை இந்த நாட்டிலிருந்தும் இந்த உலகத்திலிருந்தும் விடுவிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் மக்கள் தமது ஜனநாயகபூர்வ கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். தமிழ் மக்கள்கூடி அரசியல் நிலைமைகளையோ நாட்டு நிலைமைகளையோ விவாதிப்பதே ஓர் அச்சத்திற்குரிய விடயமாக மாற்றப்பட்டுள்ளது. அப்படியான கூட்டங்கள், விவாதங்களில் ஈடுபடுவோர் அரச புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கப்படுகின்றனர். அவர்கள் கொல்லப்படுவர் என மிரட்டப்படுகின்றனர். மக்கள் ஊமைகளாகவும் மந்தைகளாகவும் வாழவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வடக்கு - கிழக்கின் ஜனநாயகம் இந்த வள்ளலில்தான் இருக்கின்றது.

வடக்கு - கிழக்கு வழமையான வாழ்வுக்கு திரும்புமானால் அரிசி, மீன், பால், உப உணவுகள் போன்றவற்றில் நாடு தன்னிறைவு அடையக் கூடிய நிலை ஏற்படும். ஆனால் வடக்குக் கிழக்கு முழுமையாக வழமைக்குத் திரும்பி விடக்கூடாது என்ற திட்டத்திலேயே இந்த அரசு செயற்படுகின்றது. வடக்குக் கிழக்கில் ஏறத்தாழ 3 லட்சம் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. திருகோணமலையின் சம்பூர் பிரதேசத்தில் பல நூற்றுக் கணக்காண மக்கள் வாழ்ந்த இடங்கள் புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கப்பட்டு வீடுகள் இருந்த அடையாளம் இன்றி வெட்டை வெளி ஆக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் தென்மராட்சி பாதுகாப்பு வலயத்திலும் இதே நிலைதான். தனியார் நிலங்களையும் வீடுகளையும் ஆக்கிரமிப்பது அரசாக இருந்தாலும் அது சட்ட விரோதமானதே.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு சட்டப் பாதுகாப்பு கிடையாது. அவர்களின் வீடுகளை யார் வேண்டுமானலும் அழிக்கலாம். உடமைகளை கொள்ளையிடலாம் நிலங்களை ஆக்கிரமிக்கலாம். அதனை அவர்கள் பாதுகாக்க இந்த நாட்டில் சட்டம், நீதித்துறை நிர்வாகம் எதுவும் உதவி செய்யா என்ற நிலையே இங்கு வளர்க்கப்பட்டுள்ளது. இந்த அராஜக ஆட்சிப் போக்கு நிறுத்தப்பட வேண்டும். அவர்களின் வீடுகளின் பெறுமதிகள் இழப்பீடாக வழங்கப்பட வேண்டும்.

### மாவிலாறுக்கு ஒரு நீதி சம்பூருக்கு இன்னொரு நீதி

மாவிலாறு பூட்டியதால் ஒருபோக நெல் விதைத்தல் பாதிக்கப்பட்டதிற்கு அந்த மக்களுக்கு நிவாரணப் பணம் வழங்கிய அரசு, காங்கேசன்துறையிலும், தென்மராட்சியிலும், சம்பூரிலும் 4 தொடக்கம் 15 வருடங்கள் வரை அவர்களின் வளம் மிக்க நிலங்களில் விவசாயம் செய்ய விடாது - கால்நடைகளை வளர்க்க விடாது தடுத்ததற்கு எத்தகைய இழப்பீட்டினை வழங்கியது?

சிங்கள மக்களுக்கு உரித்தான அனைத்தும் தமிழ் மக்களுக்கும் உரித்தானது என இந்த அரசு கருதினால் அந்த மக்களுக்குமான இழப்பீடுகளை வழங்க அரசு முன்வர வேண்டும். அப்படி வழங்காத பட்சத்தில் நீங்கள் பாரபட்சமான இனவாதத் தன்மை கொண்ட ஓர் அரசு என்பதையே நிரூபித்திருக்கின்றீர்கள்.

சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பது என்ற பேரில் 10 ஆயிரம் ஏக்கர் விளை நிலம் கபளீகரம் செய்யப்பட்டு அதன் உரிமையாளர்கள் எந்த வசதியுமற்ற ஒதுக்குப்புறமான இடங்களிற்கு விரட்டப்பட்டுள்ளனர். அனல் மின் நிலையத்திற்கு அவ்வளவு இடம் தேவையில்லை. இலங்கை வரலாற்றில் ஏதேனும் ஓர் அபிவிருத்தித் திட்டத்திற்கு பத்தாயிரம் ஏக்கர் நிலம் பயன்படுத்தப்பட்டுள்ளதா? தனியார் நிலச் சுவீகரிப்புக்கான அனைத்து சட்டதிட்டங்களையும் நடைமுறைகளையும் மீறி இப்பாரிய நிலம் மக்களிடமிருந்து திருடப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் ஆகிய திட்டங்கள் மிச்சம் மீதமாக அந்த மக்களுக்கென உள்ள சிறு வளங்களையும் அபகரிக்கவும் சுரண்டவுமே வகுக்கப்படுகின்றன. உயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு உரியவர்களின் நிலங்கள் உரிய இழப்பீட்டுடன் உரிமையாளர்களுக்குச் சேர்க்கப்பட வேண்டும்.

### நந்திக்கடல் சீனாவுக்குக் குத்தகை

யுத்தம் முடிவடைந்து 16 மாதங்கள் கடந்தும் இன்னும் வடக்குக் கிழக்கின் பல பிரதேசங்களில் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. முல்லைத்தீவுக் கரையோரம் முழுவதும் இன்னமும் அந்த மக்களுக்கு சூனியப் பிரதேசமாக்கப்பட்டுள்ளது. ஆனால் தென்னிலங்கை மீனவர்கள் அங்கு வந்து மீன் பிடித்துச் செல்கின்றார்கள். 1983 இற்கு முன்னர் இலங்கையின் மொத்த மீன் தேவையின் பாதிக்கு மேல் வடக்குக் கிழக்கு மீனவர்கள் வழங்கி வந்தார்கள்.

15 ஆண்டுகளுக்கு மேலாக அவர்களுடைய தொழில் சுதந்திரம் மறுக்கப்பட்டு வருகிறது. கடலுணவு ஏற்றுமதி மூலம் இந்த நாட்டுக்கு பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்த அந்த மக்களுக்கு ஒன்றரை தசாப்தத்திற்கு மேலாக சொந்த இடத்தில் வாழும் உரிமை, பொருளாதாரச் சுதந்திரம் ஆகியவை மறுக்கப்பட்டு வருகின்றன. உலக உணவுத் திட்டத்தின் தானியங்களில் தங்கி வாழ்வை ஓட்ட வேண்டிய பரிதாப நிலைக்கு அம்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கு மேல் அரசு அவர்களைக் குடியமர்த்துவதற்கும் அவர்களுடைய தொழில் உரிமையை மறுப்பதற்கும் கூறக்கூடிய எந்தக் காரணமும் தமிழின ஒழிப்புத் திட்டத்தின் அம்சங்களாக - தமிழ்த் தேசிய இனத்தின் மீதான சிங்கள மேலாதிக்கத்தை நிறுவும் முயற்சிகளாக மட்டுமே நோக்க முடியும்.

எனவே, வடக்குக் கிழக்கு மீனவர் தொடர்பான இப்பாரபட்சப் போக்குக்கு உடனடி முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்கின் அனைத்து மீனவர்களும் மீள்குடியேற்றப்பட்டு படகு, வலைகள் போன்ற உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும். அவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியைச் சேர்ந்த 350 குடும்பங்கள் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு சிங்கறால், இறால், நண்டு போன்ற விலைமதிப்புள்ள மீன் வகைகளைப் பிடித்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவி வந்தனர். இது அவர்களுக்கு நல்ல வாழ்வாதாரமாக அமைந்திருந்தது. சமீபத்தில் மீன்பிடித்துறை அமைச்சர் இந்தக் கடற்பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையை சீனாவிற்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இச்செயல் எமது மக்களின் வாழ்வாதாரத்தை சிதைப்பதோடு மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கின்ற செயலாகும்.

கடந்த 20 வருடங்களக காங்கேசன்துறையிலிருந்து தொண்டமானாறு வரையிலான கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் முற்றுமுழுதாகப் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி இராணுவத்தினரால் இடம் பெயர்க்கப்பட்டனர். இன்று யுத்தம் முடிந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த மக்கள் மீளக் குடியேறுவதற்கு அரசு உரிய அக்கறை செலுத்த வேண்டும்.

### இறப்புச் சான்றிதழை மாற்றும் முயற்சி

30 ஆண்டுகால யுத்தத்தில் தமிழ் மக்கள் இராணுவத் தாக்குதல்களால் பல தடவைகள் இடம்பெயர்க்கப்பட்டனர். ஒவ்வொரு இடப்பெயர்வின் பொழுதும் ஒவ்வோர் குடும்பத்தினரும் தம் உயிர்களையும் உடைமைகளையும் இழந்துள்ளனர். ஆனால் எந்த வகையான இழப்பீடும் அந்த மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இறுதி யுத்தத்தில் இறந்த மக்களின் இறப்புச் சான்றிதழை வழங்குவதில் பாதுகாப்புத்துறை தலையீடுகள் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

இறுதிக்கட்ட யுத்த தினங்களில் கொல்லப்பட்டோருக்கு உரிய தினங்களை விட்டு வேறு தினங்களில் இறந்தனர் எனப் பதியுமாறு அதிகாரிகள் நெருக்கடி கொடுக்கின்றனர் என அறிவிக்கப்படுகிறது. இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகள் நிறுத்தபடவேண்டும். அதுமாத்திரமல்ல யுத்தம் முடிந்து 16 மாதங்களாகிவிட்ட நிலையில் சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிட வேண்டிய எந்த அவசியமும் இல்லை. சிவில் நிர்வாகத்திடமிருந்து இராணுவம் முற்றுமுழுதாக விலகியிருக்க வேண்டும். சிவில் நிர்வாகத்தில் தீர்மானம் எடுப்பதிலிருந்தும் சிவில் நிர்வாகத்தின் தீர்மானத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதிலிருந்தும் இராணுவம் முற்றாக விலக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட உழவு இயந்திரங்களும், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும், அநேகமாக எல்லா வீடுகளிலும் சைக்கிள்களும் (23ஆம் பக்கம் பார்க்க)

# காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீர்க்க புதிய அணுகுமுறை அவசியம்

## பாக். வெளிவிவகார அமைச்சர் குரேஷி வலியுறுத்து

இஸ்லாமாபாத், ஜூலை 02

இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களுக்கிடையேயான காஷ்மீர் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குப் புதிய அணுகுமுறையை கையாள்வது அவசியம் என்று பாகிஸ் தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா முகமது குரேஷி புதன்கிழமை இதைத் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா, ஜூலை 15ஆம் திகதி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரது வருகை இரு நாடுகள் தரப்பிலும் பெரிய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போது, "இந்தியாவும், பாகிஸ்தானும் தங் களுக்கிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க புதிய அணுகுமுறையை கையாள வேண்டும்'' என்று குரேஷி வலியுறுத் தினார்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னாள் ஜனாதிபதி முஷாரப் வகுத்த 4 அம்சத் திட்டத்தைச் செயற்படுத்தும் திட்டம் பாகிஸ்தான் அரசுக்கு உள்ளதா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய தற்கு, "அந்த 4 அம்சத் திட்டம் முஷாரப் பின் சிந்தனையில் பிறந்தது. அவ்வளவு தான். அந்தத் திட்டம் குறித்து நாடாளு மன்றத்தில் விவாதிக்கப்படவில்லை'' என்றார்.

"அமைச்சரவையும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதனால் இத்திட்டத்தை உடனே செயற்படுத்திவிட இயலாது. பாகிஸ்தான் ஒரு ஜனநாயக நாடு. அதற்கென்று தனி நாடாளுமன்றம் உண்டு. அமைச்சரவையும் உள்ளது'' என்றும் அவர் விளக்கினார்.

"முஷாரப் வகுத்த 4 அம்சத் திட்டமும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுவது அவசியம்' என்றும் குரேஷி கூறினார்.

"இந்தியா-பாகிஸ்தான் இடையே நீண்டகாலமாக உள்ள பிரச்சினைகளை விரைந்து தீர்க்கவேண்டும் என்றே விரும்புகிறோம். இதற்காக எந்த ஒரு விடயத்தையும் அலட்சியப்படுத்த விரும்பவில்லை. இரு நாடுகள் எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் இரு நாடுகளுக்கிடையேயான சிக்கலைத் தீர்ப்பதில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமையவேண்டும். இதைத்தான் பாகிஸ்தான் விரும்புகிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் இந்திய விஞ்ஞானி கொலை

வாஷிங்டன், ஜூலை 02

அமெரிக்காவில் இந்திய விஞ்ஞானி திவ்யேந்து சின்ஹா மூன்று இளைஞர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

திவ்யேந்து சின்ஹா (வயது - 49) ஐஐடி காரக்பூர் முன்னாள் மாணவர். அமெரிக்காவில் கணனி விஞ்ஞானியாக வேலை பார்த்து வந்தவர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை, நியூ ஜெர்ஸியில் உள்ள தமது வீட்டின் அருகே சின்ஹா, அவரது இரண்டு புதல்வர்களுடன் சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த 17 வயது மதிக்கத்தக்க மூன்று இளைஞர்கள் சின்ஹாவை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். இதில் பலத்த காயமடைந்த அவர் திங்கட்கிழமை உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த உள்ளூர் சட்டத்தரணி புரூஸ் கேப்என், "தாக்குதல் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட விசாரணைக்கு பின்னரே தாக்குதலுக்கான உண்மைக் காரணம் குறித்துத் தெரிய வரும்'' என்றார்.

இதனிடையே, தாக்குதலுக்குக் காரணமான மூன்று இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# நேபாளப் பிரதமர் மாதவ் குமார் இழுபறிக்கு மத்தியில் இராஜிநாமா

காத்மாண்டு, ஜூலை 02

நேபாள பிரதமர் மாதவ் குமார் நேபாள், தமது பதவியை திடீரென இராஜிநாமா செய்துள்ளார். நேபாளத்தில் மாவோவாதிகள் தலைமையிலான கூட்டணி, தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. ஜனாதிபதியாக ராம்பரன் யாதவும், பிரதமராக பிரசாந்தாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.


பிரதமரின் சொற்படி கேட்காத இராணுவத் தளபதி ருங்மாங்கத கத்வாலை, பிரதமர் பிரசாந்தா பதவி நீக்கம் செய்தார். இதற்கு ஜனாதிபதி அனுமதி மறுத்தார். இதன் காரணமாக, பிரதமர் பதவியை பிரசாந்தா இராஜிநாமா செய்தார் .

அதன் பின்னர் கம்யூனிஸ்ட், நேபாள காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளின் கூட்டணியுடன் கம்யூனிஸ்ட் தலைவர் மாதவ் குமார் நேபாள் பிரதமரானார்.

மன்னராட்சி முடிந்த பின்னர் ஜனநாயக முறையிலான அரசமைப்பு, சட்ட முறைப்படி இன்னும் நாடாளுமன்றத்தில் தாக்கலாகவில்லை. விரைவில் புதிய அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் நீடித்தது.

குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றா விட்டால், மாதவ் குமார் நேபாள் பதவி விலக வேண்டும் என மாவோவாதிகள் நிர்ப்பந்தப்படுத்தி வந்தனர். தங்கள் தலைமையில் தேசிய அரசு அமைய வேண்டும் என்றும் மாவோவாதிகள் வற்புறுத்தினர். இதற்கு, கூட்டணியிலுள்ள சில கட்சிகள் ஒப்புக்கொள்ளவில்லை.

இதனால், நேபாளத்தில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. சுமுக நிலை ஏற்படுவதற்காக தான் பதவி விலகுவார் என கடந்த 13 மாதங்களாகப் பிரதமர் மாதவ் குமார் (வயது - 57) அறிவித்தல் விடுத்து வந்துள்ளார். எனினும், புதன்கிழமைதான் அவர் தமது பதவியை இராஜிநாமா செய்தார். இந்தத் தகவலை அவர், தொலைக்காட்சியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.



நேபாளத்தில் மாவோவாதிகளின் நெருக்கடியால் தமது பிரதமர் பதவியை இராஜிநாமா செய்த மாதவ் குமார் நேபாள், காத்மாண்டுவில் ஊடகவியலாளர்களுக்குப் பேட்டியளிக்க வந்த வேளை...!

# பிலிப்பைன்ஸில் புதிய ஜனாதிபதி பெனிக்னோ அகினோ பதவியேற்பு

மணிலா, ஜூலை 02

பிலிப்பைன்ஸில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பெனிக்னோ அகினோ, புதன்கிழமை நடைபெற்ற பதவியேற்பு விழாவில் பதவியேற்றார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அவர் பதவியேற்றுக்கொண்டார். பதவியேற்பு விழாவில் முன்னாள் ஜனாதிபதிகள் பீடல் ரமோஸ், எஸ்ட்ராடா ஆகியோர் கலந்துகொண்டனர். பதவி விலகிய அர்ரோயோ விழாவில் கலந்துகொள்ளாமல் அதற்கு முன்னதாகவே வெளியேறிவிட்டார். இந்த விழாவில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகினோ ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

பதவியேற்ற பின்னர் பேசிய அகினோ, "வறுமையை ஒழிப்பேன். தொழில் முதலீட்டுக்கான சூழலை மேம்படுத்துவேன். தெற்கில் தனிநாடு கோரி போராடும் முஸ்லிம்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பேன்'' என்று குறிப்பிட்டார்.

அர்ரோயோ ஆட்சிக்காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க ஆணைக்குழு அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

பெனிக்னோ அகினோவின் தந்தையும், தாயும் ஜனநாயகத்துக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களாவர். தந்தை அகினோ, சர்வாதிகாரி மார்க்கோஸ் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். அவர் 1983ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்பிய போது விமானநிலையத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியில் மார்க்கோஸ் ஆட்சியை இழக்க, அடுத்து நடைபெற்ற தேர்தலில் அவரது தாயார் கொராசான் ஆட்சிக்கு வந்தார்.

உலக அரங்கில்

# சீன பொழுதுபோக்கு மையத்தில் விபத்து: 6 பேர் மரணம்; 10 பேர் படுகாயம்!

பீஜிங், ஜூலை 02

சீனாவில் பொழுதுபோக்கு மையத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

ஹொங்கொங் அருகிலுள்ள ஷென்ஸேன் பகுதியில் இந்த பொழுது போக்கு மையம் அமைந்துள்ளது. இங்கு வடிவமைக்கப்பட்டுள்ள மாதிரி ரொக் கெட்டில் ஏற்பட்ட பழுது காரணமாக செவ்வாய்க்கிழமை இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இது குறித்து விபத்திலிருந்து தப்பிய நபர் ஒருவர் குறிப்பிடுகையில், "விபத்து ஏற்பட்ட சமயத்தில் திடீரென மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. வெடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து மின்னணு உபகரணங்கள் கருகுவது போன்ற மணம் வீசியது'' என்றார்.

"இதையடுத்து சுதாரித்துக் கொண்ட நான் தீயணைப்பு வீரர்கள் வருவதற்குள் மாதிரி ரொக்கெட்டின் கதவைத் திறந்து வெளியேறிவிட்டேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவித்தன.

# கடத்தப்பட்ட சிங்கப்பூர் கப்பலின் 19 மாலுமிகளும் பத்திரமாக உள்ளனர்

## நிறுவன செய்தித்தொடர்பாளர் தகவல்

பீஜிங், ஜூலை 02

ஏடன் வளைகுடா பகுதியில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட சிங்கப்பூர் கப்பலிலுள்ள மாலுமிகள் 19 பேரும் பத்திரமாக உள்ளனர். இந்த விவரம் அந்த கப்பலின் கப்டனை தொடர்பு கொண்டு பேசியபோது தெரியவந்தது என அந்த கப்பலை வாடகைக்கு அமர்த்திய கப்புல் நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் லீ ஜிங்ஷாங் தெரிவித்துள்ளார்.

கப்பல் மாலுமிகளை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், மறுபடியும் அந்த கப்பல் கெப்டனை தொடர்புகொள்ள முடியவில்லை. காரணம், அந்தக் கப்பலிலுள்ள தொலைபேசி இணைப்பு வயர்களை கொள்ளையர்கள் துண்டித்திருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நிலைமை உன்னிப்புடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது என சீன வெளியுறவு அமைச்சகம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட கோல்டன் பிளெசிங் என்னும் இந்தக் கப்பல் கோல்டன் பசிபிக் இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் என்னும் நிறுவனத்துக்குச் சொந்தமானது. இந்தக் கப்பலை சீனாவைச் சேர்ந்த ஷாங்காய் டிங்கெங் என்னும் கப்பல் நிறுவனம் வாடகைக்கு எடுத்தது. இந்தக் கப்பல் சவூதி அரேபியாவிலிருந்து இரசாயனப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இந் தியாவுக்கு புறப்பட்டது.

கப்பல் பயணம் செய்யும் நீர்வழித் தடத்தில் கொள்ளையர்களின் தாக்குதலை தவிர்க்கும் நோக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் சொந்தமான கூட்டுப்படையின் பாதுகாப்பை சீன கப்பல் நிறுவனம் கோரியிருந்தது. அதன்படி குறிப்பிட்ட தடம் வழியாக கப்பலை செலுத்தும்படி கடற்படை பாதுகாப்பு அமைப்பு யோசனை தெரிவித்திருந்தது.

அவ்வாறு கப்பல் சென்றபோது ஏடன் வளைகுடா பகுதியில் சோமாலிய கடற்கொள்ளையர்கள் அதைக் கடத்திச்சென்றுள்ளனர் எப்போது கடற்கொள்ளையர்கள் கப்பலை கடத்தினர் என்பதை தெரிந்து கொள்ள ஆய்வு நடத்தி வருகிறோம் என்றும் லீ தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சோமாலிய கடற்கொள்ளையர்களை ஒழிப்பது சுலபமான காரியம் அல்ல என்றும் சோமாலியாவில் சட்டம் ஒழுங்கை சீர்செய்தால் மட்டுமே இந்த பிரச்சினையில் நல்ல தீர்வை எதிர்பார்க்க முடியும் என்றும் சீன நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# பதிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கு வகிக்க முடியாது

## சம்பந்தன், மாவை விலகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

அனைத்துத் தமிழ்பேசும் இனத்தையும் இணைத்து தந்தை செல்வாவினால் கட்டி வளர்க்கப்பட்டு வந்த தமிழரசுக் கட்சியின் அழிவை தமிழ்பேசும் இனம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ததில் தமிழரசுக் கட்சி ஒரு போதும் பங்கு வகிக்க முடியாது.

தமிழரசுக் கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து கூட்டமைப்பாக இயங்கி வரலாம். தனிக்கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட கட்சியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்குவகிக்க முடியாது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை தமிழரசுக் கட்சிக்கு திருவாளர்கள் இரா.சம்பந்தன்,மாவை சேனாதிராசா, பொ செல்வராசா ஆகியோர் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பெரும் துரோகம் விளைவித்துள்ளார்கள். கட்சி யின் அனுமதியின்றி இவ்வாறு செயற்படுபவர்கள் தாம் வகிக்கும் கட்சி பதவிகளிலிருந்து விலக வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தனி அரசியல் கட்சியாகப் பதியப்பட்டதன் மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி அழிந்து போய்விடுமென பி.பி.சி. தமிழோசைக்கு பேட்டியளித்த புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலாளர் தெளிவாகவே கூறியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் சென்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது வேறு கட்சிகளின் சின்னங்களில் போட்டியிட்டார்கள் என்ற காரணத்தால் அவர்கள் வகித்த பதவிகளிலிருந்து நீக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல் இன்னொரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியில் இணைந்து கொண்ட இரா.சம்பந்தன்,மாவை சேனாதிராசா, பொ.செல்வராசா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவியிலிருந்து வெளியேற வேண்டும்.

சம்பந்தன், சேனாதிராசா ஆகியோர் தாம் மட்டும் நினைப்பதை கொழும்பில் செய்துவிட்டு வடக்கு, கிழக்கிற்கு வந்து கட்சியினர் மீது எதையும் திணித்து விடலாமென நினைக்கின்றார்கள். தமிழரசுக் கட்சி அழிந்துவிடும் என்ற நிலைப்பாட்டால் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்புக் காணப்படுகின்றது. எனவே சம்பந்தன், சேனாதிராசா ,செல்வராசா ஆகியோர் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தாம் வகிக்கும் பதவியிலிருந்து உடன் விலகிக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (அ)

# கூட்டமைப்பின் நேற்றைய கூட்டத்தை கிழக்கு எம்.பிக்கள் நால்வரும் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நேற்றைய கூட்டத்தை கிழக்கு மாகாணத்தின் நான்கு எம்.பிக்களும் புறக்கணித்தனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பாக தங்களுடன் கலந்தாலோசனை ஏதும் நடத்தவில்லை எனத் தெரிவித்தே அவர்கள் கூட்டத்தைப் பகிஷ்கரித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்களான ப. அரியநேத்திரன், எஸ். செல்வராசா, எஸ். யோகேஸ்வரன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பியசேன ஆகியோரே கூட்டத்தை பகிஷ்கரித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழு இந்தியாவுக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் தொடர்பாக ஆராயவே நேற்றைய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஒ-1)

## ஏழாலைக்கு பெற்றோரைப் பார்க்க

# வெளிநாட்டில் இருந்த வந்த குடும்பஸ்தர் நேற்று நடந்த விபத்தில் மரணம்

வலி.வடக்கு, ஜூலை 2

வெளிநாட்டில் இருந்து பெற்றோரைப் பார்க்க வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் ஏழாலையில் விபத்தில் மரணமானார்.

லண்டனிலிருந்து வந்த ஏழாலையைச் சேர்ந்த சண்முகநாதன் றொபின் (வயது 35) என்பவரே இவ்வாறு மரணமானார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வந்த இவர் நேற்றுப் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்து தனது நண்பருடன் ஏழாலையில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார்.

மல்லாகத்திலிருந்து ஏழாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது இலந்த கட்டிவைரவர் கோயிலுக்கு முன்பாக மரம் ஒன்றுடன் மோதி விபத்திற்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த அவரை உடனடியாகத் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது அங்கு மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது நண்பரான பொன்னுத்துரை ஜெயசிறி என்பவர் பலத்த காயங்களுடன் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

இறந்தவர் தனது மனைவி, பிள்ளைகளை லண்டனில் விட்டுத் தனியாக வந்திருந்தார் என்றும் எதிர்வரும் 12ஆம் திகதி திரும்பிச்செல்லவிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1-86)

# வடலியடைப்பு இளைஞர் ரயிலில் மோதுண்டு பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 2

வெள்ளவத்தையில் கடந்த செவ்வாய்க்கிழமை வடலியடைப்பைச் சேர்ந்த இளைஞன் ரயிலில் மோதுண்டு மரணமானார்.

வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த சற்குணநாதன் ஸ்ரீசுஜிவன் (வயது 25) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானார்.

வெள்ளவத்தை கடற்கரைக்குச் சென்று திரும்பும் போதே அவர் ரயிலில் மோதுண்டு மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் விசாரணைக்களின் பின்னர் நேற்று அவரது சொந்த இடத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. (ஒ- 1)

# எரிகாயங்களுக்கு இலக்கான இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் அங்கு மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக சாவகச்சேரிப் பொரிஸார் நீதிமன்றில் நேற்று அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து மரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பதில் நீதிவான் கணபதிப்பிள்ளையை நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம். றியால் பணித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம், புதுவீதியைச் சேர்ந்த சபாபதி பிலிப்சந்திரன் (வயது-26) என்பவரே மரணமானவரே ஆவார். (ஒ-207)

# குறுந்தூர பஸ் கட்டணத்தை 7 ரூபாவாக உயர்த்த கோரிக்கை

கொழும்பு, ஜூலை 02

குறுந்தூர பஸ் கட்டணத்தை ஆறு ரூபாவிலிருந்து ஏழு ரூபாவாக அதிகரிக்கும்படி தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் போக்குவரத்து அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பஸ் உரிமையாளர் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் அரசுடன் பேச்சு நடத்தி பஸ் கட்டணங்களில் மாற்றத்தைக் கொண்டுவருவது வழமையாகும்.

தமது கோரிக்கைக்கு ஏழு நாட்களுக்குள் சாதகமான பதிலைத்தராவிட்டால் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அது எச்சரித்துள்ளது. (சி)

# வடக்கு கிழக்கில் இராணுவ....

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டவர்களாக அம்மக்கள் இருந்தனர். அதேபோன்று நீரிறைக்கும் இயந்திரங்கள், மருந்து தெளிக்கும் கருவிகள் உள்ளிட்ட பல விவசாய உபகரணங்களும் அவர்களிடம் இருந்தன. ஆனால் இன்று எல்லாம் இழந்த நிலையில் தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்த முடியாத நிலையில் இந்த மக்கள் இருக்கின்றனர். இவற்றின் ஒருபகுதியையாவது ஈடேற்றுவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும்.

## முழத்துக்கு முழம் யுத்த வெற்றிச் சின்னங்கள்

இலங்கை அரசு இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுவிட்டார்கள் என்றும் இன்னமும் சிறிய தொகையினரே எஞ்சியுள்ளனர் என்றும் உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்து வருகின்றது. உண்மையாகவே மீள்குடியேற்றம் என்பதன் பொருள் என்ன? முகாம்களிலிருந்த மக்களை இடைத்தங்கல் முகாம்களுக்குள் வைத்திருப்பதும், தற்காலிகக் கொட்டில்களில் வைத்திருப்பதும், அவர்களுக்கு எந்தவிதமான உதவிகளுமின்றி அலையவிடுவதும்தான் உங்களது மொழியில் மீள்குடியேற்றமா?

உங்களிடம் மீள்குடியேற்றம் தொடர்பாக சரியான திட்டங்கள் கிடையா. நான் ஏற்கனவே கூறியதுபோன்று பாடசாலைகள் இன்னமும் உடைந்தநிலையிலேயே உள்ளன. அதேபோன்று பாடசாலைகள் இன்னமும் இராணுவ முகாம்களாகவே இருக்கின்றன. வைத்தியசாலைகள் செயற்பட முடியாத நிலையில் உள்ளன. சந்தைகள் துவம்சம் செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றன. கலாசார மண்டபங்கள் தரைமட்டமாக்கப்பட்டு அங்கு இராணுவத் தூபிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முழத்துக்கு முழம் யுத்த வெற்றியின் சின்னங்களே உருவாக்கப்பட்டு வருகின்ன்றன. தனியார் நிலங்கள் உட்பட பாரிய நிலங்கள் யாவும் இராணுவக் கட்டுமானங்களுக்காகப் பறித்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில்தான் உங்களது மீள்குடியேற்றம் அமைந்திருக்கின்றது.

## வடக்கில் நீதித் துறையில் தலையீடு

வடக்கு - கிழக்கில் இருந்த கடத்தல், கப்பம் வாங்குதல், கொலை, கொள்ளை போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அங்கிருந்த நீதிபதிகள் சிலர் துணிச்சலுடன் முயற்சி மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள் யாவரும் இன்று பல்வேறுபட்ட இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பல்வேறுபட்ட வழக்குகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக எடுக்கப்படக் கூடா என நீதிமன்றப் பதிவாளர்களும் சில சமயங்களில் நீதிவான்களும்கூட மிரட்டப்படுகின்றனர் என அறியப்படுகின்றது. இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நேர்மையோடும், துணிவோடும் நீதித்துறையில் செயற்படும் நீதிபதிகளும்கூட மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதுமாத்திரமல்ல வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகக் கட்டமைப்புகளில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள், அங்கிருக்கின்ற ஆளுநர்கள் விரும்பியவாறும் இராணுவத் தளபதிகள் விரும்பியவாறும் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உண்மைக்கும் நேர்மைக்கும் விரோதமாக அரசின் கபடத்தனமான நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவதற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

தங்களின் நிர்ப்பந்தத்திற்குப் பணியாவிட்டால் அவர்கள் மிகமோசமான வழிகளில் பழிவாங்கப்படுகிறார்கள். இவையெல்லாம் ஒரு ஆரோக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கோ இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கோ ஒருநாளும் உந்துசக்தியாக இருக்காது. மாறாக நம்பிக்கையீனங்களும் இடைவெளிகளும்தான் அதிகரிக்கும்.

மீள்குடியேற்றத்துவதற்கென மெனிக்பாம் முகாம்களிருந்து கொண்டுவரப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பல மாதங்களாக தங்க வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த 1100 இற்கும் மேற்பட்ட மக்களை மீண்டும் தங்கள் சொந்தக் காணிகளுக்கு அனுப்ப மறுத்து வருகிறீர்கள். இராணுவம் இதற்குத் தடையாக இருக்கிறது என நாங்கள் அறிகின்றோம்.

ஆனால் உங்கள் இராணுவத் தளபதி பொசன் பண்டிகையின்பொழுது கண்டி மகாநாயக்கர்களிடம் ஆசிவாங்கச் சென்ற வேளையில் வடக்கு - கிழக்கில் தாங்கள் நிரந்தர இராணுவக் குடியிருப்புகளை நிறுவி வருகின்றனர் எனவும் அங்கு இராணுவத்தினர் குடும்பத்துடன் குடியேற்றப்படுவார்கள் என்றும் அவர்களுக்கு வயல்காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக இருக்கக்கூடிய ஒரு சில மாவட்டங்களில் அவர்களைச் சிறுபான்மையினராக ஆக்கி படிப்படியாக அவர்களை இல்லாதொழிப்பது என்ற அரசின் நிகழ்ச்சி நிரலை இராணுவத் தளபதியே பட்டவர்த்தனமாகப் போட்டுடைத்துள்ளார்.

## காங்கேசன்துறை சுண்ணாம்புக்கல் தென்பகுதிக்கு

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்காக அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் முன்னர் சுண்ணாம்புக் கல் அகழப்பட்டு வந்தது. ஆனால் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மூடப்பட்டு 20ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும்கூட அங்கிருந்த சுண்ணாம்புக்கல் மிகப் பாரிய அளவில் அகழப்பட்டு தென்பகுதிக்கு அனுப்பப்படுகின்றது.

கடல்நீர் நாட்டுக்குள் புகுமளவிற்கு இந்த அகழ்வுவேலை இன்றும் நடைபெற்று வருகின்றது. இவற்றை நிறுத்தும்படி கோரிக்கைகள் விடுத்தும்கூட இவை இன்னமும் நிறுத்தப்படவில்லை. இந்தச் சுண்ணாம்புக்கல் யாரால் என்ன தேவைக்காக அகழப்படுகின்றது என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இந்த நாடாளுமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இப்படியான அகழ்விற்கு சூழல் பாதுகாப்புச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா என்பதை இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமன்றி, இந்த அகழ்வுப் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளதா? அல்லது தனிநபர்கள் மேற்கொண்டுள்ளனரா என்பதையும் இந்த சுண்ணாம்புக்கல்லில் இருந்து வருகின்ற வருமானம் எங்கு சென்றடைகின்றது என்பதையும் இச்சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

## மகேஸ்வரி நிறுவனம் கொள்ளை லாபம்

அதேசமயம் யாழ். மாவட்டத்தில் மணல் அகழ்வு வேலை மகேஸ்வரி மன்றம் என்னும் சட்டபூர்வமற்ற நிறுவனத்திடம் முழுமையாக சுரங்க மற்றும் கனிமவளத் திணைக்களத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் மணல் பெற்றுக்கொள்ள கட்டட நிர்மாணத்தில் ஈடுபட்டிருப்போர் மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த மகேஸ்வரி நிறுவனமானது பலநூறுகோடி ரூபாவை இந்த மணல் வியாபாரத்திலிருந்து கொள்ளை இலாபமாகப் பெற்றுக்கொள்கின்றது.

சட்டபூர்வமற்ற இந்த மகேஸ்வரி நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் மணல் அகழ்விற்கான உரிமம் வழங்கப்பட்டது என்பதையும் இவர்கள் பெற்றுக்கொண்ட சட்டபூர்வமான மற்றும் சட்டபூர்வமற்ற நிதி தொடர்பான கணக்கு வழக்குகள் யாராலாவது சரிபார்க்கப்படுகின்றனவா அல்லது அதுதொடர்பான ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும் சம்பந்தபட்ட அமைச்சர்கள் இந்த சபைக்கும் தமிழ் மக்களுக்கும் அறியப்படுத்த வேண்டும். இப்படியான சட்டபூர்வமற்ற செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மக்கள் நேர்மையான முறையில் தமது கட்டட நிர்மாணங்களுக்கு மணலை பெற்றுக்கொள்ள ஆக்கபூர்வமான மாற்றுவழிகள் உருவாக்கப்பட வேண்டும்.

- இப்படி சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறினார்.

# அச்சமின்றி வந்து முதலீடு செய்யுங்கள்

## உக்கிரேன் வர்த்தகர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஜூலை 02

உலகத்திலேயே முதலீடு செய்யக் கூடிய நாடுகளில் இலங்கை மிகவும் சிறந்தது. துறைமுகங்கள், போக்குவரத்து, மின்சக்தி, வர்த்தகம் போன்ற துறைகள் இங்கு சிறப்பாக இயங்குகின்றன. எனவே, அச்சமின்றி இலங்கைக்கு வந்து முதலீடு செய்யுங்கள் - இப்படி உக்ரேன் நாட்டு வர்த்தக சமூகத்திடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதி மூன்று நாள்கள் விஜயம் மேற்கொண்டு உக்ரேன் சென்றுள்ளார். நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி உக்ரேன் நாட்டு வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்தார்.

முழு நாட்டையும் உடனடியாக ஒன்றிணைக்கக்கூடிய வீதி அபிவிருத்தி இப்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. துறைமுகங்கள் நிர்மாணம் போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் சர்வதேச வர்த்தகத்தில் இலங்கை உயர்ந்த சேவைகளை வழங்கும் நிலையமாக மாறுவதற்கு நீண்ட காலம் ஆகாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இக்காரணங்களால் இலங்கைக்கும் உக்ரேனுக்கும் இடையிலான பொருளாதாரத் தொடர்புகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஓ-சி)

## தமிழர் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது குறித்துக் கேட்டபோது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்கட்சிகளின் ஒற்றுமையைக் கொண்டு மக்களின் உரிமைகள் வெல்லப்பட வேண்டும் என்பது நியாயமானதே. அந்த ஒற்றுமை என்ன காரணத்துக்கு தேவை என்பதை ஆராய வேண்டும்.

நியாயமான உரிமைகள் வெல்வதற்கு தமிழ் மக்கள் எமக்கு ஆணை தந்துள்ளார்கள். 14 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.மக்கள் தந்த ஆணைக்கு எதிராக நாம் செயற்பட முடியாது.

அமைச்சர் டக்ளஸ்சோ வேறு யாருமோ தீர்வு தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தினால் பேசி முடிவு செய்யலாம்.அதைவிடுத்து சுயநலப் போக்கில் செயற்பட்டால் மக்களுக்கு நன்மை கிடையாது.

அமைச்சர் டக்ளஸ் சம்பந்தனுடனும் என்னுடனும் மாவை சேனாதிராசாவிடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஆனால் தமது கொள்கை தொடர்பாக தீர்க்கமான, தெளிவான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. எம்முடன் இது வரையும் அவர்கள் விரிவாகக் கலந்துரையாடவில்லை- என்றார். (ஓ-1)

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் தற்போதைய நிலைமை, வன்னி மக்களின் மீளக் குடியமர்வு ஆகியன தொடர்பாகவும் பேச விருக்கின்றோம்.

வன்னி மக்களுக்காக 50ஆயிரம் வீடுகள் அமைக்கவும் 500 ட்ராக்டர்கள் வழங்கவும் விவசாய உபகரணங்கள் வழங்கவும் சிறு கைத்தொழில் முயற்சிக்கு உதவவும் இந்தியா முன்வந்து அவை தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளது. அவற்றை விரைவுபடுத்துவது குறித்துப் பேச்சுக்கள் நடத்துவோம்.

பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்பட வில்லை. எனினும் அவருக்கு நேரம் இருக்கு மாயின் அவரைச் சந்திப்போம். எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று சுரேஷ் கூறினார்.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இப்பேச்சு இன்று காலை 8.30 மணிக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் (ஈ.பி.டி.பி.) தலைமையகத்தில் இடம்பெற இருக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

கிழக்குமாகாண முதலமைச்சரும்,தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொள்ள முடியாமல் இருந்ததன் காரணமாகவே பேச்சுகள் நேற்று நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான முதலாவது பேச்சு கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்தப் பேச்சுகளில் ஈ.பி.டி.பி., புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி), தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமல் வீரவன்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கும்வரை இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிடு மாறும் அங்குள்ள ஊழியர்களைத் தடுத்து வைக்குமாறும் அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்றுமுன்தினம் அறைகூவல் விடுத்திருந்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் கருத்து வெளியாகி ஒருசிலமணி நேரத்தி லேயே இது அரசின் நிலைப்பாடு இல்லை எனவும், அமைச்சர் விமல் வீரவன்ஸவின் சொந்தக் கருத்து அதுவென் றும் அரசு தெரிவித்தது.

விமல் வீரவன்ஸவின் இந்தக் கருத்துக் குறித்து ஐ.நா. சபையின் பாதுகாப்பு அதி காரிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.(அ-சி)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றத்துடனும் திரும்பினர்.

திருமதி இமெல்டா சுகுமாரின் பதவியேற்பு திடீரென இரத்தானது தொடர்பாக உதயன் செய்தியாளர் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது-

யாழ். மாவட்ட அரச அதிபராக இன்று (வியாழன்) காலை 9 மணியளவில் பதவியேற்கவிருந்தேன். இருப்பினும் புதன் கிழமை இரவு 10 மணியளவில் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்னுடன் தொடர்பு கொண்டு மறு அறிவித்தல் வரை யாழ். மாவட்ட அரச அதிபராக பொறு பேற்க வேண்டாம் என்று அறிவுறுத்தலை வழங்கியிருந்தார்.

இதன் நிமித்தம் தாம் நேற்று பதவியேற்கும் நிகழ்வுக்குச் சமுகமளிக்க வில்லையென்று தெரிவித்தார்.

யாழ்..மாவட்ட அரச அதிபராக திருமதி இமெல்டா சுகுமாரும்,முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராக நா.வேதநாயகனும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டு அது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் நேற்று வெளியாகியிருந்த நிலையில் திடீரென இத்தகைய பதவியேற்பு நிகழ்வுகள் இடம்பெறாமல் போனது பொதுமக்கள் மற்றும் அரச-அதிகாரிகள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.அத்துடன் யாழ். மாவட்ட அரச அதிபர் யார் என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இது விடயம் தொடர்பாக தற்போதைய அரச அதிபர் கே.கணேஷிடம் கேட்ட போது-

இத்தகைய பதவியேற்புகள் தொடர்பாக தமக்கு எந்த வித மான தகவல்க ளும் தெரியாது என்று தெரிவித்தார்.

இதேவேளை- 50 வருட கால அரச சேவைக ளைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறுகின்ற யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷுக்கு யாழ்.செயலக நலன்புரி சங்கம் நேற்று முன்தினம் பிரிவுபசார நிகழ்வை நடத் தியிருந்தமை தெரிந் ததே.

ஒரு மாவட்டத்தில் தலைமை அரச அதிகாரி யான அரசாங்க அதிப ரின் நியமனத்தில் நினைவுக்கு எட்டிய காலத்தில் இப்படி ஒரு குளறுபடி நடந்ததில்லை என்று அதிகாரிகள் தரப்பிலும் மக்கள் தரப்பிலும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - அரச அதிபர்கள் இடமாற்றங்கள் தொடர்பாக இன்னும் ஓரிரு தினங்களில் தீர்க்கமான முடிவு அறிவிக்கப்படும் என சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவலகள் அமைச்சுச் செயலர் அறிவித்துள்ளார் என தெரிவிக்கப் பட்டது. (அ-9)

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்துவதற்கு இது மிகவும் பொருத்தமான தருணமாகும்.

அதேவேளை, யுத்தத்தின் இறுதி நாள்களில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் - இப்படி பான் கீ - மூன் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் பாலமுரளி

நயினாதீவு, 8ஆம் வட்டாரம், மீனாட்சி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பாலமுரளி நேற்று (01.07.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. திருமதி கந்தசாமி தம்பதியரின் அன்பு மருமகனும் லோகவதனியின் அன்புக் கணவரும் தர்சன், யதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ப. சிவராசா,
(அதிபர் - நாயன்மார்க்கட்டு,
மகேஸ்வரி வித்தியாலயம்)
40/1, புதுவீதி, கொய்யாத்தோட்டம்.

தகவல் :
சகோதரர்கள்


**வேலை வாய்ப்பு**

புலோலியில் இயங்கவிருக்கும் கொங்கிறீற் தொழிற்சாலைக்கு மாதாந்த சம்பள அடிப்படையில் வேலை செய்வதற்குக் கூலியாள்களும், அலுவலகத்தை நிர்வகிக்கக் கூடிய பெண் ஊழியரும் (கணனி, கணக்கியல் அறிவுள்ளவர்கள்) தேவை.

விவரங்களுக்கு :-
0777916936

**கன்ரர் வாகனம் விற்பனைக்கு**

52-XXXX இலக்கமுடைய டபிள் கப் (Double Cap IZUZU Canter) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :-
பிரகாஸ் எலக்றோணிக்,
பருத்தித்துறை. T.P.0773222837

Universal, Kantharmadam, Sat.,Sun. 4 pm. ஆரம்பம்-நாளை

Niru, Kondavil, Sat.,Sun 6 am. ஆரம்பம்-நாளை

கணக்கீடு A/L-2011
பங்குடமை S. தவா

New Science Hall, Jaffna, Sat.,Sun 1 pm. ஆரம்பம்-நாளை

Shamrock, Eachchamoddai, Mon.,Thurs, Fri. 4 pm. ஆரம்பம்-திங்கள்

தனிப்பாட அனுமதி
"அனுமதி வரையறுக்கப்பட்டது."

**THE SCIENCE CORNER**
**Clock Tower Lane, Jaffna.**

PHYSICS
பௌதிகவியல்
ஆரம்பம் - 03/07/2010
Sat., Sun.
5.00 p.m. to 6.00 p.m.
By :- Senthil

BIOLOGY-2012
(English Medium)
CELL DIVISION And TISSUES
Commence on - 03/07/10
Sat., Sun.
4.30 p.m to 5.30 p.m.
By :- Kugananthan

**எங்குமில்லாத விலைக்கழிவில் வாங்கிடுவீர் கணனிகளை......**

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD

| | processor | M.Board | Ram | H.D.D | DVD Writer | Monitor LCD/LED | Casing/Key/ Mouse | Price |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2.7 DUAL CORE | | | | | | | | |
| NIT 1 | 2.7 Dual | Asus 31 | 1GB King(800) | 320GB Sam | 24x Sam | 16'AOC/16A Open | Power logic | 42,900 Rs |
| NIT 2 | 2.7 Dual | Foxconn 41 | 1GB King(800) | 320GB Sam | 24x Sam | 16'ASUS/16A SAM | Power logic | 44,500 Rs |
| NIT 3 | 2.7 Dual | Intel 41 | 1GB King(800) | 320GB Sam | 24x Sam | 6'AOC/16A Open | Power logic | 45,500 Rs |
| 2.93C 2DUO | | | | | | | | |
| NIT 4 | 2.93C2D | Intel 41 | 2GB King(800) | 500GB Sam | 24x Lite on | 19'DELL/19 ACCER | Power logic | 59,000 Rs |
| NIT 5 | 2.93C2D | Asus 31 | 2GB King(800) | 500GB Sam | 24x Lite on | 19'DELL/19 ACCE | Power logic | 57,800 Rs |
| NIT 6 | 2.93C2D | Foxconn 41 | 2GB King(800) | 500GB Sam | 24x Lite on | 19'DELL/19 ACCER | Power logic | 58,300 Rs |
| 1.66 ENTRY | | | | | | | | |
| NIT 7 | 1.66ATOM | Intel 41 | 1GB King(800) | 40GB W.D | 24x Sam | 16'AOC/16A Open | Power logic | 34,000 Rs |
| NIT 8 | 1.66ATOM | Intel 41 | 1GB King(800) | 160GB Sam | 24x Sam | 16'AOC/16A Open | Power logic | 36,000 Rs |
| BRANDEDPC'S | | | | | | | | |
| HP 2000MT PRO | 2.7 Dual | Intel 45 | 31GB King(800 | 20GB Sam | hp24x Sam | HP19' | HP TOWER | 58,000 Rs |
| SLIM TOP | 1.66ATOM | Intel 41 | 1GB King(800) | 160GB Sam | 24x Slim | 16'AOC | SLIM MINI | 37,000 Rs |

NALINஇன் காட்சியறையில்.....
★ புத்தம் புதிய வரவுகளாய் புதியவடிவங்களில் Flashdrive/Subwoofer/Head Phone/LCD'S/PC casing மற்றும் பல.... ★ அனைத்துக் கணனிகளிற்கும் 3வருட உத்தரவாதம் அத்துடன் One to One Warranty உடன் தரப்படும்
★ சிறந்த வாடிக்கையாளர் சேவை எமது பலம். ★ நளின் என்றால் என்றும் சிறந்த கணனிகள், சேவைகள்.
★12 மாதத்தவணை அடிப்படையில் கடன்அட்டை மூலம் எம்மிடம் கணனியினைக் கொள்வனவு செய்யமுடியும்.

NALIN Information Technologies Pvt Ltd

HP, CANON, SAMSUNG, XEROX GENIUNE AVAILABLE HERE
195/4,பரமேஸ்வராச் சந்தி, யாழ். TP: 021 222 1166, 0777667974


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.